

கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI ● 14.03.2010 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்



நெல்லையப்பர் ஆட்சி!

ஆதிச்சநல்லூர் அதிசயம்!

ஊரெங்கும் பறவைக்கூடு!

என்னவாச்சு எம்.எல்.ஏ. வாக்குறுதி?

கவிதைகள் தந்த கடையம்!

திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல்-I

www.cityunionbank.com

என்னதான்
கரண்ட் அக்கவுண்டோ?
எல்லாத்துக்கும் சர்வீஸ் சார்ஜ்.
நெனச்சாலே ஷாக் அடிக்குது.



எதுக்கு கஷ்டப்படுறீங்க.
என்னை மாதிரி நீங்களும்
சிட்டி யூனியன் பாங்க்
CUB கிளாசிக் பிளஸ்
கரண்ட் அக்கவுண்ட் வெச்சுக்கோங்க.
எந்த branch-லேயும்
அளவில்லாம பணம் கட்டலாம்.
செலவில்லாம
டிரான்ஸ்பர் பண்ணலாம்...
நோ சர்வீஸ் சார்ஜ்.



- **கட்டணம் இல்லாமல் நாளொன்றுக்கு ரூ.2 லட்சம் வரையிலான டிமாண்ட் டிராஃப்ட்டுகள் வழங்கப்படும்.**
- **RTGSக்கு ரூ.5 லட்சம் வரை ரூ.25/- மட்டுமே.**
- **மல்டிசிட்டி செக் புக் இலவசம்.**

*நிபந்தனைகளுக்குட்பட்டது

சிட்டி யூனியன் பாங்க் - உசியான பேங்க் ராசியான பேங்க்

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

சிட்டி யூனியன் பாங்க் லிட்.

பதிவு அலுவலகம் : கும்பகோணம் - 612 001, தமிழ்நாடு.
போன் : 0435-2402322 ஃபேக்ஸ் : 0435-2431746 E-mail : rpm@cityunionbank.com
Website : http://www.cityunionbank.com SMS : "CUBDEPOSIT" to 9900654321

எங்களது அனைத்து வங்கிக் கிளைகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள கிளையை இன்றே தொடர்பு கொள்வீர்

- Any Branch Banking
- Internet Banking
- ATMs
- Electronic Money Transfers
- VISA Debit Card
- SMS Banking



கல்கி
அடுத்த இதழ்...
திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல் – II
நனவாகுமா நாங்குநேரி டைடல்பார்க்?
நலம் பயக்கும் நவதிருப்பதி!
நெல்லையின் தொல்லைகள்!
கேரளாவோடு போறோம்!
வாழ்கிறார் வ.உ.சி.!
நொறுங்கும் அப்பளத்தொழில்!
பக்கத்துக்குப் பக்கம் சுவாரஸ்யம்...
அட்டை டு அட்டை அற்புதம்...
திருநெல்வேலி மாவட்டச் செய்திகள் : கதிர்பாரதி. ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

நெல்லை மாவட்டம் கீழ்க் கரையில் அமைந்த கொற்கைத் துறைமுகம் வழியாக சங்க காலம் முதல் கிரேக்க, ரோம் கடல் வணிகம் நடந்ததை கிரேக்க ஆசிரியர் ஸ்டிரோபோ, கிரேக்க வணிகர் பெரிபிளஸ், புவியியல் ஆசிரியர் டோலமி ஆகியோர் தங்கள் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.


பாண்டிய மன்னர்கள், கொற்கைத் துறைமுகம் வழியாக அரேபியக் குதிரைகளை இறக்குமதி செய்ததற்கான ஆதாரத்தை, திருப்புடைமருதூர் கோயில் கோபுரத்தின் இரண்டாம் மாடியில் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் இன்றும் காணலாம்.

திருஞான சம்பந்தர் தமது தேவாரத்தில் நெல்லைக்குப் பதினொரு பாடல்கள் பாடியுள்ளார். ''திக்கெல்லாம் புகழுறுந் திருநெல்வேலியுறை செல்வர் தாமே'' என அப்பாடல்கள் அனைத்திலும் ஈற்றடியாக அமைத்துப் பாடியிருக்கிறார்.

பூலித்தேவன். 1726-ல் நெற்கட்டுஞ் சேவலில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவன். இந்திய விடுதலைப் போரைத் தொடங்கிய முதல் வீரன்.

தமிழகத்தில் தோன்றிய ஸ்தல புரா

பூலித் தேவன் பூமி!



திருத்தம்

கல்கி (28.2.2010) 'மலேசியா ஸ்பெஷலில்' 'சினிமா டிக்கெட் கிழித்த சில்க் சக்கரவர்த்தி' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் மலேசியா காயத்ரி சில்க்ஸின் சகோதர நிறுவனம் 'சென்னை போத்தீஸ்' என்று தவறுதலாக அச்சாகி இருக்கிறது. அதை **'சென்னை போட்டீஸ்'** என்று திருத்தி வாசிக்கவும். சென்னையில் உள்ள போத்தீஸ் நிறுவனத்துக்கும் மலேசியாவில் உள்ள **'சென்னை போட்டீஸ்'** நிறுவனத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. தவறுக்கு வருந்துகிறோம்.

(ஆசிரியர், கல்கி)

ணங்களில் மிகுதியான பாடல்களைக் கொண்டது. 'திருநெல்வேலி ஸ்தல புராணம்' பத்தொன்பதாம் நூற்றாண்டில் நெல்லையப்ப கவிராயர் இயற்றிய இப்புராணம் 120 படலங்களையும், 6892 பாடல்களையும் உள்ளடக்கியது.

உடன் கட்டை ஏறிய பெண்களைத் தீப்பாய்ச்சியம்மன், தீப்பொறிஞ்சம்மன், ஆனந்தாயி அம்மன்... எனப் பல பெயர்களில் வழிபடுகின்றனர். அப்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் எண்பத்து நான்கு தீப்பாச்சியம்மன் கோயில்கள் உள்ளன.

திருநெல்வேலியில் அன்னி பெசன்ட் அம்மையார் கலந்துகொண்ட கூட்டம் நடந்தது. அன்னி பெசன்ட் தங்கியிருந்த இடத்திலிருந்து கூட்டம் நடக்கும் இடம் ஒரு மைல் தூரம். நடந்து போனால் இருபத்தைந்து நிமிடங்கள். காரில் போனால் ஏழு நிமிடங்கள். எட்டு மணிக்குக் கூட்டம் ஆரம்பம். ஆனால் 7.35 வரை கார் வராததால் நடந்தே போனார். ''கூட்டத்துக்குத் தாமதமாகப் போவது மன்னிக்கமுடியாத குற்றம். மற்றவர்களின் நேரத்தை வீணடிக்க நமக்கு உரிமையில்லை'' என்றாராம் அன்னி பெசன்ட்.

- அ.யாழினி பர்வதம்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்... வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : **ரூ.500/-**
வெளிநாடு : **ரூ.3,800/-**


கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



* பாலகிருஷ்ணன்



* கலசலிங்கம்



* ஆனந்தன்

"காமராஜர் ஆட்சிக் காலத்துல தொடங்கி வைக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகள் மொத்தம் பதின்மூன்று. அதில் ஒன்று திருநெல்வேலி பேட்டையில் இருக்கும் தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை. இதில் வேலை பார்த்த கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கானோர், இன்று அன்றாடக் கூலி வேலைக்கும் வீட்டு வேலைக்கும் சென்றுகொண்டிருக்கிற அவலம் தொடர்கிறது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வின் சார்பில் போட்டியிட்டு தற்போது திருநெல்வேலி தொகுதியின் எம்.எல்.ஏ.வாக இருக்கும் மாலைராஜா, 'என்னை நீங்கள் ஜெயிக்க வைத்தால், அடுத்த இரண்டாவது மாதத்தில் கூட்டுறவு நூற்பாலையைத் திறப்பதற்கு கலைஞரிடம் பேசி ஏற்பாடு செய்வேன்' என்று வாக்குறுதியும் கொடுத்திருக்கிறார். இதோ அவரும் ஜெயித்தாயிற்று. ஆண்டுகளும் நான்கைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கின்றன. வாக்குறுதி காற்றில் பறந்து போச்சு. தொழிலாளர்கள் வயித்துல மண்ணு விழுந்ததுதான் மிச்சம்" என்கிறார் வேலையிழந்த தொழிலாளர்களில் சங்கப் பொறுப்பிலிருந்த நல்லபெருமாள்.

"நான் எண்பத்திரெண்டாவது வருஷம் தேசியக் கூட்டுறவு நூற்பாலையில் வேலைக்குச் சேர்ந்தேன். அப்ப எனக்கு ஒருநாள் சம்பளம் மூணு ரூபாய். கிட்டத்தட்ட இருபத்தோரு வருஷமா வேலை பார்த்திருக்கேன். ஆலையை 2003- ஆம் வருஷம் இழுத்து மூடுனாங்க. அப்ப நான் வாங்குன மாதச் சம்பளம் ரூபாய் 4000. ரொம்பக் கௌரவமா அந்தத் தொகையில வாழ்ந்துக்கிட்டிருந்தோம். ஆனால், இப்ப வாட்ச்மேன் வேலைக்குப் போறேன். தேசிய

"கோடிக் கணக்கில் மதிப்புள்ள நூற்பாலை மெஷின்கள் துருப்பிடித்து வீணாகும் நிலையில் இருக்கின்றன!"

என்னவாச்சு எம்.எல்.ஏ. வாக்குறுதி?



✱ வேலாயுதம்!

நூற்பாலையை மூடினதும் வாழ்க்கையோட நெருக்கடி எங்களை தெருவுல நிக்க வெச்சுடுச்சு'' என்கிறார் கலாசலிங்கம்.

ரஸ்னா, பால் பாக்கெட்டை வீடுவீடாகக் கொண்டுபோய் விற்கும் ஆனந்தன் கூறும்போது, ''ஆசையைக் காட்டி மோசம் பண்ணிட்டாங்க ஸார். அரசாங்கம் மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களைத்தான் செயல்படுத்துவாங்க. எங்களையெல்லாம் தெருவுல நிக்க வெச்சுட்டாங்க. எம்.ஜி.ஆர்., தேசிய நூற்பாலையோட சேர்த்து டையிங் யூனிட்டையும் ஆரம்பிச்சு விட்டார். இப்போ எல்லாம் சேர்ந்து 'அம்போ'ன்னு கிடக்கு. அந்த நூற்பாலையைக் கடந்து போகும்போதெல்லாம், துக்கம் எங்க தொண்டையை அடைக்குது'' என்கிறார்.

பாலகிருஷ்ணன் என்பவரும், ''தொழிலாளியாக வேலைக்குச் சேர்ந்து நூல் நூற்பவராகப் பணி உயர்வு அடையும்போது ஆலையை மூடிட்டாங்க'' என்று வேதனைப்படுகிறார்.

''நெல்லை, பேட்டையிலிருக்கிற நூற்பாலையை இப்பவும் எடுத்து நடத்துறதுக்குச் சில தனியார் நிறுவனங்கள் தயாரா இருக்காங்க. ஆனா, என்ன காரணமோ தெரியலை. அரசாங்கம் கண்டுக்க மாட்டேங்குது. 'நான் எம்.எல்.ஏ.வானால் திறந்திடுவேன்'னு சொன்ன மாலைராஜாவோட வாக்குறுதி என்னவாச்சுன்னு தெரியலை. இப்படியே விட்டா ஆலையில இருக்கிற கோடிக்கணக்கான மெஷின்கள் துருப்பிடிச்சு ஒண்ணுமில்லாமப் போயிடும். இப்பவே பாதி மெஷின்களைக் கழற்றி விற்க ஆரம்பிச்சுட்டாங்க'' என்று அதிரவைக்கிறார் அ.தி.மு.க.வின் கவுன்சிலர்களில் ஒருவரான வேலாயுதம்.

வாசகர் யோசனை:

ஸ்ரீனிவாசன், நெல்லை

குலதெய்வம் கோயிலுக்கு மொட்டை போடக் கிளம்பிக்கொண்டிருந்த, நெல்லை, வேலப்ப நாடாரூர் மரைன் என்ஜினியர் மாணிக்கத்தைச் சந்தித்தோம். 'மொட்டை போடறது ஒரு மேட்டரா'ன்னு கேட்கறீங்களா? சோமாலியா கடற்கொள்ளையர்கள் கிட்ட மாணிக்கத்தைப் போல நீங்களும் பணையக் கைதியா மாட்டி, மூன்றரை மாசம் உங்க குடும்பத்துல ஒருத்தர் கூடவும் தொடர்புல இல்லாம இருந்து, குடும்பத்துல இருக்கறவங்களைப் பார்ப்போமா... மாட்டோமான்னு உள்ளுக்குள்ளே புழுங்கிக் கிடந்து, எதிர்பாராத நேரத்துல ரிலீஸ் ஆனீங்கன்னா, 'உயிர் காப்பாத்திக் குடுத்தது நீதான் சாமின்னு' குலதெய்வத்துக்கு மொட்டை போடக் கிளம்பிடுவீங்க. கடற்கொள்ளையர்களிடம் மாட்டிக்கொண்ட திக்திக் அனுபவத்தை இன்னும் திகில் விலகாத பயத்தோடு விவரிக்கிறார் மும்பை அலிகார் கப்பலில் மரைன் என்ஜினியராக வேலை பார்க்கும் மாணிக்கம்.

''ரஷ்யாவிலேர்ந்து தென்னாப்பிரிக்காவுக்குக் கோதுமை ஏத்திக்கிட்டுக் கிளம்பி மூணு நாள் ஓடிருச்சு. அப்ப நான் டியூட்டில இருந்தேன். அக்டோபர் 22, காலையில ஒன்பது மணி இருக்கும். கப்பல் 10 நாட்டிகல் வேகத்துல போய்க்கிட்டிருந்தது. திடீர்னு கப்பலைச் சுத்தி ஃபயர் ஆகற சத்தம் கேட்குது. என்னமோ ஏதோன்னு ஓடிப்போய் பார்த்தா, சோமாலியக் கடற் கொள்ளையர்கள். ஆறு பேர் இருப்பாங்க. கையில ஏ.கே.47, ராக்கெட் லாஞ்சர், லேப்டாப்... எல்லாம் வைச்சுருக்காங்க. அந்தக் கப்பல்ல என்னையும் சேர்த்து மொத்தம் 26 பேர். அதுல 24 பேர் இந்தியர்கள். தமிழ் நாட்டுலேர்ந்து நானும், தூத்துக்குடியைச் சார்ந்த விஜயகணேஷும் இருந்தோம். கேப்டன், ''எங்களை ஒண்ணும் பண்ணிடாதீங்க''ன்னு கெஞ்சினார். ''உங்களை நாங்க ஒண்ணும் பண்ண மாட்டோம்''னு ஒருத்தன் ஆங்கிலத்துல சொன்னான். எல்லாரையும் ஒரு ரூம்ல அடைச்சு வெச்சுட்டாங்க. நேவிகேஷனுக்காக, கேப்டனையும், என்ஜினியர்ங்கறதால என்னையும், முறையே மேல் மற்றும் கீழ் தளத்துல விட்டுட்டாங்க'' என்பவரின் முகத்தில் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள்.

''பாட்டிலில்தான் யூரின் போனோம். ரூம் வாசல்லேயே ஏ.கே.47கன்னோட ஒருத்தன் உக்கார்ந்திருப்பான். ஆனா, ஒருத்தரையும் அடிக்கலே, துன்புறுத்தலே. அப்பப்ப ஃபயர் பண்ணிப் பயமுறுத்துவாங்க. முதல் பதினைஞ்சு நாள் ரொம்பக் கஷ்டப்படுத்துனாங்க. அந்த ரூமைவிட்டு ஆட்கள் எங்கேயும் போகாம அடைஞ்சு கிடந்தாங்க. அப்பப்ப எங்க கம்பெனிகளோட டீலிங் நடக்கும். ஹெலிகாப்டர் மூலமாகப் பணம் வரும். நாங்க கடத்தப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டு மீரட் வாஜித் என்கிற மாலுமியோட அம்மா இறந்துட்டாங்க. அப்பதான் முதன்முதலா வீட்டைப் பத்தின பயம் ஆரம்பிச்சது.



● குடும்பத்தினருடன்





❋ அம்மாவுடன்...

நோகடித்த 111 நாட்கள்!



ஒரு மாசம் கழிச்சுதான் வீட்டுல அம்மா கிட்டே பேசினேன். அவங்க அழுதாங் களே தவிர, ஒரு வார்த்தைக்கூடப் பேசலை. அப்ப கம்பெனியிலேர்ந்து ஃபோன் பண்ணி இங்கிலீஷ்ல ஆறுதல் சொல்லியிருக்காங்க. எங்க வீட்டுல பத்தாம் கிளாஸ் பாஸ் பண்ணுனதே நான் தான். அதுனால அப்பாவுக்கு 'என்ன சொல் றாங்க'ன்னு புரியாம மூணு மாசத்துல அவங்க நொந்து போயிட்டாங்க'' என்கிறார் மாணிக்கம். பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அவரது தந்தை சேர்மனின் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டுகிறது.

''ஒரு வழியா 112-வது நாள் உங்களுக்கு விடுதலைன்னு சொன்னாங்க. கென்யாவுல பம்பாஸா ஹோட்டல்ல ஒருநாள் தங்கி யிருந்தோம். பிறகு ஃபிளைட் புடிச்சி வீட்டுக்கு வந்தா, வீடு, மரணம் நடந்தது மாதிரி விரிச்சோன்னு கிடக்கு. எங்க அம்மா என்னையைக் கட்டிப்புடிச்சு அழுததை மறக்கவே முடியாது'' என்கிற மாணிக் கத்தை ''கோயிலுக்குப் போக நேரமாச்சு கிளம்புப்பா'' என்கிறார் அம்மா பொட்டுத் தாயி.

-மரைன் என்ஜினியர் மாணிக்கம்!





நெல்லை டூரிஸ்ட் ஸ்பாட்!







SRIMATHI SUNDARAVALLI MEMORIAL RESIDENCY

"SUBHASHRAYA" - A HOME FOR ELITE SENIOR CITIZENS

CHENNAI - 600063

Heaven On Earth





RIGHT PLACE FOR ELDERS




Spiritualism



Peace



Honour



Comfort



Luxury



Health

With the Heart to Serve — *We Welcome you*

Moppedu Road, Alapakkam, New Perungalathur, Chennai-600063

Phone No : 044-2279 2002-04 Fax : 044-2279 2009

E-mail : ssmeto@dataone.in Website : www.ssmhome.in



ச்சும்மா... சுபாவம்!

மனிதர்களை இப்படி வர்ணிப்பதுண்டு. 'அவன் சரியான சிடுமூஞ்சி', 'அவன் ஆளே அப்படிதாம்பா. பேசுறதுக்கே காசு கொடுக்கணும்', 'அவன் ரொம்ப ஜாலியான ஆளு', 'எவ்ளோ பெரிய ஆளா இருந்தாலும் பேசியே கவுத்துடுவான்', 'சரியான சந்தேகப் பேர்வழி', 'பயங்கர முன் கோபக்காரன்', 'ஒரு நாளைக்கு ஒரு மாதிரி இருப்பான். திடீர்னு மாப்ளேன்னு கட்டிப்புடிச்சி நலம் விசாரிப்பான். திடீர்னு காரணமே இல்லாமே, பார்த்தாலும் பார்க்காத மாதிரி மூஞ்சைத் திருப்பிக்கிட்டுப் போவான்' என்று நம்முடைய காமன்ஸென்ஸை (common sense) வைத்து, ஒருவரின் சுபாவத்தை ஒரு வரியில் வகைப்படுத்துவதை லேமேன் சைக்காலஜி (Lay-man Psychology) என்கிறார்கள்.

ஒரு தனிமனிதனின் குணாதிசயங்கள், அடிப்படை உணர்ச்சிகள், மனோநிலை, பண்புகள் மற்றும் நடவடிக்கைகளின் கலவைதான் 'ஆளுமை' என்கிறோம்.

இந்தச் சுபாவம், கருவில் நரம்பு மண்டலம் உருவானதிலிருந்து (Neuro-developmental) பூமியில் பிறந்து கல்வி, பொருளாதாரம், வாழ்க்கை அனுபவங்கள் என ஒவ்வொன்றின் அதிர்வினாலும் உருக்கொள்கிறது; பாதிக்கப்படுகிறது.

மனிதர்களை குணாதிசயங்கள் (characters), பண்புகள் (emotions), உணர்ச்சிகள் (mood), மனோநிலை மாற்றங்கள் (behaviours), இவற்றின் அடிப்படையில் மூன்று பெரும் பிரிவுகளாக வகைப்படுத்துகிறது உளவியல். முதல் வகை மனிதர்கள் Eccentric. அதாவது, யதார்த்தத்திலிருந்து எப்போதும் விலகியே யோசிப்பவர்கள்.

இரண்டாம் வகை மனிதர்கள் Emotional. இவர்கள் உணர்ச்சிகள் பொங்கி வழியும்

வகையைச் சார்ந்தவர்கள்.

மூன்றாம் வகை மனிதர்கள் Anxious. இவர்கள் பதற்ற சுபாவம் கொண்டவர்கள்.

ஒவ்வொரு பிரிவிலும் நான்கு முதல் ஆறு வகையான உட்பிரிவு சுபாவங்கள் உள்ளன. எனவே, இந்த உலகில் உள்ள எந்தவொரு மனிதனும் இந்த பன்னிரண்டு முதல் பதினைந்து வகையான சுபாவங்களுக்குள்தான் அடங்குவான்.

ஆனாலும் சிலர், இரண்டு, மூன்று சுபாவங்களின் கலவையாகக்கூட இருப்பார்கள். உதாரணமாக 'அனன்கேஸ்டிக் பர்ஸனாலிட்டி' என்றொரு சுபாவம் உடையவர்கள் மூன்றாம் வகையைச் சேர்ந்தவர்கள். இவர்களில் சிலர் இரண்டாம் வகையின் உணர்ச்சிவயப்படக்கூடிய பண்புகளைப் பெற்றிருப்பதுமுண்டு.

'அனன்கேஸ்டிக்' மனிதர்களைப் பற்றிய லேமேன் சைக்காலஜி

'எருமை போறது தெரியாது; எறும்பு போறதைத் தேடுவான்!'

'மிளகு போறது தெரியாது; கடுகு போறதைத் தேடுவான்!'

"Penny Wise Pound Foolish" என்கிறது.

ஊருக்கெல்லாம் இவரை மாதிரி ஆளு உண்டான்னு பேரு. வீட்ல பார்த்தாத்தானே தெரியும். 'நைநைன்னு நச்சரிப்புத் தாங்காது.' 'ரொம்ப நேர்மையான ஆளு ஸார். ஒருத்தரைச் 'சீ'ன்னு ஒரு வார்த்தைச் சொல்லாம சர்வீஸ் முடிச்சுட்டு வந்தார்.''

'மகா கஞ்சன் ஸார். மாசம் முப்பதாயிரம் சம்பளம் வாங்குறாரு. மனுஷன் ரேஷன் அரிசிதான் இன்னமும். வீட்ல உப்பு, புளி, மிளகாய்லேர்ந்து எல்லாம் அவரேதான் வாங்கிப் போடுவார். பிறரை நம்பி ஒரு வேலையைக் கொடுக்க மாட்டார். விவரம் பத்தாதுன்னு சொல்லிச் சொல்லியே என்னை இப்படி வெச்சிருக்கார்.'



'எந்த ஒரு முடிவையும் சட்டுன்னு எடுக்க மாட்டான்.

சரியா? தப்பா? செய்யலாமா? வேண்டாமா?

இதையே செலக்ட் பண்ணிடலாமா?

டாக்டர் பி.ஆனந்தன்

டாக்டர் பி.ஆனந்தன்

இதைவிட பெட்டர் பொண்ணா கிடைக்குமா?

இப்படி எல்லா விஷயத்துலயும் கடைசிவரைக்கும் போட்டுக் குழப்பி குழப்பிக் கடைசியில ஏதோ ஒண்ணுன்னு உருப்படாத முடிவா எடுப்பான்.'

'அவன் பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்த்துக்கிட்டிருக்கான். அந்தப் புள்ள பி.எஸ்ஸி., முடிச்சதுலேர்ந்து பாக்குறான். பாக்குறான் பார்த்துக்கிட்டே இருக்கான்.'

'ஹியூமன் ரைட்ஸ்ல டாக்டர் பட்டம் வாங்குனவன். கூடப் பொறந்த தம்பியோட கால் கிரவுண்டு நிலத்துக்காகப் பிரச்னை பண்ணி ஹைகோர்ட் வரைக்கும் போயிட்டான். என்ன மனுஷன்யா இவன்?'





- இப்படி... சில மனிதர்களைப் பற்றி நாம் சொல்வதும், பிறர் சொல்வதும் ஏன்? நாமே கூட அப்படி ஒரு குணமுடையவராக இருக்கலாம். இந்த சுபாவத்தைத்தான் உளவியல், 'அனன்கேஸ்டிக் பர்ஸனாலிட்டி' (Anankestic Personality) என்று அழைக்கிறது.

அனன்கேஸ்டிக் சுபாவம் உடையவர்கள் ஒரு நேர்மையான உயரதிகாரியாக இருப்பார்கள். ஆனால், பயங்கர டார்ச்சர். மேலைநாடுகளில் இந்த சுபாவம் உடையவர்கள்தான் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார்களாம்.

கம்யூனிஸம், புத்திஸம், இந்துயிஸம், பாபாயிஸம், பெரியாரிஸம்... இப்படி ஏதேனும் ஒரு 'இஸத்துக்குள்' இருந்து கொண்டு தாங்கள் செல்லும் பாதையே, தங்கள் கொள்கைகளே சரி என்று நினைத்துக்கொண்டு கொஞ்சமும் வளைந்து கொடுக்காமல், விசாலப் பார்வைக்கு இடம்கொடுக்காமல் (பீச்சில் ஓடுமே ஒரு பக்கம் கண்ணாடி பூட்டிய குதிரை, அது மாதிரி!) இருப்பவர்களும் அனன்கேஸ்டிக் மனிதர்களே. இது சுபாவம் என்பதால் இதை மாற்றமுடியாது.

சுபாவத்தை மாற்ற முடியாது. அதனால் சமூகத்துக்குப் பிரச்னை எனில் உளவியல் நிபுணர்களை நாடலாம்!

மனிதர்கள் மற்றும் சமூகத்துக்குப் பிரச்னையாக இருக்கும் பட்சத்தில் இவர்கள் உளவியல் நிபுணர்களின் உதவியை நாடுவது பலன் தரும்.

(தொடரும்)



கல்கி



2010 மார்ச் 14
விரோதி மாசி 30
மலர் : 68
இதழ் : 33

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

பிரதமரின் அபத்த வாதம்!


மன்மோகன் சிங் நிதியமைச்சராக இருந்தபோதுதான் இந்தியப் பொருளாதாரம் புத்துணர்வு பெற்று வளர்ச்சிப் பாதையில் முன்னேற ஆரம்பித்தது. அவருடைய பொருளாதார ஞானமும் - தொலைநோக்கும் உலகளாவிய கவனம் பெற்றன. இன்று, அதே மன்மோகன் சிங், நிதியமைச்சருக்குக் கொள்கையை வகுத்துத் தரவல்ல பிரதமர் பதவியில் இருக்கிறார்... ஆனால், அவரது பொருளாதார நிபுணத்துவம் எங்கே போயிற்று என்பதுதான் புரியாத புதிர்!

2010-11-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், விண்ணைத் தொடும் நிதிப் பற்றாக்குறை ஒரு புறமிருக்க, அரசு வாங்கும் கடன் தொகையானது மில்லியன் - பில்லியன் கணக்கையெல்லாம் தாண்டி, ட்ரில்லியனைத் தொட்டுவிட்டது! அரசின் ஒட்டுமொத்தக் கடன் சுமை ஒன்பதுமுதல் பத்து ட்ரில்லியன்!

அரசு தனது செலவுகளைக் குறைத்துக்கொள்ளவில்லை; கடனை மட்டும் அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது.

கடந்த ஆண்டு பெற்ற கடன் தொகையில் எண்பது சதவிகிதம் பணம், உற்பத்திக்கு உதவாத செலவினங்களுக்கே வினியோகமாயிற்று! இவ்வாண்டு அதைச் சற்றே குறைத்து, எழுபத்து மூன்று சதவிகிதத்துக்குள் அடக்க முற்படுவதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால், கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு மொத்தக் கடன் தொகையும் - அதற்கான வட்டியும் பன்மடங்கு அதிகம் என்பதைப் பார்க்க, இந்த அரைகுறை முயற்சியினால் பொருளாதாரத்தில் எவ்வித முன்னேற்றமும் விளையாது.





அரசுக் கடன் தொகையில் எழுபத்து மூன்று சதவிகிதம், உற்பத்திக்கு உதவாமல், புழக்கத்துக்கு மட்டும் வருகிறபோது, பண வீக்கம் அபரிமிதமாகும் என்பது அடிப்படையான பொருளாதார விதி. இதன் காரணமாக விலைவாசி மேலும் ஏறும் என்பதும் உறுதி. வெந்த புண்ணில் பாயும் வேலாக, பெட்ரோல் - டீசல் விலை உயர்வினால் சரக்குக் கட்டணங்களும் அதனால் பொருட்களும் விலை ஏறத்தான் போகின்றன.

இந்த நிலையில், ஏழைகளுக்கு மானியங்கள், வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், இதர இலவசங்கள் மூலமாக அரசு பேருதவி செய்வதாகச் சித்திரிக்கிறது! வரி செலுத்தும் மாத வருமானப் பிரிவினருக்கு (உயர் வருமானப் பிரிவு), வருமான வரிக் குறைப்பு மூலம் பளு குறைப்பதாகக் காட்டவும் இவ்வரசு முயன்றுள்ளது! ஒட்டகத்தின் முதுகில் ஒரு பெரும் போரை ஏற்றிவிட்டு, ஒற்றைப் பிரியை உருவிப் போடும் கண் துடைப்புதான் இந்த நடவடிக்கைகள்.

எதிர்க்கட்சிகள் வீதியில் இறங்கிக் கொடி பிடிப்பதாலும், நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் தடை செய்வதாலும் மக்களுக்கு நிச்சயமாக நிவாரணம் கிடைக்காது. அதனால் ஏற்படக்கூடிய இடைஞ்சல்களால் மக்களின் எரிச்சல்தான் அதிகரிக்கும்.

இந்த பட்ஜெட் ஏன் மோசமானது என்பதை நாடாளுமன்றத்தில் எடுத்துப் பேசுவதும்- விவாதிப்பதும் அவசியம். சர்வதேச கச்சா எண்ணெய் விலையையொட்டி இந்திய பெட்ரோலியப் பொருட்களின் விலையையும் நியாயமாக அமையும் வண்ணம் நிர்ணயிக்க முடியும் என்பதை விவாதங்களில் எடுத்துச் சொல்லவேண்டும். "பெட்ரோல் - டீசல் விலையை உயர்த்தாவிட்டால் தொழில் - முதலீடு சூழல் பாதிக்கப்பட்டு, வேலை வாய்ப்புகள் குறையும்," என்று பிரதமர் முன்வைத்துள்ள வாதத்தின் அபத்தத்தை விளக்கிச் சொல்ல வேண்டும்.

எதிர்ப்புணர்வினால் எந்த மெஜாரிட்டி அரசும் திருந்திவிடாது; மக்கள் விழிப்புறும்போதுதான் திருந்தவும் மாறவும் நிர்ப்பந்திக்கப்படும்.



ஜாலிக்கதை

ஆசிரியருக்கு உரிமை உண்டு!

டிராஃபிக் சிக்னலில் பாரதி உட்கார்ந்திருந்த ஆட்டோவை உரசுகிற மாதிரி வந்து நின்றது இன்னொரு ஆட்டோ. அதிலிருந்து எட்டிப் பார்த்த அவள் சினேகிதி ஜமுனா, ''ஹாய் பாரதி! நானே ஃபோன் பண்ணணும்னு இருந்தேன். கங்கிராட்ஸ்'' என்றாள்.

''எதுக்கு?''

''உன் பெயரை 'மாதரசி' பத்திரிகையில் பார்த்தேன்.''

''அப்படியா... என் கதை வந்திருக்கா?''

ஜமுனா, பதில் சொல்லுமுன் பச்சை விளக்கு வந்து ஆட்டோக்கள் நகர்ந்து விட்டன.

'மாதரசி'க்கு ஒரு பக்கக் கதை அனுப்பியிருந்தாள் பாரதி.

அது பிரசுரமாகியிருக்கிறது போலும். அவசரமாய் பத்திரிகைக் கடைக்கு ஆட்டோவைத் திருப்பி, உடனே வாங்கிப் பக்கங்களைப் புரட்டினாள். தன் பெயரை அதில் பார்க்கும் ஆர்வத்தில் அவள் கண்கள் பக்கங்களைத் துழாவின.

அதில் மசாலா, புடைவை விளம்பரங்கள், வீட்டு வைத்தியம், நடிகை நவோதிதாவின் வரவேற்பறை அலங்காரங்களைக் காட்டும் வண்ணப்படங்கள், சின்னத்திரை நடிகை சின்னி தரும் அழகுக் குறிப்புகள், நட்சத்திர, பிறந்த நாள் பலன்கள்... மாதரசியுடன் இலவச இணைப்பாகக் குட்டிப்புத்தகம் 'பெண்ணரசி'. அதில் குறிப்புகளுக்கு நடுவில் **'தேநீர் கொதிக்கையில் அதில் ஒரு லவங்கப் பட்டையைப் போட்டு கொதிக்கவைத்து அருந்தினால் 'ட்ரைக்ளிஸரைட்' என்கிற அதீத கொழுப்பு ரத்தத்தில் கட்டுப்படும் - பாரதி'** என்றிருந்தது.

அவளது கதையில் வந்த வரிகள் அவை! அதை அந்த அளவுக்குச் சுருக்கி விட்டார்களா? கோபத்துடன் அவள் மாதரசியை மீண்டும் புரட்டியபோது அதில், ''கதை கட்டுரைகளின் நீளத்தை குறைக்கவோ, சுருக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு'' என்றிருந்தது!

- லக்ஷ்மிரமணன்


தாவணியா?
புடவையா?

ரேஸியைக் கேளுங்கள்!

● எம்.அசோக்ராஜா, திருச்சி

இறந்தவர்கள் பெயருக்கு முன்னால் ஏன் 'லேட்' என்று போடுகிறார்கள்...?

இப்ப இருக்கிற கற்றுப்புற 'பொல்யூஷனுக்கும்' சாப்பிடும் பண்ட 'அடல்ட்ரேஷனுக்கும்' 'இன்னார்' எப்பவோ 'அன்னார்' ஆகியிருக்க வேண்டியது. அதையெல்லாம் மீறி உயிரோடு இருந்து சாதனை படைத்து, 'லேட்டாக' இறந்தவர்களுக்குக் கொடுக்கும் பட்டப் பெயர்தான் 'லேட்'... 'பெட்டர் லேட்'தான் அவர்!

● வ.வைகுண்டம், சென்னை

வாயுவேகம், மனோவேகம்... இதை விட வேகமானது எது?

சச்சினின் சாதிக்கும் வி'வேகம்'!

● பா.அசோக், விருதுநகர்

ஒரு மனிதனின் 'தூக்கம்' எப்போது தொலைந்துபோகும்?

செய்த தப்பிலிருந்து தப்பிக்க வழி தேடி, 'திருட்டு முழி முழிக்கும்'போது.

● எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்


ஆண்டவன், கடவுள், தெய்வம், இறைவன்... ஏன் இத்தனை பெயர்கள்?

''ஓ காட்... ப்ளீஸ் ஆன்ஸர் திஸ் கொஸ்சின்...''

● த.சத்தியநாராயணன், அயன்புரம்

'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்கிறார்களே... யார் அந்த தம்பிரான்?

அர்ஜுனன் தலைக்கு, கர்ணன் நாகாஸ்திரம் விட்ட போது, கண்ணன் தம் கால்களால் தேரை அழுத்தி கீழே இறக்க, தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு. கர்ணனின் தம்பி அர்ஜுனன் தம்பிரான். பலராமனின் தம்பிரான் கண்ணன் காப்பாற்றி எம்பிரான்!



● ஆர்.அஜிதா, கம்பம்

முள்ளில் ரோஜா, சிப்பியில் முத்து, சேற்றில் செந்தாமரை இவற்றைப் போல் வேறு ஒன்று சொல்லுங்களேன்...?

கல்லில் கடவுள்!

● ச.ராஜசேகர், செய்யாறு

பெண்கள் சேலை கட்டினால் அழகா? தாவணி கட்டினால் அழகா?

தாலி கட்டினால்தான் அழகு என்கிறார் பெண்ணைப் பெற்றவர்!

● லாவண்யா, சென்னை

ராவணனுக்குத் தலைவலி வந்தால் என்ன செய்வான். ஒரு கடி ஜோக் ப்ளீஸ்...?

டாக்டர்: ''என்ன ராவணா, 'ஹெட் ஏக்'கா?

ராவணன்: ''இல்லை டாக்டர். 'ஹெட் தஸ்'! (பத்து தலையைக் காட்டுகிறான்)

டாக்டர்: (ராவண கடி தாங்காமல்) அட ராமா! என்று தனது ஒரு தலையில் அடித்துக் கொள்கிறார்

● அ.முரளீதரன், மதுரை

கோயில் உண்டியலில் காசு போடுவது, பிச்சைக்காரர்களுக்குக் காசு போடுவது.. இவ்விரண்டில் தாங்கள் விரும்பிச் செய்வது எது?

பசித்த பிச்சைக்காரனுக்கு போடும் காசு அவனுக்கு உணவாகும். உணவுக்கு மற்றொரு பெயர் உண்டி. 'ஏழையின் உண்டியில் இறைவனின் உண்டியலைக் காண்பேன்!'

● மங்களம் மைந்தன், திருவெறும்பூர்

ஜாதகம் என்பது மனித இனத்துக்கு சாதகமா... பாதகமா?

சாதகமாக இருந்தால் Horoscope பாதகமாக இருந்து பயமுறுத்தினால் Horror Scope.

‘தம்பிக்கு இந்த ஊரு’ - இது பரத் நடிக்கும் புதுப்படம். சிலம்பாட்டத்தில் சிம்புவோட குத்தாட்டம் போட்ட சனாகான்தான் ஹீரோயின். சமீபத்தில் பரத் நடித்த எந்தப் படமும் சரியாகப் போகாததால், இந்தப் படத்தைத்தான் மலை போல நம்பியிருக்கிறார். படம் சாதாரணக் கிராமத்து சப்ஜெக்ட் என்றாலும், கோலிவுட்டின் வழக்கப்படி பாடல் காட்சிகளுக்காகச் சில வெளிநாடுகளுக்கும் சென்று வந்திருக்கிறதாம் படக்குழு.

(ஐடியா ரொம்ப பழசாயிருக்கே...)



பாலிவுட் போகும்



கிராமத்திலிருந்து படிக்க வரும் ஒருவனை, நகரம் எப்படிக் கொலைகாரனாக மாற்றுகிறது என்பதுதான் 'வீரசேகரன்' படத்தின் கதை. இந்தப் படத்தின் ஹைலைட், மென்மையான கேரக்டரில் அறிமுகமான, இன்னும் பாலுமகேந்திராவின் ஹீரோ என்று அடையாளப் பட்ட பிரதாப் போத்தன்தான் வில்லன். மனிதர் தமிழில் வீர வசனம் பேச முடியாமல் திக்கித் திணறினாராம். ஹீரோயின் புது முகம் அமலா பால் ஒரே டேக்கில் நடித்து விட்டாராம்.

(ஓவர் டேக்கால்ல இருக்கு)



ஷாம், நடிக்கும் 'அகம் புறம்' படத்தைத் தயாரித்த ஜி.கே.பிலிம் கார்ப்பரேஷன், படம் பாதி முடிந்த நிலையில் திடீரென தயாரிக்கும் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டது. ஷாமுக்குத் திண்டாட்டம். யோசித்த அவர், மீதி படத்தையும் தாமே தயாரிக்க முடிவெடுத்திருக்கிறார். தயாரிப்பாளர் ஆன யோகமோ என்னவோ, பாலிவுட்டில் நடிக்கவும் அழைப்பு வந்திருக்கிறது. படத்தின் பெயர் 'ஐ யாம் ஸாரி' -

(டோண்ட் ஒர்ரி ஷாம்)

ஷாம்!

ஆதிச்சநல்லூர்



திருநெல்வேலி மாவட்ட எக்ஸ்பிரஸ்

இந்தியாவிலே மிகமிகத் தொன்மையான, உலகத்தின் அனைத்து நாட்டு வணிகர்களும் வந்து வியாபாரம் செய்த நகரம் எது? கொல்கொத்தா, சென்னை, மும்பை, டெல்லி... இவற்றில் எதுவுமில்லை. வேறெது? ''ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டத்தின் தாமிரபரணிக் கரையிலிருக்கும் ஆதிச்சநல்லூர். 150 ஏக்கருக்கு மேல் பரந்து விரிந்திருக்கும் ஆதிச்சநல்லூர் பறம்புமேடு, தனக்குள் ஆயிரமாயிரம் வருட அதிசயங்களை அடைகாத்து வைத்திருக்கிறது. திருநெல்வேலியிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில் முப்பதாவது கிலோமீட்டரில் இருக்கிறது ஆதிச்சநல்லூர். சிந்து சமவெளி நாகரிகத்துக்குச் சமமான, இன்னும் சொல்வதென்றால், அதற்கும் முன்னோடி ஆதிச்சநல்லூர் தாமிரபரணி நாகரிகம்'' என்கிறார் மத்திய தொல்பொருள் துறையின் சென்னைப் பிரிவின் கண்காணிப்பாளர் தியாக. சத்தியமூர்த்தி. இவர் தலைமையில் 2004, 2005 ஆண்டுகளில் நடந்த ஆய்வுகளில் தான் ஆதிச்சநல்லூருக்குள் புதைந்துகிடந்த அதிசயங்கள் உலகுக்குத் தெரியவந்தன.

''ஒரு சமூகம் நாகரிகமடைந்த வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்களா என்பதைக் கண்டறிய தொல்லியல் துறையில் சில அளவுகோள்களை வைத்திருக்கிறோம். அந்த மக்கள் வாழ்ந்த பகுதியில் நதி ஓடியிருக்கவேண்டும். விவசாயம் செய்திருக்கவேண்டும். மற்ற நாடுகளோடு வாணிபத் தொடர்பு, இறந்தவர்களைப் புதைக்கத் தனித்த புதைகுழிகள், பயன்படுத்தும் பானைகள்... இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்வோம். அந்த அடிப்படையில் பார்த்தால் ஐயாயிரம் வருடத்துக்கு முன்பே ஆதிச்சநல்லூர் மக்கள் இவற்றையெல்லாம்

அதிசயம்!



அடைந்துவிட்டார்கள்'' எனும் சத்தியமூர்த்தி, ஆதிச்சநல்லூரில் வெளிநாட்டினர் நடத்திய ஆய்வுகள் குறித்தும் பேசுகிறார்.

''நூறு வருஷத்துக்கு முன்பு (1901ல்) இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வாளர் அலெக்சாண்டர்ரியா, ஆதிச்சநல்லூரில் அகழ்வாராய்ச்சி செய்தார். அப்போது அதிசயிக்கத்தக்க அளவில் முதுமக்கள் தாழிகளும், பானைகளும் கிடைத்தன. அவர் சமர்ப்பித்த ஆய்வறிக்கையில், 'தென்னிந்தியாவின் தொன்மையான இடம் இது. இந்தப் பகுதி மக்களுக்கான புதைகுழிகள் இங்கேதான் இருந்திருக்கின்றன' என்றார். எனவே, இது புதைகுழி கலாசாரமாகத்தான் உலகுக்குத் தெரியவந்தது. அதற்கு முன்பே (1864-65களில்) பிரான்ஸ் நாட்டு தொல்பொருள்துறையினர் நடத்திய அகழாய்வில், 24 எலும்புக்கூடுகள் கிடைத்தன. அவை அனைத்தும் ஒரே இனத்தைச் சார்ந்தவையா... இல்லை வெவ்வேறான இனக்குழுவா என்பதைத் தெரிந்துகொள்ள முயன்றனர். எனினும் அவர்களுக்கு முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால், 2004-05களில் நாங்கள் நடத்திய அகழாய்வில் ஆதிச்சநல்லூரில் மனிதர்கள் வாழ்ந்த இடங்களையும் தொழில் நடந்த இடங்களையும் கண்டறிந்தோம்'' என்கிறார்.


''மூன்றடுக்குப் புதைக்குழிகள்தான் முதலில் கிடைத்தன. மேன்மேலும் நடந்த ஆய்வில், ப்ளாக் அண்ட் ஒயிட் நிறப் பானைகள் கிடைத்தன. இந்த வகையான பானைகள் உலகத்தில் வேறெங்கும் கிடைக்கவில்லை. உயர்ந்த தொழில்நுட்பத்திலான இந்த வகையான பானைகளைச் செய்யும் உலைக் களமும் கிடைத்தது. இங்கே கிடைத்த வெண்கலப் பொருட்களும், மொஹஞ்சதாரோ வெண்கலத்தை ஒத்திருக்கின்றன. 3000 வருடத்துக்கு முன்பே(கி.மு. 1000லிருந்து 1500வரை)

மூவாயிரம் வருடங்களுக்கு முன்பே தேனிரும்பைப் பயன்படுத்தி இருக்கின்றனர் ஆதிச்சநல்லூர்வாசிகள்!






ஆதிச்சநல்லூர் அதிசயம்!



தேனிரும்பைப் பயன்படுத்தியிருக்கின்றனர். தாவர விதைகளிலான அணிகலன்கள் செய்யும் தொழிற்சாலையின் எச்சம் ஒன்றும் தெரிய வந்தது. மேலும் 24 மனித எலும்புக் கூடுகள் கிடைத்தன. ஆனால், இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று பொருந்தாதவை. ஆஸ்திரிய, மங்கோலிய, இந்தோ ஐரோப்பிய இனக்குழுக்களின் மண்டையோட்டோடு ஒத்துப்போகின்றன. அப்போது தாமிரபரணியின் ஓடும் பாதை இன்னும் வடகிழக்காக கொங்கரன் குறிச்சியில் இருந்திருக்கலாம். திருச்செந்தூரில் இருக்கும் வங்கக் கடல் இன்னும் மேற்கே இருந்திருக்கலாம். அப்போது தமிரபரணி மூலம் வெளிநாட்டினர் ஆதிச்சநல்லூர் வந்திருக்கலாம். அப்போது வந்தவர்களில் இறந்தவர்களைப் புதைத்திருக்கலாம். 'இங்கே வாழ்ந்த மக்கள்தான்

"தாமிரபரணி கரையில் வாழ்ந்தவர்கள்தான் மஹாராஷ்டிரம் வரைக்கும் பரவியிருந்தார்கள்" என்கிறார் ஜெர்மன் நாட்டு தொல்பொருள் அறிஞர் வாஸ்ஸெல்லி.

மஹாராஷ்டிரம் வரைக்கும் பரவி இருந்தனர்' என்பதை ஜெர்மன் நாட்டுத் தொல்பொருள் அறிஞர் வாஸ்ஸெல்லி தம் ஆய்வின் மூலம் கண்டறிந்திருக்கிறார். இலங்கையின் பொன்பரப்பியில் நடந்த ஆய்வில் கிடைத்த பொருட்கள் ஆதிச்சநல்லூர் பொருட்களோடு நூற்றுக்குநூறு ஒத்திருப்பது கவனிக்க வேண்டிய விஷயம்'' என்கிற சத்திய மூர்த்தி, ' ''சிந்து சமவெளி, நைல், யூப்ரடீஸ் - டைகிரீஸ் நாகரிகங்களுக்கெல்லாம் மூத்தது தாமிர பரணியின் ஆதிச்சநல்லூர் நாகரிகம்'' என்கிறார்!



• சத்தியமூர்த்தி

வாசகர் யோசனை:
சுஜாதா கணேசன்

தேன்குரல் தியாகராஜன்!



தென்மாவட்டங்கள்ல 'மெலோடியஸ் மியூஸியானா' பிரபலம் அதன் இயக்குநர் கம் பாடகர், எம். தியாகராஜன். இருபத்திரண்டு வருஷமா மேடைகள்ல பாடி வர்றாரு. மெல்லிசைக் குழு அமைச்சு தனியாக இயங்கி வர்றது சமீபத்திய பதிமூணு வருஷமா. இருபது பேர் கொண்ட குழு. திருநெல்வேலியை உள்ளடக்கிய தென் மாவட்டக் கிராமத்து திருவிழாக்களில் 'மெலோடியஸ் மியூஸியானா'வின் திரைப்பட பாடல்களைக் கேட்கலாம்.

''ஆர்க்கெஸ்ட்ரா குழு வெச்சு நடத்துறதுலயும் பல சிரமங்கள் இருக்கு. ஆர்க்கெஸ்ட்ராவுல ஒரு நபரா இருந்து செயல்படுறதுலயும் பல சிரமங்கள் இருக்கு. பாடுறதுல இருக்கற ஆர்வத்துல, அந்தச் சிரமங்கள்லாம் மறைஞ்சு போய்விடும். கைதட்டல்கள் தர்ற சந்தோஷத்துல கரைஞ்சு போய்விடும்.

நைட்டு பத்துப் பதினோரு மணிக்கு கிராமங்கள்ல மேடை ஏத்துவாங்க. மூணு மணி நேர நிகழ்ச்சி. மொத்த சனங்களையும் கூட்டத்துலேர்ந்து எழுந்து போகாம கட்டிப் போடணும். அதான் ஆர்க்கெஸ்ட்ராவோட வெற்றி இலக்கு. அதுல நாங்க முன்னணியில இருக்கோம். எங்க ஒட்டுமொத்தக் குழுவினரோட முயற்சியும் உழைப்பும்தான் முக்கியக் காரணம்.

ஒரு ஊர் திருவிழாவுல 'பூங்காற்று திரும்புமா?'னு பாட்டுப் பாடினோம். அந்தப் பாட்டோட கடைசியில பெண்கள் பல பேரும் அழுதிட்டாங்க. மேலகிருஷ்ணப்பேரி கிராமத்துல திருவிழாக் கச்சேரி, 'அமைதியான நதியினிலே ஓடம்...' பாடல் பாடத் தொடங்கினோம். அதுக்கு முன்னாடி திடல்ல சனங்களோட இரைச்சல் இருந்திச்சு. அந்தப் பாடலுக்கு, அந்த மொத்தக் கூட்டமும் அமைதியாகிப் போச்சு'' என்கிற தியாகராஜனின் இசைக் குழுவுக்கு, தமிழ்நாடு சினிமா கலைமன்றம், கோல்டு இஸ் கோல்டு விருது தொடர்ந்து இரண்டு வருஷமா தந்திருக்கு!





கால் மாற்றியமர்ந்த மூர்த்தி!

கோயில்களில் நீங்கள் தட்சிணாமூர்த்தியைத் தரிசனம் செய்திருப்பீர்கள். எல்லா ஊர்க் கோயில்களிலும் பொதுவாய் வலது கால் மீது இடது காலைத் தூக்கிப்போட்டு அமர்ந்துள்ள தட்சிணாமூர்த்தியைத்தான் பார்த்திருப்பீர்கள். கால் மாற்றிப்போட்டு அமர்ந்துள்ள நிலையை, தென் திருப்புவனம் புஷ்பவனநாதர் கோயிலில் காணலாம். மக்களுக்காகவும், மன்னனுக்காகவும் இடதுகால் மீது வலதுகாலைத் தூக்கிப்போட்டு அமர்ந்த நிலையில் உள்ள சிவஞானபோத தட்சிணாமூர்த்தியை இங்கு மட்டுமே தரிசிக்கலாம்.

வாசகர் யோசனை:

செல்லம்மா, ஆழ்வார்குறிச்சி

ஜெய்ப்பூர் போகும் வெற்றிலை!

ஆயிக்குடி பகுதிகளில் வெற்றிலை சாகுபடி அமோகம். அனுமன் நதி தண்ணீர், சாதாரண வெற்றிலையை, ருசியான கொடிக்கால் வெற்றிலையாக விளைவித்துத் தருகிறது. பரவலாக வெற்றிலை சாகுபடிதான். இங்கே இருக்கிற சேனைத் தலைவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான், இந்தச் சாகுபடியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதுதான் ஏன் என்று தெரியவில்லை!

"தென் மாவட்டங்கள்ல ஆயிக்குடி கொடிக்கா வெத்தலை ரொம்ப ஃபேமஸ். ஒரு நாளைக்கு ரெண்டாயிரம் கிலோ வெத்தலை அறுத்துடுவோம். ஜெய்ப்பூர்வரை அனுப்பி வைக்கிறோம்!" என்கிறார் கொடிக்கால் வெற்றிலை விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.ராமசுப்பிரமணியன்.

வாசகர் யோசனை:

மாரியப்பன்,

ஆயிக்குடி



காருகுறிச்சி வீடு!





கல்லிடைக் குறிச்சியில், ஒரு கல்யாணத்துக்கு வந்திருக்கிறார் நாதஸ்வரச் சக்கரவர்த்தி ராஜ ரத்தினம்பிள்ளை. அதில் காருகுறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வரக் கச்சேரி. நாத இசையை ரசித்துக் கேட்ட ராஜரத்தினம் பிள்ளை, 'என்கூட ஊருக்கு வர்றியா?' என்று பிரியமாய்க் கேட்டிருக்கிறார். மறுநாளே கிளம்பிப் போனார் அருணாசலம். ஐந்து வருடம், குருகுலக் கல்வி. தேர்ச்சி பெற்றுத் திரும்பிய பிறகு, நிறையக் கச்சேரிகள். நிறைய ரசிகர்கள். அருணாசலம் என்று வெறுமனே அறியப்பட்டவர், காருகுறிச்சி அருணாசலம் என பூர்விகக் கிராமத்துப் பெயரை அடைமொழியாக இணைத்து அன்புடன் அழைக்கப்பட்டார். அவர் வாழ்ந்த பூர்வீக வீடு, தற்போதும் காருகுறிச்சியில் உள்ளது. அந்த வீட்டில் அவரது தம்பி மகன் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

வாசகர் யோசனை:
சரஸ்வதி, தூத்துகுடி

ஆஷ்துரை கல்லறை!

பிரிட்டிஷ் ஆட்சியின்போது திருநெல்வேலி மாவட்ட கலெக்டராக இருந்தவர் ஆஷ் துரை. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை ஏவியவர். வீரன் வாஞ்சிநாதன் மணியாச்சி ரயில்நிலையத்தில் துப்பாக்கியால் சுட்டு, ஆஷ் துரையை மண்ணிலே சரியச் செய்தான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை ஏவலாளாகச் செயல்பட்ட ஆஷ் துரையின் கல்லறை, பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் கல்லூரி எதிரே உள்ள கிளாரிந்தா தேவாலயத்தின் உள்ளே அமைந்துள்ளது.

வாசகர் யோசனை: **பி.ஜி.பி.இசக்கி, அகஸ்தியர்பட்டி**



அம்பாள், எல்லா இடங்களிலேயும் பிரதிஷ்டாவாக இருக்கிறாள் என்று பார்த்தோம். **மேரு நிலையா** என்ற அவளது திருநாமத்துக்கும் இந்த வியாபகத் தன்மைக்கும் ஒரு தொடர்பு உண்டு.

பண்டாசுர வதம் முடிந்த பிறகு, காமேசுவரனுக்கும் காமேசுவரிக்குமாக - சிவ-சக்தி ஸ்வரூபமான அந்த ஐக்கிய வடிவுக்காக, தேவர்கள் பதினாறு ஸ்ரீபுரங்களை நிர்மாணித்துக் கொடுத்ததாக வாயு புராணம் கூறுகிறது. இவை எங்கே அமைக்கப்பட்டன...? ஒன்பது பர்வதங்களிலேயும் ஏழு கடல்களிலேயும் அமைக்கப்பட்டன. ஒன்பது பெரிய பர்வதங்கள் இருந்ததாகவும் அவற்றுக்கு இடையே ஏழு கடல்கள் இருந்ததாகவும் கணக்கு. நடுவிலே மேரு மலை. இந்த மலையைப் பற்றி புராணங்கள் சொல்லக்கூடிய வர்ணனை - அது நடுவில் இருக்கிறது; தங்கமயமாக இருக்கிறது என்பவை.

உலக உருண்டையை வைத்துப் பார்க்கிறபோது, வட துருவத்திலே எங்கோ மேரு மலை இருந்ததாகக் கணக்கு வரும். அதற்கு வடமலை என்றேகூட பெயர் - 'வடவரையை மத்தாக்கி, வாசுகியை நாணாக்கி' என்று பாடல் வருகிறது அல்லவா! வடக்கு திசையில், வட கோடியில் உள்ள மலை என்பதால் வடவரை (வரை-மலை). தங்க மலை என்றும் பெயர் உண்டு.

இப்படிப்பட்ட மேரு மலையைச் சுற்றி இருக்கக்கூடிய நிலப் பகுதிதான் ஜம்புத்வீபம். ஜம்புத்வீபத்துக்கும் மேரு மலைக்கும் நடுவிலே உப்புக் கடல். ஜம்புத்வீபத்தைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதியில் கருப்பஞ்சாற்றுக் கடல். இப்படியே ஒன்றினை அடுத்து இன்னொன்றாக வட்டங்கள் போட்டுப் போட்டுப் பார்த்தோமானால், ஏழு கடல் கள்வரை கணக்கு வரும். ஒன்பது பர்வதங்கள், அவற்றுக்குரிய நிலப் பகுதி - அவை ஒவ்வொன்றையும் சூழும் கடல் என்கிறபோது ஏழு கடல்கள் என்கிற எண்ணிக்கையும் சரியாக இருக்கிறது.

மேரு எங்கே?

இன்றைக்கு இதுபோலெல்லாம் நிலம் இருக்கிறதா; மலை இருக்கிறதா; கடல் இருக்கிறதா? என்று கேட்டால், அதற்கு ஒரே ஒரு விதத்தில்தான் தர்க்க ரீதியாகப் பதில் சொல்லலாம்.

இன்றைக்கு நாம் அறிந்த விஞ்ஞானத் தொழில்நுட்பத்தில், பூமியின் அடித்தகடுகள் அசைந்துகொண்டே இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறோம்.

அசைந்துகொண்டே இருக்கக்கூடிய தகடுகள் ஆயிரக்கணக்கான, கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்தன...? அது நமக்குத் தெரியாது! எந்த அளவுக்குத் தெரிந்திருக்கிறது என்றால்,

எங்கெங்கு காணினும் சக்தி!

21

சுதா சேஷய்யன்

ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம்



'பாஞ்சியா' என்ற ஒரு கண்டம் இருந்தது என்கிற அளவுக்குத் தெரிந்திருக்கிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன், பள்ளிக்கூடங்களில், கண்டங்கள் ஐந்து என்று கற்றுக்கொடுத்தார்கள். இன்று, வட-தென் அமெரிக்காக்களைப் பிரித்துக் கணக்குச் சொல்கிறார்கள். இன்னும் வருடங்கள் செல்லச் செல்ல எப்படி மாறுமோ தெரியாது! ஆனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் இரண்டு கண்டங்களாக இருந்தன; அதற்கும் முன்பு மொத்த நிலப்பரப்பும் ஒரே பரப்பாக இருந்தது. பாஞ்சியா என்று அதற்குப் பெயர். இது இரண்டாகப் பிரிந்தது. வட திசைக்குப் போனது யுரேஷியா என்றும், தென் திசைக்குச் சென்றது கோல்வானா என்றும் அழைக்கப்பட்டன. கோல்வானா பகுதியிலிருந்து பூமிக்கு அடியில் உள்ள தகடு பெயர்ந்து நகர்ந்து யுரேஷியா பகுதியோடு ஒட்டியது. அப்படி ஒட்டிய பகுதிதான் இந்தியா. அந்த தீபகற்பப் பகுதி போய் யுரேஷியாவில் மோதிய வேகத்தில் இமய மலை உருவாயிற்று. - இது புவியியல் ஆய்வாளர்கள் இன்று ஒப்புக்கொள்கிற ஒரு ஆராய்ச்சி முடிவு. அவ்வாறு மோதிய தாக்கத்தில்தான் இன்னமும் இமய மலை வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஆண்டு தோறும் இரண்டு சென்டிமீட்டர் தீபகற்பப் பகுதி தள்ளுவதால் இமய மலையும் கொஞ்சம் கொஞ்சமாக மேல் நோக்கி உயர்கிறது என்று சொல்கிறார்கள்.



தெரிந்ததும் தெரியாததும்

இந்த பூமித் தகடுகளுடைய அசைவின் விளைவுதான் பூஜ் பகுதியைத் தாக்கிய நில நடுக்கம். அதே மாதிரி, வேறொரு அசைவின் விளைவுதான் சுமத்ராவில் ஏற்பட்ட நிலநடுக்கமும், அதிலிருந்து தோன்றிய சுனாமியும் - இவையெல்லாம் நிபுணர்கள் சொல்லக்கூடிய விவரங்கள்.

ஆனால், பாஞ்சியாவைப் பற்றி நாம் தெரிந்துகொள்ளவே இத்தனை வருடங்

கள் ஆகியிருக்கின்றன. இன்னும் நம்முடைய ஆராய்ச்சிகள் மூலம் தேடிக்கொண்டே போனால், ஏழு கடல், ஒன்பது பர்வதங்கள் பற்றி உணரமுடியுமோ என்னவோ..? எப்படித் தெரியும்? நமக்கு இன்று ஒரு விஷயம் தெரியவில்லை என்பதனாலேயே 'அவ்வாறு ஒன்று இருந்ததா?' என்று நாம் கேள்வி எழுப்ப முடியாது.

பதினாறு ஸ்ரீபுரங்களுள், மேரு மலையில் ஸ்தாபிக்கப்பட்டதே எல்லாவற்றையும்விட உயர்ந்தது என்று கணக்கு. அதனால்தான் அம்பாளுக்கு **மேரு நிலையா** என்று திருநாமம்.

மேரு மலைக்கு மூன்று சிகரங்கள். நான்காவது சிகரம் இருக்கக்கூடிய உயரத்தில்தான் அம்பாளுடைய ஸ்ரீபுரம் ஸ்தாபிக்கப்பட்டது. மற்ற மூன்று சிகரங்கள், இந்திரனுடைய திக்கில் ஒன்று, நிருதியின் திக்கில் ஒன்று, இன்னொன்று வாயுவின் திசையாக இருக்கக்கூடிய, வடமேற்கு திசையில். இந்த இடங்களை இணைத்தால் அப்படியே முக்கோண வடிவம் கிட்டும். அதனால்தான் அம்பாள் திரிகோணத்தில் வாசம் பண்ணுகிறாள் என்று சொல்கிறோம். திரிகோணத்தில் மேரு நிலையாவாக -ஸ்ரீ சக்கர நிலையாவாக - வாசம் செய்கிறாள் என்றால், அதன் நடுவில் இருக்கக்கூடிய மிக உயர்ந்த சிகரத்தில் அம்பாளுடைய ஸ்ரீபுரம்' ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஸ்தாபித்த ஸ்ரீபுரத்தில் அவள் வாஸம் செய்கிறாள்.

விச்ருங்கலா - ச்ருங்கலம் என்றால் விலங்கு. கட்டுதல் என்று அர்த்தம். எதனாலும் கட்டப்படாதவள், கட்டுப்படுத்த முடியாதவள். எல்லாவற்றையும் தாண்டியவள்.

தோன்றாத் துணை!

விவிக்தஸ்தா - மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் இருக்கிறாள் அம்பிகை. ஜனங்களே இல்லாத இடம் என்று நாம் கருதினாலும் அந்த இடத்தில் அம்பாள் இருக்கிறாள் - இது மேலோட்டமான பொருள். இன்னும் ஆழ்ந்து பார்த்தால், பக்தர்களுக்குப் பிரசாதமாக இருக்கக்கூடிய அம்பிகை, வேறு யாருமே இல்லாத இடத்திலும், நேரத்திலும்கூட தோன்றாத் துணையாகக் கூடவே வருகிறாள். இருட்டில் ஒருவரும் கூட வராமல் நாம் நடந்து சென்றுகொண்டிருப்பதாக நினைப்போம்... ஆனால் அம்பாள்கூடவே இருக்கிறாள்.

வீரமாதா - வீரர்களுக்குத் தாய்; வீரத்தை விளைவிக்கக்கூடியவள்.

வியத்ப்ரஸூ - ஆகாசத்தை சிருஷ்டி செய்தவள் என்கிற பொருளில் அமைந்த திருநாமம் **வியத்ப்ரஸூ**. மூன்று விதமான ஆகாசங்களைச் சாதாரணமாகக் குறிப்பிடுகிறோம். முதலாவது, கண்ணுக்குத் தெரியக்கூடியதான பௌதிக ஆகாசம். இரண்டாவது, நம் உள் உறையும் தகராகாசம். மூன்றாவது, பௌதிக ஆகாசத்தைத் தாண்டி இருக்கக்கூடிய பராகாசம். பரமாத்மாவின் பரம்பொருளின் - ஆகாசமாக இருக்கக்கூடியது பராகாசம்.

(வளரும்)

"அம்பாள், திரிகோணத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கிறாள்!"



● கவுதம்மேனின் முத்திரையோடு வந்திருக்கும் ஒரு அழகான காதல் கதை.

● மனிதனின் மென்மையான பக்கங்களில் மீது கவிதையாகப் புரள்கிறது.

● வயது குறைவான சிம்பு, ஒரு வயது அதிகமான த்ரிஷாவைக் காதலிப்பதை இத்தனை உணர்வுபூர்வமாகச் சொல்ல முடியுமா? என ஆச்சர்யமேற்படுத்துகிறார் கவுதம்.

● ஜெஸியாக வரும் த்ரிஷா, ஒவ்வோர் ஆணுக்குப் பின்னாடி இருக்கும் காதலியை நினைவுறுத்துகிறார். அது தோற்ற காதலாக இருந்தாலும் சரி.

● என்ஜினியரிங் படித்துவிட்டு சினிமா எடுக்க வரும் சிம்புக்கு, காதல் கை கூடியதா... சினிமா கை கூடியதா... என்பதாக நகர்கிற திரைக்கதை. என் இல்ளோ ஸ்லோ.

● ஏ.ஆர்.ரகுமானின் இசையில் பாடல் அத்தனையும் சூப்பர் டூப்பர். மன்னிப்பாயா, ஓமணப் பெண்ணே... இளசுகளின் ரிங்க்டோனாக மாறலாம்...

● இனி கொஞ்ச காலம், இதுபோல கதை சத்துள்ள படத்தில் சிம்பு நடிப்பது, அவருக்கும் ரசிகர்களுக்கும் நல்லது, த்ரிஷாவுக்கும்கூட.

● ஒளிப் பதிவு - மனோஜ் பரமஹம்ஸா. இவரது கேமராவே பாதி காதலைச் சொல்லிவிடுகிறது. விண்ணைத் தாண்டி வருவாயா - **காதல் வானம்.**

அருள்வாக்கு



சமயாசாரம், மதாசாரம் என்று சொல்லும்போது ஒரு மதத்தின் நெறி முழுவதையும் 'ஆசாரம்' என்பது குறிப்பிடுகிறது. ஆனால், பொதுவிலே ஒருத்தர் ஆசாரமாயிருக்கிறார் என்றால், மடி - விழுப்பு என்று இரண்டு சொல்லிக் கொண்டிருக்கிறோமே (வார்த்தையிலாவது இன்றைக்கு வரையில் இருக்கிற 'மடி' அடியோடு மறந்துபோய்விடக் கூடாதென்றுதான் இந்த உபந்நியாசமெல்லாம் பண்ணுவது) அதிலே மடியாயிருப்பது என்றுதான் வைத்துக்கொண்டிருக்கிறோம். மடி, விழுப்பு பார்க்கிறதுதான் ஆசாரம்; சாஸ்திரத்தில் சொன்ன பிரகாரம் ஒருத்தர் சிகை வைத்துக்கொண்டிருக்கிறார். புண்ட்ர தாரணம் (நெற்றிக்கிடுதல்) பண்ணிக்கொண்டிருக்கிறார். நாள் நட்சத்திரம் பார்த்துக் காரியம் பண்ணுகிறார். க்ளப்புக்கு (ஹோட்டலுக்கு)ப் போவதில்லை. எவர்சில்வரில் சாப்பிடுவதில்லை என்றால் அவரை ஆசாரமாயிருக்கிறார், (orthodox) என்கிறோம்.

இப்படியாக ஒரு

ஆசாரம்

மதத்தின் எல்லா நெறிகளுமே அதன் ஆசாரந்தானென்றாலும், வெளி வாழ்க்கையில் அதன் கட்டுப்பாட்டின்படி நடந்துகொண்டு, அதில் சொல்லியிருக்கிற வெளியடையாளங்களான சின்னங்கள் முதலியவற்றை மேற்கொண்டு நடந்து காட்டுவதே ஆசாரம் என்று வழங்குகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

கார்த்திகா கவிதைகள்



நத்தையின் சலனம்

நத்தையின் சலனம்போல்
நகர்ந்திருக்கக்கூடும்
தொட்டாச்சுருங்கி இலைகள்
விரிவதுபோல்
விடிந்திருக்கக்கூடும்
அவ்விரவு.
நொடி முள்ளின் ஒரு நகர்வில்
கடந்ததாகத் தோன்றிய,
நான் தூங்கியதாக
நினைவடுக்கில் பதிந்திராத
அந்த இரவில்
மீண்டுமொரு முறை தூங்கித்
தேட வேண்டும் - அந்தத்
தொலைந்த இரவின் கனவுகளை.

மரபு வழிக் கதைகள்

தீர்த்தக் கரைகளோடு
பேசிச் செல்லும்
தீராத கதைகளைக்
கடலில் சேர்க்கின்றன நதிகள்.
ஆதிநாள் முதல்
அவற்றைத்தான் ஓயாமல்
அலைகள் சொல்கின்றன
கரைகளுக்கு.
அதன்பிறகுதான்
குவியத் தொடங்கின
மணல்வெளியெங்கும்
மரபு வழிக் கதைகள்...

திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல்

மெய்ம்மையின் சங்கேதம்

மறுக்கப்படும் பகிர்தல்
மறதியின் மீதொளிரும் வண்ணப்பூச்சு
துயருறுவதாகக் காட்டும் பழம் மரபு
எனைப்புன்னகையின் முகமூடி
ஒரு ஒப்புதல் வாக்குமூலம்
சமாதான உடன்படிக்கை
போர் தொடுக்கும் முன்னான முரசறைதல்

தன்முனைப்பற்ற சரணடைதல்
குரூர தண்டனையின் ஒப்பனை முகம்
யாதொன்றின் சங்கேதமாகவும்
சில பொழுதுகளில் வெளிப்படும் -
'மன்னித்து விடு.'

வட்ட வட்டக் கனவு

பிரியமுள்ள பெண்மணிக்கு
பீங்கான் வளைகளோடு
பரிசளித்தேன் ஒரு புன்னகையை.
பெரிதாயிருப்பதாக அவர்
குறையின்றிச் சொன்ன நாளில்,
தோள் வரைக்கும் சென்ற வளைகள்
நானாக மாறி தனைக் கொஞ்சும்
கனவொன்றை அவர்
கண்டிருக்கக்கூடும்.
பிறிதொரு நாள்
மீளக் கிடைத்த பரிசுகளில்
புன்னகைத்துக் கொண்டிருந்தன
பீங்கான் வளைகள்.
மணிக்கட்டை மீறாத வளைகளை
உடையாமல் அணிந்துகொண்ட
அவ்விரலில்
ஒரு குழந்தையாக மாறி
அவர் தோள்களில் தவழ்ந்த
கனவினின்று விழித்தெழுந்தேன் -
வட்ட வட்டமாகத்
தீர்ந்து கொண்டிருக்கிறது
அவ்விரவு மெதுவாக.



* நான்கு திசைகளிலும் கண்ணுக்குத் தெரியாத வேலியிட்டு நெல்லைக் காத்தவர், ('ஏன்? எதற்கு? என்பதைக் கடைசியாகத் தெரிந்து கொள்வோம்), வேணுவனநாதர் என அறியப்பட்ட நெல்லையப்பர். அதனால்தானோ என்னவோ நெல்லையப்பர் கோயிலின் நான்கு திசைகளிலும் நான்கு இராஜகோபுரங்கள்.

* பால் குடம் சுமந்து சென்ற யாதவ குல பக்தனை, தினமும் மூங்கில் முளை உருவில் தடுக்கி விழ வைத்து, இறைவன் தம்மைக் காண்பித்துக்கொண்ட திருத்தலம்.

* வேணுவனம் என்றால் மூங்கில் காடு. அங்கே... தம்மை அடையாளம் காட்டிக்கொண்டதால், மூலவருக்கு வேணுவனநாதர் என்பது புராணப் பெயர்.


* நெல்லையப்பர் கோயில், திருநெல்வேலி மாநகரின் மையத்தில் இருக்கிறது. 850 அடி நீளவாக்கிலும், 756 அடி அகலவாக்கிலும் பரப்பளவு கொண்டது திருக்கோயில்.

* ஆறு சபைகள் உள்ளன. சிந்து பூந்துறை தீர்த்த சபை. மானூர் ஆச்சரிய சபை. அம்பிகை கோயில் முன்பாக செளந்திர சபை, கல்யாண சபை. சுவாமி சன்னிதி முன்பாக அழகிய ராஜசபை. சுவாமி சன்னிதியின் வாயு திசையில் தாமிர சபை.

* பஞ்ச சபைத் திருத்தலங்களில் தாமிர சபைத் திருத்தலம் இது. இங்கு தரிசனம் தரும் நடராஜர், தாமிர சபாபதி.

* கோயிலின் உள்ளே பொற்றாமரைக் குளம் இருக்கிறது. மதுரை மீனாட்சியம்மன் கோயில் நினைவில், யாரும் இங்கு பொற்றாமரை எங்கே எனத் தேட வேண்டாம். இங்கு சிவனே நீர் வடிவம் கொண்டுள்ளார். பிரம்மன் பொன்மலரோடு தோன்றிய தடாகம்.

* நெல்லையப்பர்





நெல்லையப்பர்

✱ திருக்கோயில் நந்தி பிரம்மாண்டமானது. சற்றே வித்தியாசமானது. சட்டென எழுந்து நிற்க யத்தனிக்கும் கோலம். கருவறையில் அருள்பாலிக்கும் நெல்லையப்பர், எந்தக் கணத்திலும் வெளியே வரலாம். எனவே, நெல்லையப்பரைச் சுமந்து செல்ல எப்போதும் தயார் நிலையில் வீற்றிருக்கிறது நந்தி.

✱ ஊஞ்சல் மண்டபம், மகா மண்டபம், நவகிரக மண்டபம், சோமவார மண்டபம், சங்கிலி மண்டபம், வசந்த மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் என அடுக்கடுக்காய் மண்டபங்கள்.

✱ அதில் ஒன்று, ஒலிநாத மணி மண்டபம். கருவறைக்கு முன்பாக அமையப் பெற்றுள்ளது. நுட்பம் நிறைந்த இசைத் தூண்கள். வெகு அபூர்வம். ஒருபுறம் உள்ள ஏழு தூண்களைக் கைகளால் தட்டும்போது, 'சரிகமபதநி' ஒலியெழும்பி வழிகிறது. மறுபுறத் தூண்களைத் தட்டும்போது மிருதங்க ஒலி வெளிப்படுகிறது.

✱ நெல்லையப்பர் தேர், காந்திமதியம்மன் தேர், விநாயகர் தேர், சுப்பிரமணியர் தேர், சண்டிகேசுவரர் தேர்... என மொத்தம் ஐந்து திருத்தேர்கள்.

✱ பொல்லாப் பிள்ளையார் சன்னிதி பிரசித்தம். விரதம் இருந்து பிரார்த்தித்துக் கொண்டால், பிள்ளைப்பேறு உறுதி என்பது ஐதீகம்.

✱ ஆறுமுகப் பெருமான் சன்னிதி விசேஷமானது. வண்ணமயில்





ஆட்சி!

மீது முருகன் - வள்ளி - தெய்வானை மூவரும் அமர்ந்த நிலையில் அருள்பாலிக்கிறார்கள்.

* மூலவர் சன்னிதி அருகே அரங்கன் துயில்கொண்ட நிலையில் தனி சன்னிதியில் காட்சியருள்கிறார். சைவ-வைணவ சங்கத் திருக்கோயில்.

* அம்பிகையின் பெயர் காந்திமதியம்மன். தினமும் ஆறு கால பூஜை. இதில் உச்சிகால பூஜையை அம்மனே நேரில் வந்து நடத்திக் கொள்வதாக ஐதீகம்.

* நின்ற திருக்கோலத்தில் அருள்பாலிக்கும் காந்திமதியம்மனுக்கு, பிரதி வியாழக் கிழமைகளில் தங்கப் பாவாடை சாத்தப்படுகிறது.


* மூலவர் நெல்லையப்பரின் லிங்கத் திருமேனியில் மேற்புறம் வெட்டப்பட்ட அடையாளம் காணலாம். மன்னன் ராம பாண்டியன் முன்னிலையில், ராமக்கோனார் எனும் யாதவர், தம்மைத் தடுக்கிய மூங்கில் முளையை வெட்ட, அதிலிருந்து ரத்தம் பீறிட, அப்போது தோன்றிய லிங்கத்தின் வெட்டுக் காயமே அது.

* ஏழெட்டு வருடங்களாக மழை பெய்யாது, பெரும் பஞ்சம். மக்களுக்கு உணவுக்கும் வழியில்லை. இறைவனுக்கு (வேணுவனநாதனுக்கு) நிவேதனத்துக்கும் வழியில்லை. நெல்லைச் சீமைக்கு வெளியிலிருந்து ஒரு புரவலர் நெல் மூட்டைகளை அனுப்பி வைக்கிறார். அர்ச்சகர் அதனைப் பெற்று, வெயிலில் காயவைத்துவிட்டு, குளிப்பதற்காக ஆற்றுக்குச் செல்கிறார். பெரும் மழை பிடிக்கிறது. காயவைத்த நெல் தண்ணீரில் அடித்துச் சென்றிருக்குமோ? என ஓடி வந்து பார்க்கிறார். நெல் காயவைத்த இடத்தில் வெயில். அதைச் சுற்றிலும் மழை கொட்டுகிறது. ஆனால், நெல் காய்கிறது. என்ன விந்தை இது? வேலியிட்டு நெல்லைக் காத்தவர், நெல்லையப்பர். ஊர் திருநெல்வேலி.

வாசகர் யோசனை: **லோகா சுப்ரமணியம், சிந்துபூந்துறை**

கோயிலின் பொற்றாமைரைக் குளத்தில் சிவனே நீர் வடிவம் கொண்டுள்ளார். இது பிரம்மன் பொன்மலரோடு தோன்றிய தடாகம்.





Now on Sale
Harry Potter
Special!
GOKULAM
THE Magazine for Children
March 2010 Rs.10/- Only

கார், கடலூரைக் கடந்து பாண்டியை நெருங்கிக்கொண்டிருந்தது. காற்றைக் கிழித்துச் செல்லும் காரின் வேகத்தைக் காட்டிலும் தேன்மொழியின் மனம் புயல் வேகத்தில் சுழன்றடித்தது.

அருணாச்சலம் மகளிடம் திரும்பி, ''என்னாச்சும்மா? ஏன் ஒரு மாதிரியா இருக்கே...?''

''ஒண்ணுமில்லப்பா...''

தொடர்ந்து இரண்டு முறை கேட்டார். ஒவ்வொரு முறையும் தேன்மொழி சிரித்து மழுப்பினாள். ஆனாலும் இதயத்தின் நடுக்கம் இன்னும் தீர்ந்தபாடில்லை. இன்னமும் நடுங்கிக்கொண்டேயிருந்தது. அவளால் இந்தத் தோல்வியைத் தாங்க முடியவில்லை. தோல்விதான். உயரத்தில், மிக உயரத்தில் அவள் ஏறிக்கொண்டிருந்த போது யாரோ முகத்தில் கைவைத்துக் கீழே தள்ளி விட்டாற்போல ஒரு வலி.

தள்ளியது யார் கை? காதலன் கையா? அல்லது கடவுளின் கையா?

சூர்யா உன் அந்தக் கண்களை காந்தக் கண்கள் என நினைத்தேனே, அதில் இத்தனை கல்மிஷமா? மனத்தை அரித்தது. கட்டுப்படுத்திப் பார்த்தாள். முடியவில்லை. கைகளை இறுக்க மூடி, வலிப்பு வந்தது போல அப்படியே பின் சீட்டில் சாய்ந்தாள்.

வாழ்க்கையில் மறக்க முடியாத முதுகு குத்தல். அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. அப்பாவிடம் சொல்லலாமா? எப்படிச் சொல்வது? துடித்து விடுவாரே...

ஏன் இந்தக் கடவுள் தன்னை மட்டுமே குறிவைத்துத் துரத்த வேண்டும்? கழிவிரக்கம் மனத்திலிருந்து கண்ணீராய்ப் பெருகி உதிர்ந்தது. ஒருகட்டத்தில் அது உடைந்து பெருகி கண்களைக் குளமாக்கிவிட அவசரமாய் காரின் கண்ணாடியை இழுத்து விட்டுத் தலையைத் திருப்பிக்கொண்டாள். முகத்தில் மோதிய காற்று கண்ணீர்த் துளிகளைப் பிடுங்கிச் சென்று அப்பாவின் பார்வையில் விழாமல் அவளைக் காப்பாற்றித் தந்தது.

''ஏம்மா... ஏசியை ஆஃப் பண்ணிடச் சொல்லவா?''

தேன்மொழி வெறுமனே தலையை அசைத்தாள்.

அஜயன் பாலா



பகல் மீன்கள்

22

அருணாச்சலம் உடனே டிரைவரிடம் திரும்பி... ''டிரைவர் அந்த ஏசியை ஆஃப் பண்ணு. கொஞ்சம் அந்தக் கண்ணாடியைக் கீழே இறக்கு. ஏம்மா ஒரு மாதிரியா இருக்கே?''

''ஒண்ணுமில்ல டாடி. சீக்கிரம் வீட்டுக்குப் போங்க. எனக்குத் தலை வலிக்குது...'' நான்கு ஜன்னல்கள் வழியாக மோதிய காற்று ஓரளவுக்கு அவளைக் காப்பாற்றியது. மனம் இலேசாகினாலும், துக்கம் தொண்டைக்குள் இன்னமும் குடை பிடித்தது... யார் அவன்? ஏன் தன்னை ஏமாற்ற வேண்டும்? எதற்கு இந்த நாடகம்? பர்சிலிருந்த வெறும் ஐயாயிரம் ரூபாய்க்காகவா இப்படிச் செய்வான்? ஹூம்... இல்லை...! அதைவிட வேறு ஏதோ ஒன்று! திட்டம் போட்டுத் தன்னை மயக்கி, பணக்காரியாக இருக்கும் தன்னைக் கல்யாணம் செய்வதற்காக இருக்கும். அப்படியானால், அன்று ஏழைப் பெண்ணைப் பற்றிப் பாடினானே. ஒருவனுக்குள் இரண்டு இதயம் இருக்குமோ...

பேசாமல் சூர்யாவுக்கு இப்பவே ஃபோனைப் போட்டுக் கேக்கலாமா!



ம்ம்ஹூம்! உஷாராகி விடுவான். அவன் ஏன் - எதற்கு இப்படிச் செய்தான் என்பதை முழுவதுமாக அவனிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டும். அதைத் தெரிந்து கொண்டபின்...

சத்தமில்லாமல் போலீசை அழைத்து ஒப்படைக்க வேண்டும். அவனை விட புத்திசாலி தான் என நிரூபிக்க வேண்டும்.

''தன்னால் அப்படிச் செய்ய முடியுமா?'' அன்று பீச்சில் பார்த்த சூர்யாவின் சிரித்த முகம் வந்து போனது.

முடியுமா... என்னதான் மோசமானவனாக இருந்தாலும் பாழும் மனசு அவனைக் காதலனாக ஏற்றுக் கொண்டதே...

சே, எப்படி இரண்டு மணி நேரத்தில் அவனைத் தூக்கிப் போட்டு விட முடியும்?

டாக்டர் ராமச்சந்திரனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. மோவாயில் கை வைத்து, தீவிரமாக யோசித்தார். அவரது வீட்டு மொட்டை மாடியில், பிரம்பு நாற்காலிகளில், அவருடன் அவரது மனைவி கமலாவும் எதிரே சூர்யாவும் அமர்ந்திருந்தனர். சட்டெனத் தமது வளர்ப்பு மகனைப் பார்த்தவர்...

''கல்யாணத்துக்குத் தேதி ஃபிக்ஸ் பண்ணிட்டாங்களா?''

''இல்லப்பா. ஆனா அவங்கப்பா சீக்கிரம் முடிச்சுடணும்கிற முடிவோட இருக்கார். இன்னிக்குக் கூட அவங்க அப்பாவும் அவளும் சொந்த ஊருக்குப் போய் இந்தத் தகவலை சொந்தக்காரங்ககிட்ட சொல்லிட்டு அப்படியே தேதி குறிச்சுட்டு வரப் போயிருக்காங்க.''

''அப்ப நீயும் அவளைக் கல்யாணம் பண்ணிக்க முடிவு செஞ்சிட்ட. அப்படின்னா, அந்த அம்மா முத்துலட்சுமி.''

டாக்டரின் மனைவி கமலா கோபப்பட்டாள்.

''என்ன நீங்களும் இப்படி யோசிக்கறீங்க. எனக்கென்னவோ அந்தப் பொண்ணு ரொம்ப நல்ல பொண்ணுன்னுதான் தோணுது...'' சூர்யாவிடம் திரும்பி...

''இங்க பாரு சூர்யா, யோசிக்கவே யோசிக்காதே. கல்யாணத்துக்குத் தயாராயிடு.''

''இல்லைடி. விஷயம் தெரியாம பேசாதே. அவனே குழம்பிக் கிடக்கிறான்... நீ வேற... டாக்டர் இப்படிச் சொன்னதும்...''

''மிஸ்டர் ராம் வெய்ட்'' கமலா தன் கணவனைப் பார்த்துக் கொஞ்சம் குரலை உயர்த்தினாள். டாக்டர், மனைவியின் குரல் உயர்வதைக் கண்டதும் அமைதியாக அவளைப் பார்த்தார். எப்போதெல்லாம் அவள் 'ராம்' என பெயர் சொல்லிக் கூப்பிடுகிறாளோ, அப்போதெல்லாம் அவள் உறுதியாக எதையோ முடிவெடுத்து விட்டாள் என அர்த்தம். கமலா பேசத் துவங்கினாள்:

''சூர்யாவுக்கு முத்துலட்சுமி அம்மா இல்லை. அது அவன் ஃப்ரெண்டோட அம்மா. அவங்க சின்ன வயசுல படிக்கும் போது ஏதோ உதவி செஞ்சிருக்காங்க. அவ்வளவுதான். அவங்க பையன் சாவுக்கு ஆயிரத்தெட்டு காரணம் இருக்கலாம். வெறுமனே அவன் கடிதத்தை மட்டுமே வெச்சுக்கிட்டு முடிவெடுக்கிறது முட்டாள்தனம். அங்க உண்மையில என்ன நடந்ததோ யாருக்குத் தெரியும்? அப்படியே இருந்தாலும் இந்தக் காலத்துல அதையெல்லாம் ரொம்பவும் பெரிசு படுத்தறது அவ்வளவு நல்லா யில்ல...''

மகாகவி பள்ளி!

நெல்லை ஜங்ஷனுக்கு அருகே இருக்கிறது மகாகவி பாரதியும், வ.உ.சியும் படித்த மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி. பாரதியின் படித்தபோது இருந்த பள்ளியறையை அவரது நினைவாக பெருமையோடு பராமரித்து வருகிறது பள்ளி நிர்வாகம். இப்போது போனாலும் பாரதி உட்கார்ந்து படித்த மரப் பலகையைக் காணலாம்.

- என்.கோமதி, நெல்லை.



கமலா பேசுவதில் ஓரளவு நியாயம் இருப்பதாக ராமச்சந்திரனுக்கு இப்போது பட்டது. அவளை ஆமோதிப்பதாகத் தலையை அசைத்தார்.

கமலா தொடர்ந்தாள்...

''என்னமோ சூர்யா, இந்தக் காலத்துல போய் என்னைக்கோ ஒருநாள் சோறு போட்ட அம்மாவுக்காக வருத்தப்பட்டு வாழ்க்கையிழக்கிறது சரியில்ல. ஒரு நிமிஷம் அந்தப் பொண்ணை நினைச்சுப் பாரு. அவ உன் மேல இவ்வளவு காதல் இல்லன்னா உன்னால் அன்னைக்கு மேட்டுப்பாளையம் ஸ்டேஷன்ல மனோ நிலை பாதிக்கப்பட்ட பிறகும் லவ் பண்றான்னா, கல்யாணம் பண்ணிக்க நினைக்கிறான்னா, அதுக்கு உன் மேல வெச்சிருக்கிற அபரிமிதமான அன்புதான் காரணமா இருக்க முடியும். அப்படிப்பட்ட அன்புக்கா துரோகம் செய்யப்போறே? அந்தக் காதலுக்கு



உண்மையா இருக்கிறதுதான் முறை. வேணும்னா சொல்லு, நானும் அப்பாவும் தாழம்பேடுக்குப் போய் முத்துலட்சுமியைப் பார்த்து விரிவா எடுத்துச் சொல்றோம்.''

''சரி... அதுக்கு முன்னாடி அவங்க பையன் சேகர் எழுதி வெச்ச லெட்டர் உண்மைதானா? அன்னிக்கு அப்ப என்னதான் நடந்தது? அதை தெரிஞ்சுக்கிட்டு போறது பெட்டர். ராமச்சந்திரன் சூர்யாவிடம், ''நீ நாளைக்கு அவனைப் பார்த்து தைரியமா அதைப் பத்திக் கேட்டுடு. ஒருவேளை அவ சொல்ற காரணம் வேற ஒண்ணா இருக்கலாம் இல்லையா?''

சூர்யாவின் தொலைபேசிக்கு ஒரு எஸ்.எம்.எஸ். வந்தது. ''ஜஸ்ட் ரிடர்ண்ட் கால் மீ டுமாரோ...'' - தேன்மொழி.

''அவகிட்டருந்துதான்...'' சூர்யாவின் கண்களில் மகிழ்ச்சி மின்னியது. எழுந்துகொண்டான். கைகளை உயர்த்தி சோம்பலை முறித்தான். டாக்டரிடம், ''அப்பா... அம்மா சொல்றது தான் சரி. நாளைக்கே அவகிட்ட நயமா இதைப் பத்திக் கேட்டுடறேன்.''

''ஆல் தி பெஸ்ட்...''

டாக்டர் கட்டை விரலை உயர்த்தினார். கமலம்மா முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

''சரி வா சாப்பிடலாம்... உனக்கு வேற டயம் ஆவுதில்ல...''

அது ஒரு புதுப்பிக்கப்பட்ட அரசு அலுவலகத்தின் திறப்பு விழா. அருணாச்சலத்தின் குளோபல் இன்டீரியர்ஸ் மூலமாக அந்தப் பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டதால், திறப்பு விழாவில் அவர்களுக்கும் ஒரு கேடயம் வழங்கப்படவிருந்தது. இன்விடேஷனைப் பார்த்ததும் தேன்மொழி தான் செல்வதாகக் கூற, அருணாச்சலத்துக்கு ஆச்சர்யம். இத்தனை நாள் மகளிடம் இல்லாத ஒரு பொறுப்புணர்வு எப்படி வந்தது? ஒருவேளை திருமண ஏற்பாடு அவளுக்

குள் இந்தப் பொறுப்புணர்ச்சியை வர வழைத்திருக்கலாம். மிகவும் சந்தோஷத்துடன், பேசாம சூர்யா தம்பியையும் கூட்டிட்டு போம்மா.''

''இல்லைப்பா வேணாம்... இது அஃபிஸியல். வினோத் போதும்..'' எனக் கூறிவிட்டு பட்டுப் புடைவையும் அதிகாரமிடுக்குமாக வித்தியாசமான கலவையில் போன மகளைப் பார்த்தது ஆச்சர்யப்பட்டார் அருணாச்சலம்.

வினோத்துடன் காரில் போய்க் கொண்டிருக்கும்போதே சூர்யா விடமிருந்து அழைப்பு வந்தது. எடுக்கவில்லை. மனசு படபடப்பாகியது. ரிங்டோனை கொஞ்சம் ஓட விட்டுப் பின் கட் பண்ணினாள்.

இரண்டாவது முறையும் வர கட் பண்ணி, சுவிட்ச் ஆப் பண்ணினாள்.

குழம்புவான். தடுமாறுவான். சாகட்டும்... ஆனால் அதற்கு முன் பல காரியம் பண்ணவேண்டும்.

அடுத்தமுறை வினோத்தை விட்டுப் பேசச் சொல்ல வேண்டும். அணு அணுவாகச் சித்ரவதைச் செய்ய வேண்டும். அதற்குள் அவனைப் பற்றி, அவனுக்குப் பின் இருக்கும் காரணம் பற்றி முழுமையாகத் தெரிந்துகொண்டு திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும்.

ஃபோனை எடுத்ததும் அருணாச்சலம், ''சொல்லுங்க மருமகனே'' உற்சாகமாய்ப் பேசினார். சூர்யாவுக்கு அவரது குரல் பதற்றத்தைத் தணித்தது.

''சார், தேன்மொழி வீட்ல இல்லையா... ஃபோன் பண்ணினேன். எடுக்கலை...''

''அதுவா ஒரு குட் நியூஸ். அவ இன்னையிலேர்ந்து டிமர்னு கம்பெனி பொறுப்பை எல்லாம் எடுத்துக்கிட்டாப்பா. இன்னிக்கு ஒரு கவர்மெண்ட் பங்ஷன் அட்டண்ட் பண்ண என் செக்ரட்டரி வினோத்தோட போயிருக்கா...''

சூர்யாவின் நெஞ்சுக்குள் ஒரு பந்து மோதிக் கீழே விழுந்து அடங்கியது.

''ஹலோ... என்னப்பா...'' மறு முனையில் அருணாச்சலத்தின் குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

(மீன்கள் துள்ளும்)

ஊசிக் கோபுரம்



நெல்லை ஜங்ஷனிலிருந்து பாளையங்கோட்டை செல்லும் வழியில், முருகன்குறிச்சியில் இருக்கிறது கதீட்ரல் பேராலயம். 1826-ஆம் ஆண்டு திறப்பு விழா கண்ட இந்த ஆலயம் 175 நாட்களில் கட்டி முடிக்கப்பட்டதாம். அழகும், கம்பீரமும் மிளிரும் இவ்வாலய கோபுரத்தின் அமைப்பை வைத்து மக்கள் ஊசிக் கோபுர ஆலயம் என்றே அழைக்கின்றனர்.

-பொருநை பாலு, நெல்லை.



கல்வித் தகுதி ஆர்.எம்.கே.வி.

திருநெல்வேலி

பொருநை பாலு

நாங்க அப்ப சென்னையிலதான் இருந்தோம். சித்தி வீடு மும்பையில. என்னை மும்பைக்குக் கூட்டிப் போயிருந்தாங்க என் அம்மா. சித்தி வீட்ல ஒரு மாசம் தங்கினோம். அஞ்சு வயசு விளையாட்டுப் புள்ளைத்தானே நானு? ஓடியாடி அக்கம்பக்கம் எல்லாரிடமும் பேசிப் பழகி, இந்தியில சூப்பரா பேச ஆரம்பிச்சுட்டேன். சென்னை வந்தோம். எனக்குச் சரியா தமிழ் பேச வரலை. என் அம்மாவுக்கு ரொம்பவே அதிர்ச்சி. ஒரு பிள்ளையார் கோயில்ல என்னை உட்கார வெச்சு வேண்டிக்கிட்டாங்க. வீட்டுக்கு ஒரு தமிழாசிரியரை வரவழைச்சுத் தமிழ் கத்துக் கொடுத்திருக்காக. இப்ப நானு நெல்லைப் பகுதிகள்ல பட்டிமன்றப் பேச்சாளர். இன்னிசைக் குழுவுல மேடைப் பாடகர்!'' எனக் கூறுகிறார் இருபது ஆண்டு கால வாசகர் பொருநை பாலு.

அம்மா உலகம்மாள், மனைவி ராஜேஸ்வரி, மகள் உலகம்மாள் என அன்பான குடும்பம். வசிப்பது திருநெல்வேலி. ''கல்கியோட தலையங்கம் ஒவ்வொண்ணும் இறையாண்மைக்குரியது. திருநெல்வேலி ஆரெம்கேவி ஜவுளி நிறுவனத்துல இருபது வருசமா வேலை பார்த்திருக்கேன். 2003ல சன் டி.வி. விசுவோட அரட்டை அரங்கம். நெல்லையில் மேடையில பேச அறுநூறு பேரு மனு அனுப்பிச்சிருக்காங்க. நானும் ஒண்ணு எழுதிப் போட்டிருந்தேன். அறுநூறு பேர்ல முப்பத்தாறு பேரை செலக்ட் பண்ணினாங்க. அதுலயும் வடிகட்டி இறுதிக்கட்டமா பதினெட்டு பேரைத் தேர்வு செஞ்சாங்க. அதுல நானும் ஒரு ஆளு.

அரட்டை அரங்கத் தேர்வு கமிட்டியில என்கிட்டே 'மனுவுல கல்வித் தகுதி RMKVனு எழுதியிருந்தீங்க. அது என்ன டிகிரி?'னு கேட்டாங்க. நான் பத்தாவது வரைக்கும்தான் படிச்சேன். பத்தொன்பது வயசுல ஆரெம்கேவி ஜவுளி நிறுவனத்துல வேலைக்குச் சேர்ந்தேன். அஞ்சல் வழியில எம்.ஏ., வரலாறு ரெண்டு வருஷம், சைவ சித்தாந்தம் ரெண்டு வருஷம், ஸ்போக்கன் இங்கிலீஷ்னு என்னைப் படிக்க வெச்சவரு ஆரெம்கேவி விஸ்வநாதன் சாரு. அதனாலதான் என்னோட கல்வித் தகுதி RMKVனு எழுதி அனுப்பிச்சேன்''னு சொன்னேன். அரட்டை அரங்கத் தேர்வு கமிட்டியினர் அசந்து போய்ட்டாங்க!'' என்கிறார் கல்கியின் தீவிர வாசகரான பொருநை பாலு.

க்ளினிக்கில் நோயாளி பார்த்தசாரதியும் டாக்டர் வெங்கடாசலபதியும்...

டாக்டர்: வந்து... நீங்க முதல்ல உட்காரணும்.

பார்: எனக்கு என்ன ப்ராப்ளம்?

டாக்: சிட் டவுன் ஃபர்ஸ்ட்...

பார்: உபசாரமெல்லாம் இருக்கட்டும். ஆயிரத்தெட்டு டெஸ்ட் பண்ணீங்களே... ரிஸல்ட் என்ன?

டாக்: லுக் ஹியர் மிஸ்டர்... பீ காம்...

பார்: ஹய்யோ... திருப்பியும் ஒண்ணுமே டயக்னைஸ் பண்ண முடியலையா?

டாக்: வாட் ஆர் யூ ஸேயிங்?

பார்: ஏன் காதுல குடும்பை ஜாஸ்தியாயிடுத்தா? காதுல விழலையா? என் பேர்ல சிம்பதி காமிடா வெங்கடாஜலபதி...

டாக்: நீங்க முதல்ல உட்கார்ந்தாத்தான் சொல்ல முடியும்.

பார்: ஓ.கே... என் சரீரத்தை உங்க குஷன்ல உக்காத்தி வெச்சுட்டேன் போதுமா...

டாக்: உங்க ப்ளட் டெஸ்ட்ல கொஞ்சம்...

பார்: உப்பு காரமெல்லாம் கூடவா? டேஸ்ட் பார்த்தீங்களா?

டாக்: ரிலாக்ஸ்... டெஸ்ட் பார்த்ததில 'ரெட்டிக்ளுலோடோத்தியல்' சிஸ்டம் வீக். இது ஒரு பெக்யூலியர் கேஸ்.

பார்: புரியறா மாதிரி பேசவே மாட்டீங்களா? என்ன வியாதி, மருந்து உண்டா கிடையாதா, குணமாயிடுவேனா?

டாக்: ப்ளீஸ் கொஞ்சம் சீரியஸா கேளுங்கோ...

பார்: ஏன்டா(!) (மரியாதை குறையுது) சொல்லி அனுப்பணுமா பையன்களுக்கு. அவ்வளவு சீரியஸாவா ஆயிட்டேன். திருவான்மியூரிலிருந்து உன் டஞ்ச அண்ணாநகர் க்ளினிக்குக்குத் தனியாத் தான்டா வந்திருக்கேன்.

சிரிப்பாலஜி

லதா சேகர்

டாக்: உங்க லிம்ப் நோட்ஸ், ஸ்ப்ளீன் இதெல்லாம் எக்ஸோஜெனஸ், எண்டோஜெனஸ், ஆண்டி ஜென்ஸுக்கு ரெஸ்பாண்ட் பண்ண மாட்டேங்றது. அதனால...

பார்: ஏன்டா கடன்காரா... உனக்கு சிம்பிளா பேசவே தெரியாதா? எனக்கு வந்திருக்கிற வியாதிக்குப் பேர் என்னடான்னா 'ஆன்ட்டி', 'ஜெல்லு', லோஷன்னு உளர்றே?

டாக்: ஐ அண்டர்ஸ்டாண்ட்... நீங்க அப்ஸெட் ஆயிட்டீங்க. இந்தக் கண்டிஷன்ல இப்படித்தான் இருக்கும்.

பார்: என் பேர்ல கருணை காட்டுடா ராஜா... நா சரியாயிடுவேனா?

டாக்: நீங்க தனியாவா இங்க வந்தீங்க?

பார்: ஏன்டா மகாபாவி... முடிவே

சொல்லித்

பண்ணிட்டியாடா மோசக்காரா... என்ன ரிஸல்டுடா? சொல்லித் தொலை வேண்டா...

டாக்: உங்க பாடில இம்யூனோக்ளோபுலின் ரெஸ்பான்ஸ் வந்து...

பார்: கொலைகாரப்படவா... அதுக்குள்ள 'பாடி'ன்னு டிஸைட் பண்ணிட்டயா... சாகறதுக்கு முன்னாடி எதனால செத்தோம்னு தெரிஞ்சுக்கிட்டுப் போறேன்டா...

டாக்: இம்யூனோக்ளோபுலின் வந்து உங்க பாடிலேர்ந்து லிம்போஸைட்ஸ் ஜெனரேட்...

பார்: (இடைமறித்து) அமீனா, குலாப் ஜாமூன், ஸைட்டு... இதெல்லாம் எனக்கு அறவே பிடிக்காத வார்த்தைகள்... நான்சென்ஸ்...

டாக்: யூ ஸீ... உங்க உடல்ல இருக்கற



தொலையேண்டா...

விம்போஸைட்ஸ் ஸெல்ஸ்...

பார்: டேய் அடிபடுவே. இந்தப் பேனா வாலேயே குத்திடுவேன். உங்கிட்டே ரொம்ப பொறுமை காமிச்சுருக்கேன். எருமை...

டாக்: ஆக்சுவலி ல்யூக்கோஸைட் ஸின்னு பெரிய்ய க்ரூப்பேயிருக்கு. அதோட வேலை என்னான்னா...

பார்: நீ கல்லடிபட்டு, நாய் குதறிதான்டா தவிப்பே.

டாக்: லிம்போஸைட்ஸ், பீ செல்ஸ், டீசெல்ஸ் பாத்தோஜென்னுடன் என்கவுன் டர் பண்ணும்போது...

பார்: உன்னை என்கவுன்டர்ல போட் டுத் தள்ளணும்டா... உனக்கு லாஸ்ட் சான்ஸ் தர்றேன். எனக்கு வந்திருக்கிற வியாதிக்கு என்ன பெயர்? சொல்லுடா...

டாக்: சரி...சரி... ரெட்டிக்குலோஎண்டோத் தியல் சிஸ்டம்தான் வேலையை...

பார்: ஹைர... இதென்ன புதுக்கதை? ரெட்டி ரொட்டின்னு... எனக்குக் கொலை வெறி வர்றதுக்குள்ள சொல்லுடா...

டாக்: வந்து...சிஸ்டம்ல செல்ஸ்...

பார்: (பேப்பர் வெயிட்டால் ஓங்கி மூக்கில்) இந்தா வாங்கிக்கோ!

டாக்: ஐயோ... அடிச்சுட்டீயே... மூக்கால ரத்தம் கொட்டுதே. எனக்கு என்ன ஆச்சு?

பார்: உனக்கு வந்தவுடன் என்ன ஆச்சுன்னு தெரிஞ்சுக்கணும்னு பறக் கறயா? நா முழுசா மூணு மணி நேரமா பொறுமையா(!) கேட்டேனே... சொன்னி யாடா? ●



டிஜிட்டல் தூரிகை!









'நெல்லையின் ரவிவர்மா' - இப்படித்தான் அழைக்கின்றனர் ஓவியர் முக்கூடல் மாரியப்பனை. உலகப் புகழ் ரவிவர்மாவின் ஓவியங்களை இம்மியளவும் வித்தியாசமின்றி வரைவதில் வல்லவர். இவர் தீட்டிய ஹம்ச தமயந்தி ஓவியத்தில் மனம் லயித்தோர் ஏராளம்.

''தமிழக அரசு, ஓவியத் துறையில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி, நகரங்களில் ஓவியக் கண்காட்சிகளை நடத்தவேண்டும். திறமையான வர்களை இனம்கண்டு அவர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்க வேண்டும்'' என்கிற மாரியப்பன், பத்து வயதிலிருந்தே தூரிகையைப் பிடித்தவர்.

வாசகர் யோசனை :
என்.கோமதி, நெல்லை.





"என்னங்க இன்னிக்கு என்னோட சமையல்! சாப்பிட வாங்க."

"கொஞ்சம் இரு. சாமி கும்பிட்டுட்டு வந்துடுறேன்."

- பாலாஜி கணேஷ்

சிங்கப்பூர் புடைவைன்னு சொல்றீங்க, மதுரைன்னு லேபிள் ஒட்டி இருக்கே!"

"சாரி மேடம். அவசரத்துல கடைப் பையன் மாத்தி ஒட்டியிருப்பான்."

- பி.கவிதா



செருப்புக்குச்



"பையனை திருநெல்வேலியில இருக்கற அவங்க பாட்டி வீட்டுல விட்டிருக்கக்கூடாது!"

"ஏன்?"

"அறிவா பேசிட்டு இருந்தவன், இப்ப அருவா, அருவான்னு பேச ஆரம்பிச்சிட்டான்!"

- வழுதூர் வைகை. ஆறுமுகம்

"பையன் என் பொண்ணை வைச்சுக் காப்பாத்துவானா?"

"கவலையேபடாதீங்க... பொண்ணு போட்டுக்கிட்டு வர்ற நகையை வைச்சாவது காப்பாத்துவான்."

- பாலாஜி கணேஷ்





"யோவ்! எதுக்குய்யா திடீர்னு மாவட்டச் செயலாளர் பதவியை ராஜினாமா பண்றே?"

"ஆத்துல உள்ள மணல் முழுவதையும் அள்ளிட்டேன். கல்குவாரியில் கல் பூராவும் உடைச்சு எடுத்துட்டேன். புறம்போக்கு நிலம் எல்லாத்தையும் வளைச்சுட்டேன். அப்புறம் எதுக்கு இந்தப் பதவி தலைவரே?"

- க. சரவணக்குமார்

சொந்தக்காரன்!



"வாசலைத் தாண்ட விடமாட்டேங்கறீங்களே... நீங்க மாப்பிள்ளைக்குச் சொந்தக்காரரா? பொண்ணுக்குச் சொந்தக்காரரா?"

"நீங்க போட்டிருக்கற செருப்புக்குச் சொந்தக்காரர்!"

- மா.கண்ணன்

சகாப்த நாயகன் சச்சின்!

1930களில் லண்டன் செய்தித் தாள்களில் "He is Out" என்ற வரி தென்பட்டால் யாரோ ஒரு அதிர்ஷ்டசாலி பந்துவீச்சாளர் பிராட்மெனை அவுட் ஆக்கிவிட்டார் என்று மக்கள் புரிந்துகொள்வார்களாம். தொண்ணூறுகளிலும் இந்த நூற்றாண்டிலும் "Another ton for him" என்ற வரி எங்கு



தென்பட்டாலும், மிகச்சுலபமாகப் புரிந்துகொள்ளமுடியும், சச்சின் மற்றொரு சதம் அடித்திருக்கிறாரென்று. இவ்வளவு சதங்களைக் குவிக்கிறாரே, சதம் அடிப்பது மிக எளிதான செயலோ என்று கிரிக்கெட் தெரியாதவர்கள் தவறாக நினைக்கும் அளவுக்கு, நூறு ரன்களை சச்சின் மிக எளிதாகவும் அழகாகவும் கடந்து நிற்பார். ஆனால் இதற்குப் பின்னாலிருக்கும் உழைப்பும், அர்ப்பணிப்பும் மிக அதிகம் என்பதை சச்சினைப் பற்றித் தெரிந்தவர்கள் மட்டுமே புரிந்துகொள்வார்கள். கிரிக்கெட்டை மட்டுமே சுவாசமாகக் கொண்டு வாழ்பவர் சச்சின்.

93 முறை சர்வதேசப் போட்டிகளில் நூறு ரன்களைக் கடப்பதென்பது மிகக்கடினம். டென்னிஸ் எல்போவால் பாதிக்கப்பட்டபோது, 'இனி சச்சின் அவ்வளவுதான்' என்றார்கள்; ஃபீனிக்ஸாக மீண்டு வந்தார்!

கிரிக்கெட் விளையாடும் சர்வதேச வீரர்கள் அனைவரும், எப்படியாவது உலகின் மிகச்சிறந்த 'இரண்டாவது' டெஸ்ட் கிரிக்கெட் வீரர் என்கிற இடத்துக்குத்தான் போட்டியிடுவார்கள். ஏனெனில் அவர்களுக்குத் தெரியும் எப்பொழுதும் முதலிடம் ஒருவருக்குத்தான். அது டான் பிராட்மென்! அவரது சராசரியை முறியடிக்க இன்றுவரை எவரும் பிறந்ததாகத் தெரியவில்லை. மிஸ்டர் கிரிக்கெட் என்று ஆஸி. வீரர்களால் செல்லமாக அழைக்கப்பட்ட மைக்கேல் ஹஸ்ஸி 80க்கும் மேல் சராசரியுடன் பிராட்மெனை எட்டிப்பிடிக்க ரன்கள் குவித்துக்கொண்டிருந்தார். உச்சிக்கு ஏறிய வேகத்திலேயே கீழே இறங்கி அமைதியாகி விட்டார்.

நிலாரசிகன்

ஒருநாள் போட்டியில் நம்பர் - 1 வீரர் சச்சின் ரமேஷ் டெண்டுல்கர் என்பதில் எவ்வித சந்தேகமும், எந்த வீரர்களுக்கும், ரசிகர்களுக்கும் இல்லை. இன்று மேலும் ஒரு வைரம், அவரது கிரீடத்தில்! 39 ஆண்டுகளாக ஒருநாள் போட்டியின் பெரும் ஜாம்பவான்களான ரிச்சர்ட்ஸ், லாரா, கில்கிறிஸ்ட், மார்க்வா, அன்வர், ஹெயின்ஸ், ஜெயசூர்யா, கங்குலி என எல்லோரின் கனவாகவும் இருந்து கடைசி வரை நிறைவேறாமல் போன 200 ரன்களை சச்சின் முதல் வீரராகத் தொட்டிருக்கிறார். மிகச் சிறந்த அணியான தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக இந்த ரன் குவிப்பு என்பதை, கூடுதல் சாதனையாகக் கொள்ளலாம். 194 ரன்களைக் கடந்து உலக சாதனை செய்தபோதும், மட்டையை உயர்த்தாமல் அடுத்த பந்தை எதிர்கொள்ள நின்றாரே; போட்டி முடிந்தபின், ''இந்த இரட்டைச் சதத்தை இந்திய மக்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்'' என்றாரே, அதுதான் சச்சின்!

முப்பத்தாறு வயதில் சச்சின் அடித்த மிகப்பெரிய சதம் இது.

36 வயதில் சச்சின் அடிக்கும் மூன்றாவது மிகப்பெரிய சதம் இது. இதற்கு முன் 2009ல் நியூசி.க்கு எதிராக 163, ஆஸிக்கு எதிராக 175. ரன்னர் இல்லாமல் 200 ரன்கள். ஒரு நாள் போட்டிகளில் அதிக பவுண்டரிகள்(25) என்று சச்சினின் சாதனை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. தற்போதைய போட்டியில் எந்த விதத் தவறும் செய்யாமல் சச்சின் விளையாடியதைப் பார்த்தபோது, கைதேர்ந்த ஓவியனொருவன் மிகவேகமாகவும் நேர்த்தியாகவும் ஓவியம் தீட்டு

வதைப் போலிருந்தது.

சிறிய வயதிலேயே தேசிய அணிக்கு விளையாட வந்துவிட்டதால் சச்சினால் அதிக உள்ளூர்ப் போட்டிகளில் பங்கேற்க முடியவில்லை. ஒருவேளை அப்படி பங்கேற்றிருந்தால், பல பந்துவீச்சாளர்களை இந்தியா இழந்திருக்கும். ஜிம்பாப்வே அணிக்கெதிரான போட்டி ஒன்றில் சச்சின் விக்கெட்டை எடுத்தவுடன், விண்ணுக்கும் மண்ணுக்கும் குதித்துக் கும்மாளமிட்டார் ஒலாங்கோ. அடுத்த போட்டியில் அவரது பந்துவீச்சை சச்சின் அடித்த அடியில் ஒலாங்கோ அணியை விட்டே போனார்.

2002ல் சேவாக் புகழின் உச்சியில் இருந்த சமயம். இந்தியாவுக்கு எப்படியும் 2003 உலகக்கோப்பையை அவர் வாங்கித் தந்துவிடுவார் என ரசிகர்கள் எதிர்பார்த்து இருந்தபோது பெரும் ஏமாற்றமே மிஞ்சியது. ஆனால், பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் சச்சின் அடித்த 98 ரன்களை உயிருள்ளவரை பாகிஸ்தான் வீரர்கள் மறக்க மாட்டார்கள், குறிப்பாக அக்தர்!

பிராட்மென் விளையாடுவதை நேரில் பார்த்ததை, தங்களது வாழ்நாளின் பொக்கிஷமாகக் கருதியவர்கள் உண்டு. அதேபோல் நாம் சச்சின் எனும் மாபெரும் கலைஞனை, சாதனையின் சிகரங்களில் அவன் ஏறியபோது, உடனிருந்து பார்த்து மகிழ்ந்திருந்தோம் என்பது எவ்வளவு அற்புதமான விஷயம்.

சச்சினிடம் இனியும் எதிர்பார்க்க என்ன இருக்கிறது? இரண்டு விஷயங்கள் மிச்சம் இருக்கின்றன. ஒன்று, டெஸ்ட் போட்டியில் இதுவரை சச்சின் 300 ரன்கள் அடித்ததில்லை. இரண்டு, இதுவரை எத்தனையோ கோப்பைகளையும் பதக்கங்களையும் ஸ்பரிசித்த சச்சினின் கரங்கள், உலகக் கோப்பையை ஸ்பரிசித்ததில்லை. இந்த இரண்டும் விரைவில் நடக்கும் என்று நம்பிக்கையுடன் இந்த மிகச் சிறந்த வீரரை - நம் காலத்தின் நாயகனை வாழ்த்துவோம். ○



காதில் விழுந்தவை



ராஜாவுக்கு செக்!

காங்கிரஸுக்கும் தி.மு.க.வுக்கும் பனிப்போர் நடந்து வருவதாக தில்லி தகவல்கள் கூறுகின்றன. இதற்குச் சொல்லப்படும் பல காரணங்களில், முக்கியமானது மத்திய அமைச்சர் ராஜா விவகாரம். இரண்டாம் தலைமுறை (2ஜி) அலைக் கற்றை விவகாரத்தில் அரசுக்கு 60,000 கோடி நஷ்டம் என்று பெரிய பரபரப்பு எழுந்து, அதற்குக் காரணம் யார்; பலன் பெற்றவர்கள் யார் என்ற விவாதம் இன்னமும் ஓயவில்லை. இந்த நிலையில் மூன்றாம் தலைமுறை (3ஜி) அலைக் கற்றையை ஏலம்விடுவதில் தாமதமாகி வருவதால் அரசுக்கு இதுவரை 35,000 கோடி நஷ்டமாம். 'தொலைத் தொடர்பு துறைக்கு காங்கிரஸைச் சேர்ந்த ஒருவர் கேபினட் அமைச்சராக இருக்க வேண்டும்' என்ற கருத்தோட்டம் காங்கிரஸ் மேலிடத்தில் இருக்கிறது. எனவே, 'ராஜாவுக்கு வேறு இலாக்கா கொடுக்கிறோம்' என்று தி.மு.க.வுக்குச் சொல்லப்பட்டதாம். இதற்கு தி.மு.க. உடன்படவில்லையாம். மேலும், தொலைத்தொடர்புத் துறையில் ஜூனியர் அமைச்சராக இருக்கும் ராகுலின் நண்பர் சச்சின் பைலட்டும், தன் பங்குக்கு இலாகாவில் நடக்கும் விவகாரங்களை ராகுலிடம் சொல்லி வருகிறார். தமக்கு எதிராக தில்லி பத்திரிகைகளில் வரும் செய்திகளுக்கும், தமது செயல்பாடுகளுக்குப் 'பிரேக்' போடும் விதத்தில் நடக்கும் பல செயல்களுக்கும் தயாநிதி மாறனே காரணம் என்று தலைமையிடம் சொல்லி எதிர்ப்புக் கணைகளைச் சுலபமாக முறித்துப் போடுகிறாராம் ராஜா. ''ஆனால் அது எவ்வளவு தூரம் உண்மை என்று எங்களுக்குத் தெரியாது. ராஜாவை அந்த இலாக்காவிலிருந்து விலக்கிக் கொள்வதன் மூலம் தி.மு.க. - காங்கிரஸ் உறவு சுமூக நிலையை அடைவதற்கான வாய்ப்பு இருக்கிறது'' என்கிறார் ஒரு காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர். இந்த நிலையில்தான் ஜெயலலிதா மத்திய அரசின் நடவடிக்கைகளைக் குறித்த தமது கடுமையான விமர்சனத்தைக் குறைத்துக் கொண்டு வருகிறார்.

1989க்குப் பிறகு புதுச்சேரியில் மதுக் கடைகள் ஏலத்தில் விடப்படவில்லை. ஆனால், இப்போது தொண்ணூறு கடைகள் ஏலத்தில் விடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது அரசு. இதில் முப்பத்து மூன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தலா ஒன்று, அமைச்சர்களுக்கு ஐந்து, தவிர, மூத்த அதிகாரிகள் உட்பட பலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதாம். அதைப் பெற்று தொழில் ஏற்கெனவே இருக்கும் மற்றொருவருக்கு விற்பனை செய்வதன் மூலம், பல லட்சம் வருமானம் தேடிக் கொள்ளலாமாம். பிழைக்கும் வழியை நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள்.

– சஞ்சயன்



நெல்லையப்பர் கோயிலில் அன்வர்...

நெல்லையப்பர் கோயிலின் உள்ளே நுழைந்து இடதுபக்கம் திரும்பினால், தெற்குப் பக்கம் அனவரதலிங்கம். இதன் பின்னணியில் ஒரு செய்தி. அன்வர் என்ற இஸ்லாமிய செல்வந்தர் தன் குதிரை வண்டியை நிறுத்துவதற்காகக் கோயில் சுவரின் ஒரு பகுதியை இடித்துத் தள்ளியிருக்கிறார். இது நடந்த அடுத்த வாரமே வயிற்றுவலி நோயால் அவர், பெரும் அவதிக்குள்ளாக, பல வைத்தியர்கள் பார்த்தும் குணமாகவில்லை. உடனே அவரின் மனைவி ஆலயச் சுவரை இடித்ததன் விளைவுதான் தீராத வயிற்று வலியென்று அறிவுறுத்த, மனம் வருந்தி தன் சொந்தச் செலவில் ஒரு லிங்கத்தைக் கொண்டுவந்து பிரதிஷ்டை பண்ணினாராம் அன்வர்.

இப்படி, அன்வர் வைத்த லிங்கமே கால ஓட்டத்தில் அனவரதலிங்கமாய்ப் பெயர் மாற்றமாகிவிட்டது என்கிறார்கள்.

ராகுல் பாராட்டிய மாணவி!



கடந்த ஆண்டு, பாளையங்கோட்டையில் ராகுல்காந்தி, கல்லூரி மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார். மொழி பெயர்ப்பாளரின் திணறலையும் தடுமாற்றத்தையும் பார்த்து முகம் சுளித்த ராகுல், 'என் பேச்சை மொழி பெயர்க்க உங்களில் யார் தயார்?' எனக் கேட்கிறார், பின் இருக்கையில் இருந்த சாராள் டக்கர் கல்லூரி மாணவி மைவிழி, கண நேரம் தாமதிக்காமல் வேகமாய்த் துள்ளி வந்து மேடை ஏறுகிறார். தங்கு தடையில்லாமல், துல்லியமாய், சரியாய் மொழி பெயர்த்துச் சொல்ல, ஆடியன்ஸ் மட்டுமல்ல; ராகுல் காந்தியே, மைவிழியின் துணிச்சலையும் தேர்ந்த மொழித்திறனையும் அந்த மேடையிலேயே பாராட்டிப் பேசினார்... விளைவு? மறுநாள் எல்லாத் தினசரிகளிலும் மைவிழி பாக்ஸ் நியூஸில் வந்து பரபரப்பாகப் பேசப்பட்டார். 'வாஞ்சி இயக்கம்' பாராட்டுக் கூட்டமே நடத்தி பெருமைப் படுத்தியது.



ஆட்டோ ராணிகள்:

காந்திமதி - ஜான்சிராணி: திருநெல்வேலி நகரில், முதன்முதலாக ஆட்டோ ஓட்டிய இந்த இணைபிரியா தோழிகள் மிகப் பிரபலம்.

பாளையங்கோட்டை சாராள் டக்கர் மகளிர் கல்லூரியின் முன்பு கடந்த ஐந்தாண்டுகளாக 'ஆட்டோ ஜாகை' வைத்திருக்கும் இவர்கள், வாழ்க்கையில் துணிந்து எடுத்த இந்த முடிவின் காரணமாக, வறுமைக் கோட்டுக்குக் கீழே தத்தளித்துக் கொண்டிருந்த தங்கள் குடும்பங்களைச் சற்றுத் தூக்கி நிறுத்தி நிம்மதிப் பெருமூச்சில் சந்தோஷமாய் இருக்கிறார்கள்.


''இந்தத் தொழிலில் நீங்கள் சந்தித்த பிரச்னைகள்?''

''இதுவரை எந்த அசம்பாவித சம்பவமும் எங்களுக்கு நடந்தது இல்லை. பல்வேறு மனிதர்களைச் சந்திப்பதால் வாழ்க்கையைப் பற்றிய தெளிவு கிடைச்சிருக்கு... ஆரம்பத்தில் மிகவும் கூச்ச சுபாவமாயிருந்த என் சிநேகிதி ஜான்சிராணி, இப்போது எதையும் சந்திக்கிற துணிச்சலைப் பெற்றிருக்கிறாள். ஆட்டோ வாங்க எங்களுக்குக் கடன் கொடுத்த கனரா வங்கிக்கு நன்றி. அந்தக் கடனின் பெரும் பகுதியைக் கட்டிவிட்டோம்...'' என்கிறார் காந்திமதி.

ஊமைத்துரை தப்பிச் சென்ற சிறை...

பாளையங்கோட்டையில் இப்போது அரசு அருங்காட்சியகமாய் இயங்கி வரும் இடம், வீர பாண்டிய கட்டபொம்மன் காலத்தில் ஆங்கிலேய ஆட்சியரின் சிறைச்சாலையாம்! இங்கே கைதியாய் அடைக்கப்பட்டிருந்த ஊமைத்துரை வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்பு வெறியில், விலங்கை உடைத்துத் தகர்த்தெறிந்து தப்பிச் சென்றாராம்.





தகவல், படங்கள்: **பி.ஜி.பி.இசக்கி**

மேஷம்:

கடல் கடந்து நல்ல செய்திகள் வரும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. புண்ணிய ஸ்தல யாத்திரை, குலதெய்வ வழிபாடு நிறைவேறும். உடல்நலம் மேம்படும்.

ரிஷபம்:

வாரத் துவக்கமே மகிழ்ச்சிகரமாக இருக்கும். தடைப்பட்டு வந்த திட்டம் கைகூடும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். ஞாபகமறதிக்கு வாய்ப்புண்டு. பிறரிடம் வாக்குவாதம் செய்யாமலிருத்தல் நலம்.

மிதுனம்:

தூர தேச அழைப்பு வரும். உங்கள் நடவடிக்கைகளில் வெற்றி கிட்டும். பணவரவு பெருகும். வீடு, நிலம் சம்பந்த மான விஷயங்களில் ஆதாயம் உண்டு. ஆரோக்கியம் மேம்படும்.

கடகம் :

மகிழ்ச்சி பெருகும் வாரம். பொருளா தார நிலை மேம்படும். உங்கள் சிந்தனை, செயல் வடிவம் பெறும். கடன் சுமை குறையும். வேலை உயர்வு கிட்டும்.

சிம்மம்:

மனக்கவலை, பணக் கவலை இரண் டும் தீரும். உடல்நலம் மேம்படும். நண் பர், உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். உங்கள் முயற்சிகள் வெற்றிபெறும்.

கன்னி:

கடன் சுமை சற்று அதிகரிக்கும். மறை முக எதிர்ப்புகள் வலுக்கும். உங்கள் முயற்சிகள் கடும் போராட்டத்துக்குப் பிறகே கைகூடும். நண்பர், உறவினர் வகை யில் இடர்ப்பாடுகள் உண்டு. வேலைச் சுமை அதிகரிக்கும். அவசரப்பட்டு வேலையை விட்டு விட வேண்டாம்.

துலாம்:

உல்லாசமான வாரம். மனத்திலிருந்த கவலைகள் மறையும். வீடு, மனை விவ காரங்களில் ஆதாயம் கிட்டும். உங்கள் செயல்பாடுகளில் சுறுசுறுப்பு கூடும். ஆரோக்கியம் சிறக்கும். குடும்பத்தில் குதூகலம் கூடும்.

விருச்சிகம்:

வேலைச்சுமை கூடும். ஆனால், அதில் ஆதாயமும் அதிகரிக்கும். உங்கள் பணி களில் பெருத்த வெற்றி கிட்டும். உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படும். பிரயாணத்தின் போது எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

தனுசு :

சுபகாரியங்கள் கைகூடும். கடன்களி லிருந்து விடுதலை பெறலாம். மனக்குழப் பங்கள் விலகும். மகிழ்ச்சி பெருகும்.

மகரம் :

கடன்கள் தீரும். நீண்ட நாள் வழக்குகள் முடிவுக்கு வரும். சுபச் செலவுகள் கூடும். வியாதிகள் குணமாகும். தொட்டதெல்லாம் வெற்றி பெறும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி கள் உண்டு.

கும்பம் :

செலவுகள் கட்டுக்கடங்கும். உடல் நலம், மனநலம் மேம்படும். இடமாற்றம் ஏற்படும். வேலைச்சுமை குறையும். உங் கள் எண்ணங்கள் யாவும் எளிதில் நிறை வேறும்.

மீனம் :

இல்வாழ்வில் இனிய நிகழ்வுகள் மிகும். வீடு, மனை விவகாரங்களில் வெற்றி உண்டு. உடல்நலம் மேம்படும். கவலையளித்து வந்த வழக்குகள் சாதகமாய் முடியும். ஆரோக்கியம் மேம்படும்.



தஞ்சை பரத்வாஜ்
நடக்குமென்பார்;
நடக்கும்!
07.03.10 முதல் 13.03.10 வரை

பசிபிக் கடலின் நடுப்பகுதியில் அமைந்த தீவு அது. அங்கு வசித்து வந்த பெனிஸ்டா என்ற சிறுவன் அதிர்ச்சி அடைந்தான். காரணம், அவன் வீட்டிலுள்ள தொலைக்காட்சியில் வெளியாகிக் கொண்டிருந்த ஒரு செய்தி. 'தூவாலு தீவு மூழ்கிவிடும்'.

பெனிஸ்டா அப்பாவிடம் ஓடினான். ''அப்பா நம்மிடம் பெரிய படகு இருக்குதா? வெள்ளம் வரப் போகுதாம். நாம உடனே தப்பிக் கணும்'' என்றான் பதற்றமாக. அப்பாவுக்குப் புரிந்தது.

''கவலைப்படாதே. இதெல்லாம் பல வருஷங்களா சொல்லிட் டிருப்பதுதான். ஒண்ணும் நடக்காது'' என்றார் ஆறுதலாக.

ஆனால், ஆண்டுகள் நகர, நகர பெனிஸ்டாவுக்கு தன் நாட்டில் நடந்து வரும் மாற்றங்கள் தெரிந்தன.

தேசத்தையே கடல் காவு வாங்குவதற்கு முன், வேறெங்காவது போய்விட வேண்டும் என்று முடிவு செய்கிறார். மிகவும் கஷ்டமான முடிவுதான். வாழ்நாள் சேமிப்பைச் செலவழித்து ஒரு வீடு கட்டி, அதைவிட்டு விட்டுப் போவது மேலும் சோகம்.

ஏதோ ஒரு நாடு. எங்கோ நடக்கும் மாநாடு. ஏதோ சில பத்திரிகை களில் சில பக்கங்கள். இவற்றோடு முடங்கிவிடுவதல்ல 'உலக வெப்பமய மாதல்' எனும் விபரீதம். நாளைக்கு நம்மையே நேரடியாகப் பாதிக்கக்கூடியது இது. இன்றைக்கே தூவாலுவைப் பாதித்துக்கொண்டிருக்கிறது, அவ்வளவுதான். பெனிஸ் டாவோடு தூவாலுவைச் சேர்ந்த பலரும் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக்குக் குடிபெயர்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களின் நாளைய கதி என்ன? தெரியவில்லை.

கடந்த பத்து வருடங்களில் நியூசிலாந்தை அடைந்தவர்கள் எண்ணிக்கை இரண் டாயிரத்தைத் தாண்டிவிட்டது. இது ஒன்றும் குறைவானது அல்ல. தூவாலுவின் மொத்த மக்கள்தொகையே கிட்டத்தட்ட பத்தாயிரம்தான் என்ற அடிப்படையில். முன்பு வேலை வாய்ப்புக்காக வெளிநாடு சென்றவர்கள் இப்போது உயிர்வாழ அப்படிச் செல்கிறார்கள். தண்ணீரில் மூழ்கி

ஜி.எஸ்.எஸ்.



தூவாலூ

வாமன தேசங்கள் 9



ராயல்டி தேசம்!

இறக்க யாருக்குதான் விருப்பம் இருக்கும்?

தூவாலு வேறு ஒரு காரணத்திற்காகவும் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள நாடு. வெறும் பெயரைக்கொண்டே கோடிக்கணக்கில் சம்பாதித்த ஏழை நாடு இது.

தூவாலு, நாட்டின் மொத்தப் பரப்பளவே 26 சதுர கிலோ மீட்டர்தான். வாடிகன், நாயுரு இவற்றிற்கு அடுத்ததாக, மிகமிகக் குறைந்த மக்கள்தொகை கொண்ட நாடு இதுவே தான். ஆக, உலகின் மூன்றாவது மிகச்சிறிய நாடு.

தனது வலைத்தளத்தின் பெயரை '.tv' என்று வைத்துக் கொண்டது தூவாலு. அறிந்தோ அறியாமலோ இந்தச் செயல் அதற்குக் கோடிகளைக் குவித்தது. தொலைக்காட்சி என்பதற்கும் இதுவேதான் சுருக்கம் என்பதால் பல்வேறு பிரபல சேனல்களும் தங்கள் முகவரியில் '.tv' என்பதைப் பயன்படுத்தத் தொடங்கின. இதற்கு ராயல்டியாக தூவாலு கொழுத்த பணம் சம்பாதித்தது. 2000 ஆண்டில் மட்டுமே இப்படி அது ஈட்டிய தொகை 5 கோடி டாலர்கள்!

ஏதோ இயற்கை வஞ்சித்ததை செயற்கையாவது (தொழில்நுட்பம்) ஈடுகட்டியதே என்று தூவாலு மக்கள் நினைத்திருந்தால் தவறில்லை. கனிம வளங்கள் மிகமிகக் குறைவு. சுற்றுலாவின் மூலம் அதற்குக் கிடைக்கும் தொகை, சொன்னால் சிரிக்கக்கூடிய அளவுக்குக் குறைவு. ஒதுக்குப் புறமாக இருப்பதாலோ என்னவோ ஆண்டுக்கு நூறு சுற்றுலாப்பயணிகள் வந்தாலே அதிகம். அப்படி வருபவர்களும் வேறு ஏதாவது நாட்டில் அரசு அதிகாரிகளாகவோ அரசுசாரா அமைப்பின் பணியாளர்களாகவோதான் இருப்பார்கள்.



நாட்டில் நதிகளும் கிடையாது. ஓடைகளும் கிடையாது. எனவே மழைநீர் சேகரிப்பு மிக மிக அவசியம். ஏற்றுமதி தென்னை மரங்களிலிருந்து கிடைக்கும் கொப்பரை மட்டும் தான்.

தூவாலுவில் ராணுவமும் கிடையாது. அரசியல் கட்சிகளும் கிடையாது.

ஆகா எளிமையான அமைதியான வாழ்க்கை என்று வியக்க வேண்டாம். 'எளிமை'? உண்மைதான். 'அமைதி'? அது எப்

ஐஸ்க்ரீம் விற்ற பிரதமர்!

* தீவுகளில் ஆங்காங்கே துருப்பிடித்த, புதையுண்ட கப்பல்களின் மிகுதிகளை இப்போதும் காணலாம். சில சிதைந்த விமானங்களும்கூட. இரண்டாம் உலகப் போரின்போது, பல்லாயிரக்கணக்கான அமெரிக்க ராணுவத்தினர் தூவாலு தீவுகளை தங்கள் ராணுவத் தளமாக்கி இயங்கினார்கள். அதன் அடையாளங்கள்தான் இப்போதைய மிச்ச சொச்ச 'புதையல்கள்'

* உலக வெப்பமயமாகுதல் குறித்தும், அதனால்உண்டாகும் விபரீதங்கள் குறித்தும் தூவாலு அரசு அவ்வப்போது பயிலரங்கங்கள் நடத்திக்கொண்டிருக்கிறது.

* அமைதியான தேசம். போக்குவரத்து என்று பெரிதாக எதுவும் கிடையாது. சிலரிடம் கார் உண்டு. பெரும்பாலும் 'கால் நடை'தான்.

* 2001லிருந்து 2002 வரை இந்தத் தேசத்தின் பிரதமராக இருந்த கோலோவா தலாகே அதற்கு முன் ஒரு ஐஸ்கிரீம் வியாபாரியாக இருந்தவர்.

* ஆண்டுக்கு 75 பேர் என்கிற அளவில் துவாலுவில் இருந்து தங்கள் நாட்டுக்குள் வந்து தங்கிவிட அனுமதிக்கிறது நியூஸிலாந்து.

* தூவாலு முன்னாளில் எல்லீஸ் தீவுகள் என்று அழைக்கப்பட்டது.

படி இருக்கும்? கடல் மட்டத்திலிருந்து 5 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கிறது இந்த நாடு. இதே வேகத்தில் கடல் மட்டம் உயர்ந்தால் அதிகபட்சமாக அடுத்த ஐம்பது வருடங்களில் நம் பூம்புகார் சந்தித்த விபரீதத்தை தூவாலுவும் சந்திக்கும்.

ஒரு காலத்தில் தூவாலு அடிமைகளின் நாடாக இருந்தது. 1860களில் இங்கிருந்து பல மக்களும் அடிமைகளாக்கப்பட்டு பிற நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுவதும், அதற்குப் பிறகு அவர்கள் என்னவானார்கள் என்பதே தெரியாமல் போவ



தும் வழக்கமான சோகங்களாயின.

முன்பு, தூவாலுவைச் சேர்ந்த மிக அதிகம்பேர் (800 என்பது அந்த நாட்டைப் பொறுத்தவரை 'மிக அதிகம் பேர்தான்') நாயுருவில் உள்ள பாஸ்பேட் சுரங்கங்களில் பணிபுரிந்து வந்தார்கள். நாயுருவின் கனிமவளங்கள் குன்றியவுடன் மீண்டும் 2006ல் வந்து சேர்ந்தார்கள். ஐரோப்பிய யூனியன்தான் இவர்களது வாபஸ் பயணச்செலவை ஏற்றுக்கொண்டது. அப்படி வந்தவர்களில் பலருக்கும் ஊதிய பாக்கி இருந்தது. அதை ஏற்றுக்கொண்டது தைவான். சம்பந்தமில்லாத ஒரு பகுதி இந்த செலவைச் சுமப்பானேன் என்று கேட்டால் காரணம் உண்டு. தைவானோடு நேரடியாக தூதரகத் தொடர்பு கொண்டுள்ள மிகமிகக் குறைந்த நாடுகளில் ஒன்று தூவாலு. இதற்கு மேலும் நன்றிக்கடனாக தூவாலுவின் மிகப்பெரிய கட்டடத்துக்கு நிதியுதவி செய்தது தைவான். சென்ற இதழில் ப்ருனே சுல்தானின் அரண்மனை. இந்த இதழில் வேறொரு வாமன தேசத்தின் மிகப்பெரிய கட்டடமான வெறும் மூன்று மாடி அலுவலகம்! வாமன தேசங்களில் வியப்புகளுக்குப் பஞ்சமேயில்லை.

(அடுத்த வாரம்: **உலகின் மிகச் சிறிய குடியரசு நாடு...**)



கவிதைகள்

கடையம்- மகாகவி பாரதியின் ஞான பூமி. அந்த மண் அவருக்கு மனைவி செல்லம்மாவை மட்டும் தரவில்லை. கவிதைகளையும், சில கனவுகளையும் தந்த பிரதேசம். அவர் கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகள் இந்த மண்ணில் வசித்திருக்கிறார். அவரின் ஞான முகத்தையும் கவிதைகளையும் தரிசிக்க இங்கே வந்திருக்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

அது, பாரதி புதுச்சேரியிலிருந்து கடையத்துக்கு வந்திருந்த சமயம். மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருக்கிற கடையம் பொதிகைச் சாரலின் குளுகுளு பிரதேசம். எனினும் பாரதி என்ற அக்னிக் குஞ்சை அடைகாத்தது அதிசயம்தான். பாரதியை ஆனந்தத்தில் ஆழ்த்திய வேதனையில் மூழ்கடித்த சில முக்கிய நிகழ்வுகள் கடையத்தில்தான் நிகழ்ந்திருக்கின்றன.

கடையத்தின் ராமர் கோயில் மதிற்சுவரில் ஏறி நின்றுகொண்டு, தெருவைப் பார்த்து, தன் கவிதைகளைப் பெருங்குரலெடுத்துப் பாடுவாராம் பாரதி. 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று காற்றாகக் கடையத்தைச் சுற்றி வந்த அவர் 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைக்கெட்ட மானிடரை நினைத்துவிட்டால்' என்று கொதித்தெழுந்ததும் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று நெஞ்சம் பெருமையால் விம்மிப் புடைத்ததும் இங்கேதான். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கனகலிங்கத்துக்குப்



செல்லம்மா வீடு



கடையம் வீதி

பூணூல் அணிவித்ததால் அக்ரஹாரம், பாரதியை ஜாதிப் பிரதிஷ்டம் செய்த போது அவர் ஊருக்கு ஒதுக்குப்புறமாக வாழ்ந்த கல்யாணத் தீர்த்த மலை இன்றும் இருக்கிறது. அங்கே இருக்கும் கல்யாண தீர்த்தத்தில் குளித்தபடியேதான் 'நிற்பதுவே நடப்பதுவே' பாடலைப் பாடி யிருக்கிறார். தீர்த்தத்தின் எதிர்ப்புறத்தில் வீற்றிருக்கிறாள் அவர் காணி நிலம் கேட்ட பத்ரகாளி. அவர் காலத்தில் நிறைவேறாத அந்தக் கனவு பிறகு நிறைவேறி இருக்கிறது. அந்தக் காணி நிலத்தில் இப்போது அர சாங்க நூலகம் இயங்கி வருகிறது. பாரதி குளித்த கிணறு. அவர் கேட்டது போலவே தென்னை மரம் எல்லாம் அங்கே இருக்கின் றன. கல்யாணத் தீர்த்த மலையில் மறைந்து வாழ்ந்த பாரதிக்கு அவரது மகள்தான்


காணிநிலம்

தந்த கடையம்!


காணிநிலத்தில் நூலகம்

உணவு கொண்டுபோய் கொடுத்து வந்திருக் கிறார். பாரதி வசித்து வந்த குகை இப்போதும் இருக்கிறது. அதில் ஒரு சாமியார் வசித்து வருகிறார். பாரதி, சரியான அப்பளப் பிரி யாராம். அப்பளம் அதிக அளவில் உற்பத்தி யாகும் கல்லிடைக்குறிச்சி, கடையத்துக்கு அருகில் இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். கடை யத்தில் பாரதி வாழ்ந்த வீடு இப்போது பல கை மாறி, அவர் வாழ்ந்ததற்கான சுவடின்றி இருக்கிறது. இப்போது பாரதி வாழ்ந்த வீட்டின் உரிமையாளர் பாரதி செல்லம்மாளின் புகைப்படத்தை வீட்டின் முகப்புத் தாழ்வாரத்தில் மாட்டி வைத்து, 'பாரதி நீ வாழ்ந்த மண்ணில் நாங்கள் வாழ்வதைப் பெருமையாகக் கருதுகிறோம்' என்று எழுதி வைத்திருப்பது சற்றே ஆறுதலாக இருந்தது.


பாரதியின் பத்ரகாளி

வாசகர் யோசனை: ராஜலட்சுமி, ஹஉப்ளி

ஊரெங்கும்

திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல்

தரையில் கூடு கட்டும் பறவைகளை கூந்தகுளத்தில் பார்க்கலாம்!

பறவைகள் எதில் கூடு கட்டும் என்று யாராவது கேட்டால், நம் பதில் மரம் என்பதாகத்தானே இருக்கும். ஆனால், ''தரையில் கூடுகட்டி வாழும் பறவைகளும் இருக்கின்றன'' என்கிறார் பறவைகளின் நேசர் பால் பாண்டி. எங்கே? நெல்லை மாவட்டம் நாங்குனேரிக்கு பதின்மூன்று கிலோமீட்டர் தொலைவிலுள்ள கூந்தகுளம் பறவைகள் சரணாலயத்தில். இந்தச் சரணாலயத்தை உருவாக்கியதில் முக்கிய பங்கு இவரது குடும்பத்துக்கு உண்டு. இந்தியாவிலிருக்கும், இருபத்திரண்டு சரணாலயங்களில் நெம்பர் ஒன் கூந்தகுளம். 132 ஏக்கர் பரப்பளவில் விரிந்திருக்கும் இச்சரணாலயத்துக்கு மட்டும், வருடத்துக்கு 203 வகையான பறவைகள் வருவதுண்டாம். சரணாலயத்தின் பரப்பளவு வேண்டுமானால் 132 ஏக்கராக இருக்கலாம். ஆனால், கூந்தகுளம் ஊரெங்கும் பறவைக் கூடுகள்தான். 2009 வருஷத்தில் மட்டும் 4632 கூடுகள். தை அமாவாசை, தைப்பூசம் இரண்டு நாட்களில்தான் பறவைகள் கூடு கட்ட முள் எடுக்கும் என்று மக்கள் நம்புகிறார்கள்.

''எங்க ஊர் பறவைகளோட சொர்க்க புரிங்க. குஜராத்தோட ஸ்பெஷல் பூநாரைகள். அங்க விட்டா இந்தியாவுல கூந்தகுளத்துலதான் அதைப் பார்க்கமுடியும். அக்டோபர்ல ஆரம்பிக்கிற சீஸன் ஏப்ரல்ல முடியுது. சீஸன்ல நைஜீரியா, சைபீரியா, மங்கோலியா, இந்தோனேஷியா ஜெர்மனி... போன்ற நாடுகள்லேர்ந்தெல்லாம் பறவைகள் கூந்தகுளத்தை நோக்கி வர ஆரம்பிச்சுடும். பறவைகள் அதிகமா வர்றதுனால தீபாவளிக்கு வெடிகூட வெடிக்க மாட்டோம். பறவைகள் எப்படா கூடு கட்டும்னு ஊர்ல இருக்கற ஒவ்வொருத்தரும் ஏங்குவோம். ஏன்னா பறவைகள் சரியான காலத்துல கூடு கட்டினா மழை சரியான நேரத்துல பெய்யும்னு அர்த்தம். பறவைகள் கூடு கட்





கூந்தகுளம் பறவைகள் சரணாலயம்

றதைப் பார்த்துத்தான் எங்க ஊர் க்கள் விதைப்புக்கே தயாரா வாங்க'' ன்கிறார்.

''ரொம்ப அபூர்வமான இந்தச் சரணாலயத்தை அரசாங்கம் இன்னும் கவனத்தோட பராமரிக்கணுங்க. இங்க பறவைகளைப் பார்க்க வர்றவங்களுக்கு உதவு றமாதிரி நல்ல திறனுடைய பைனாக்குலர் வேணும். லன்கண்டா பறவைகள், சீஸன் டைம்ல மட்டும் கரு வல மரங்கள்ல ஐந்தாயிரம் கூடுகளுக்கு மேல கட் டும். அப்ப அதோட எச்சங்களால மரங்கள் பட்டுப் போகும் வாய்ப்பு அதிகம். அதைத் தடுக்க நீர்கடம்பு மரங்களை நடணும். மேலும் வருஷத்துக்கு வருஷம் இங்க வர்ற பறவைகளோட எண்ணிக்கை அதிக மாகறதுனால கூந்தகுளம் மக்கள் வீட்டுக்கொரு மரம் வளர்க்கணும். இதுவரைக்குமே நானும் என் மனை வியும் சேர்ந்து ஆயிரத்து நூற்று முப்பது மரங்களை நட்டிருக்கோம்'' என்கிற பால்பாண்டியின் மனைவி பறவைகளைத் தாக்கும் வைரஸின் பாதிப்பினால் சமீபத்தில் இறந்துபோனார். இவர் மட்டுமே 2632 குஞ்சுப் பறவைகளை வளர்த்து ஆளாக்கி (பறவை யாக்கி)யிருக்கிறார். பால்பாண்டி, வன இலாக்காவில் 29 வருடகாலம் தற்காலிக ஊழியராகவே பணிபுரிந்து வருகிறார். இவருக்கு மாதச் சம் பளமாக அரசாங்கம் தருவது வெறும் 2500 ரூபாய்தானாம். ''என் மனைவியோட மருத் துவச் செலவுக்காக வட்டிக்கு வாங்கின அறுபதாயிரத்தை இந்தச் சம்பளத்தைக் கொண்டு எப்படி அடைக்கறது? எப்படிச் சாப்பிடுறது?'' என்று விரக்தி யாகச் சிரிக்கிறார். அந்தச் சிரிப் பில் கல்லடிப்பட்ட ஒரு தாய்ப் பறவையின் வேதனைக் கேவல் வெளிப்படுகிறது.

வாசகர் யோசனை:
கல்யாணி சுரேஷ்,
அம்பாசமுத்திரம்
படங்கள்: **சினிலோக்**



பறவைக் கூடு!

இருட்டுக்கடை



நெல்லையப்பர் கோயில் எதிரே. அந்தி வெயில் சாய்ந்து சுள்ளென முதுகில் படர்கிறது. ஆண்களும் பெண்களுமாய்ப் பூட்டியிருக்கும் கடை முன்பாக வரிசை கட்டி நிற்கிறார்கள். இது என்ன ரேஷன் கடையா? கேட்டால், ''இதாம்ல இருட்டுக் கடை அல்வா: உலக பேமஸ்ல'' என்கிறார் ஒருவர்.

நூறு வருஷம் இருக்கும், இந்தக் கடை ஆரம்பித்து! கிருஷ்ணசிங் இதனோட நிறுவனர். அவரது மகன் பிஜிலிசிங். இந்த இரண்டு பேரோட காலத்துக்குப் பிறகு, தற்போது நிர்வாகத்தை நடத்தி வருபவர் ஹரி சிங். பூர்வீகத்திலிருந்து ராஜஸ்தான் மாநிலத்துலேர்ந்து வந்தவர்கள் நெல்லையிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார்கள்.

''அந்தக் காலத்துல ஒரு அரிக்கேன் விளக்கை மட்டும் எரிய விட்டு இந்தக் கடையை நடத்தி வந்தார் என் அப்பா. அப்ப எல்லாம் சாயந்திரம் ஆறு மணியிலேர்ந்து ராத்திரி பத்து மணி வரைக்கும்தான் கடை திறந்திருக்கும். துவக்க காலங்கள்ல நெல்லை மக்கள், 'அந்திக் கடை'னு தான் சொல்லி வந்தாங்க. அதுக்கு கொஞ்ச வருஷம் கழித்து ஜனங்க என்ன நெனைச்சாங்களோ தெரியலை. இருட்டு நேரத்தில் மட்டும் திறந்து யாவாரம் நடக்குறதால, பொது மக்களே 'இருட்டுக்கடை'னு கூப்பிட ஆரம்பிச்சுட்டாங்க. உலகத்திலேயே வாடிக்கையாளர்களா பேர் வெச்சது எங்க கடைக்கு மட்டும்தான்!'' எனப் பெருமிதம் கொள்கிறார் ஹரிசிங்.

கடை வாசலில் பெயர்ப் பலகையோ, அதன் முகப்பில் மின்விளக்கோ கூட கிடையாது. சிறிய கடையின் உள்ளே அறுபது வால்ட் குண்டு பல்பு மட்டுமே. ''மின்சாரம் இருந்தும், அதுவும் நவீன மின்விளக்கு வசதிகள் ஏராளம் வந்தும், அநியாயத்துக்கு ஏனிப்படி அடம்பிடிக்கிறீர்கள்?'' என்றால்,

ஆத்துத் தண்ணி. அரைக்கி

''எந்தவிதமான எந்திரமும் இல்லாமல் கல் உரலில் போட்டுத்தான் கோதுமையை அரைக்கிறோம். சுத்தமான சம்பா கோதுமை, நெய், சர்க்கரை, தாமிரபரணி தண்ணீர் இவை நான்கும் ரொம்ப முக்கியம். முந்திரிப் பருப்பு அது... இது... என எக்ஸ்ட்ராவாக எந்தப் பொருளையும் சேர்ப்பதில்லை. நிறம் வேண்டும் என்பதற்காகக் கலர் பவுடர் எதையும் போடுவதில்லை. சம்பா கோதுமையை முதல் நாளே தண்ணியில் ஊற வைக்கணும். மறுநாள் உரல்ல போட்டு

ரகசியம்!



"இருட்டுக்கடை அல்வா சூப்பர்னு ஒரு நிரந்தர டிரேட் மார்க் எங்க மேல விழுந்திடுச்சு. அதை நாங்க ஏன் மாத்தணும்? கடைக்கு மின்சார சப்ளை வந்த பிறகும், ஒரே ஒரு குண்டு பல்புதான் மாட்டினாங்க என் அப்பா. அது ப்யூஸ் போனா, புதுசா ஒரு குண்டு பல்பு போட்டுடு வோம். அவ்வளவுதான். அதை இன்னிய வரைக்கும் கடைபிடிச்சு வர்றோம். மத்தபடி எங்க கவனம் முழுவதுமே, நாங்க தயாரிக்கற அல்வாவின் குவாலிட்டிய மெய்ன்டெய்ன் பண்ணிட்டு வர்றதுலதான் இருக்கும்" என்கிறார் ஹரிசிங்.

வாசகர் யோசனை:

இசக்கிமுத்து, நெல்லை

க்குவம்! நல்லா அரைக்கணும். அரைக்க அரைக்க கோதுமை பாலாக மாறி வரும். இந்தப் பாலை வடிகட்டி எடுத்து, பெரிய இரும்புச் சட்டியில் ஊற்றி, நன்கு கொதிக்க கொதிக்கக் கிளற ணும். அந்தப் பால் இலேசாகச் சூடானதும் சர்க்கரை போட்டுக் கிண்டணும். கிளறுவதை விட்டு விடக் கூடாது. பாலும் சர்க்கரையும் இறுகிக் கெட்டியான பதத்துக்கு வரும்போது, நெய் விட்டுக் கிளறணும். அல்வா குங்கும நிறத்தில் உருவாக, ஒரு இறுகலான பதத்துக்கு வந்ததும், இறக்கி ஒரு பெரிய தட்டில் ஊற்றி ஆற வைத்து, ஆறியபின் எடுத்துச் சாப்பிட்டால், அதாங்க இருட்டுக் கடை அல்வா!"



சிங்கத்தோடு புழங்கும் டைரக்டர் ஹரியோடு ஒரு சூடான பேட்டி...



* இயக்குநர் ஹரி

"ஒரிஜினல் சிங்கம் வேட்டை அடிக்கும். என்னோட 'சிங்கம்' உடனே ரியாக்ட் ஆகும். எனக்கு இது பத்தாவது படம். சூர்யாவுக்கு இருபத்தைந்தாவது படம். நானும் சூர்யாவும் மூன்றாவது முறையா சேர்ந்திருக்கோம். 'சாமி'க்குப் பிறகு போலீஸ் கதையில படம் பண்றேன். தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரா என பல மாநில போலீஸ்களும் படத்தில் வர்றாங்க.

என்னோட கேரியர்ல பெரிய ப்ரேக் கொடுத்தப் படம் 'சாமி'. அதை 'சிங்கம்' மிஞ்சணும். தேவிஸ்ரீ பிரசாத், வி.டி.விஜயன், கதிர், ப்ரியன், அருந்ததி அனுஷ்கா, பிரகாஷ்ராஜ் என எல்லா வெற்றியாளர்களும் சிங்கத்தின் மீது சவாரி செய்றாங்க. கிராமம், சிட்டி, டவுன் எல்லா களத்திலும் படம் பண்ணியிருக்கேன்.

பத்து படம் பண்ணீட்டீங்களே? இண்டஸ்ட்ரியில நினைச்ச இடத்தை அடைஞ்சுட்டீங்களா?

"நூறு படம் பண்ண டைரக்டர்கள் தமிழ் இண்டஸ்ட்ரியில் இருக்கும்போது நான் எம்மாத்திரம்? நான் பயணம் செய்ய வேண்டிய தூரம் நிறைய இருக்கு. அசிஸ்டெண்ட் டைரக்டரா இருந்தப்ப நிறைய கத்துக்க முடிஞ்சது. டைரக்டர் ஆனதுக்கப்புறம் நேரமே இல்லை."

உங்களை 'அருவா' டைரக்டர்னு சொல்றாங்களே...?

"ஸார் என்னோட படங்கள் வன்முறைப் படங்கள் கிடையாது ஆக்ஷன் படங்கள்தான். அரிவாளைத் தூக்கறது தான் எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வுனு முடிவு வெச்சாதான் அது வன்முறை. அரிவாளைத் தூக்கறவன் கடைசியில திருந்தற மாதிரி காட்டினா அது வன்முறை கிடையாது. படம் ஆரம்பிச்சதுலயிருந்து கிளைமாக்சுக்கு முன்னாடி வரைக்கும் அரிவாளும் ரத்தமுமா காட்டிவிட்டு, கடைசியில திருந்தற மாதிரி காட்டுறது நியாயமான்னு அடுத்த கேள்வி கேட்பீங்க. அதுக்காக ஒருத்தன் திருந்தறதையே படம் முழுக்கக் காட்டிகிட்டிருக்க முடியாது.

ஒரு குடும்பத்துக்குள்ள இருக்கறவங்களுக்குள் சண்டை வந்தா யார் ஜெயிச்சாங்க என்கிறது பெருமை கிடையாது. யாருமே தோற்கலைன்றதுதான் பெருமைன்னு 'தாமிரபரணி' படத்துல ஒரு டயலாக் வரும். இந்தப் படம் வந்த சமயத்துல தென்னாற்காடு மாவட்டத்துல ஒரு கிராமத் தேர்த்திருவிழா தொடர்பா இரண்டு பிரிவினர்களுக்கு இடையே பிரச்னை இருந்தது. இந்தப் படத்தைப் பார்த்த இந்த இரண்டு பிரிவு மக்களும், மேற்சொன்ன டயலாக்கை உணர்ந்து திருந்திட்டதா, எனக்குத் தெரிஞ்ச ஜூனியர் ஆர்டிஸ்ட் சொன்னார். சினிமாங்கறது நாம புரிஞ்சுக்கிற விதத்திலதான் இருக்கு."

தாமிரபரணி ஓடும் திருநெல்வேலி பற்றி...

"நான் வளர்ந்தெல்லாம் சென்னையில். ஆனால், என் சொந்த ஊர் திருநெல்வேலியை அடுத்த தூத்துக்குடி மாவட்டம். திருநெல்வேலி-தூத்துக்குடி மாவட்டங்

கவில் எனக்குச் சொந்தங்கள் அதிகம். சின்ன வயதிலிருந்து பார்த்துப் பழகிய திருநெல் வேலியை செல்லுலாய்டில் சொல் லணும்னு நினைச்ச என்னுடைய கனவு 'சாமி'யில சாத்தியமாச்சு. சினிமா ஷூட்டிங் குக்குத் தேவையான நிறைய லொக்கேஷன் திருநெல்வேலி மாவட்டத்துல இருக்கு. நகரமும் கிராமமும் சூழ்ந்த பகுதிகள் அங்க அதிகம்.

அதே மாதிரி நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்துக்காரங்களுக்கு வேகமும், வீம்பும் அதிகம். இதை தாமிரபரணியில சொல்லியிருக்கேன். இந்த நெகட்டிவ் விஷயங்களை மாத்திக்கிட்டா இந்த மாவட்டத்து மக்களை மிஞ்ச யாராலும் முடியாது.''

- ராகவ்குமார்



● 'சிங்கம்' படத்தில் சூர்யா...

"அருவாளைத் தூக்கினா பிரச்னை முடியாது!"

"எவர் பொருட்டும், எதை எதிர்பார்த்தும் இல்லாத வாழ்க்கையைக் கற்றுக் கொடுத்தது தாமிரபரணியும் அது சார்ந்த மனிதர்களும். காலையில் தூக்கம் கலைந்து எழும் அமைதியும், இரவில் தூக்கம் சுண்டி இழுக்கும் இடத்திலான அமைதியையும் அந்த நதி அழகாக எனக்குக் காட்டியிருக்கிறது. மனிதனின் ஆயுளைப் போலவே, தாமிரபரணியின் பயண தூரம் என்பது சுமார் நூறு கிலோ மீட்டர் தூரம்தான். ஆனால், வழிநெடுக எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அள்ளிக் கொடுக்கிற நதி'' என்கிறார் எழுத்தாளர் ராஜநாராயணன். இவர் நெல்லையின் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்தவர். விஜய் டீ.வி.யின் 'நடந்தது என்ன?' (விசித்திர வியாழன்) நிகழ்ச்சியை வழங்குபவர்.

''தாமிரபரணியின் பல முகங்களில் ஒன்று கல்லிடைக்குறிச்சி ஆறு. பார்க்கப் பார்க்கப் பரவசமும் - ஆனந்தமும்! சில சமயங்களில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஆற்றைப் பார்த்தால் அழுகைகூட பொங்கும். அப்போது ஒன்பதாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த சிறுவன் நான். ஒருநாள் கண்கள் சிவக்கச் சிவக்கக் குதித்துக் கும்மாளம் போட்டுவிட்டு வீட்டுக்கு ஓடிடணும் என்று கிளம்புகிற நேரம், ஆற்றின் நடுவே ரெட்டப்பாறையில் இருந்து அழைத்தார் ஒருவர். 'மேலே வா' என்று கைபிடித்து இழுத்து அருகே அமரவைத்து, 'தியானம் தெரியுமா? மூச்சுப் பயிற்சி? கண்ணை நிதானமா மூடிக்கோ... ஆரஞ்சு நிறம் கண்ணுக்குள்ள தெரியுதா? அப்படியே மூடி மூச்சை இழுத்து விட்டுக் கவனி.' தியானம் புரிபட்டது. மூச்சுக்காற்று புரிந்தது. தெய்வீகமான சிரிப்போடும், முகத்தோடும், பளிச்சென்ற கண்களோடும் 'இதெல்லாம் வாழ்க்கைக்கு வேணும்' என்றபடி, பாறையின் மீது இருந்த பொட்டலத்தில் இருந்து விபூதியை எடுத்து நெற்றி நிறையப் பூசிவிட்டு அவர் சிரித்த சிரிப்பை இப்போதும் என்னால் மறக்க முடியவில்லை. யார் இந்த சந்நியாசி? எப்படி வந்தார்? எங்கிருந்து வந்தார்? எதற்காக என்னை அழைத்து விபூதி பூசச் சொல்லித்தர வேண்டும்? என்பது அப்போது புரியவில்லை'' என்றவர், 'தியானம் பண்ணுறீங்களா?' பாபாஜி குகையைத் தேடி நெடும்பயணமாக இமயமலைக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் போது ரிஷிகேஷில் ஒரு சந்நியாசி கேட்டார்.

வாழ்க்கைன்னா என்ன... ஏன் இவ்வளவு குழப்பம், நிதானம்னா என்ன? இப்படிப் பல விஷயங்களை, சரளமான தமிழில் சுத்தமான தமிழில், பேசிக்கொண்டே வந்தவர் திடீரென்று தியானம் பண்ணுறீங்களா?' என்று கேட்டு நிறுத்தினார்.

'ஆமாம் சாமிஜி...' என்று சொன்ன எனக்குத் திடீரென்று ரிஷிகேஷில் இப்படிச் சுத்தமான தமிழில் பேசுகிற ஒரு சாமிஜியா? என்று பெரிய ஆச்சர்யம்!

'சாமிஜிக்கு எந்த ஊரு என்றேன்?' சட்டென்று கூர்மையானார். ''சந்நியாசிக்கு எந்த ஊரா இருந்தா என்ன? யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றவர் சில நிமிடங்களுக்குப் பிறகு... 'திருநெல்வேலி தெரியுமா?' என்றார். 'ஆமாம்

நதி தந்த

சாமிஜி என்றேன். 'திருநெல்வேலியிலேர்ந்து முப்பத்தஞ்சு கிலோ மீட்டர் தூரத்துல கல்லிடைக்குறிச்சின்னு ஒரு ஊர் இல்ல கிராமம்...' என்றார். எனக்கு விபூதி பூசிய அதே சாமி இவர்'' என்று வாழ்வின் விநோதத்தை வியக்கிறார் ராஜநாராயணன்.

''அப்பா பாலகிருஷ்ணன். தமிழாசிரியர். சிறு வயதில் ஆற்றங்கரைக்குக் குளிப்பதற்காக அழைத்துச் செல்லும் போதே பாடங்களைக் கற்றுக் கொடுத்தவர். அவர் வித்தியாசமானவர். 'ஏட்டுப் படிப்பு முக்கியம். அதைவிட வாழ்க்கைப் பாடம் ரொம்ப முக்கியம்' என்பார். 'இதையெல்லாம் விட மனோபாவம் முக்கியம்' என்பார்.

இந்தப் பாடமும் தாமிரபரணி ஆற்றங்கரையிலேயேதான். சென்னை வாழ்க்கையில் மூழ்கி ஆறு மாதங்கள் ஊர்ப் பக்கமே போக முடியாமல்... ஒருநாள் காலை ஊருக்குப் போய் இறங்கி வீட்டிற்குள் நுழைந்தேன். அதே வேகத்திலேயே அப்பாவின் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஆற்றுக்குப் போய் ஆசை தீர முங்கிக்குளித்து, மதியம் வரை மெய் மறந்து திடீரென்று வீட்டுக்குச் செல்லலாம் என்று கரையைப் பார்த்தால்... இருபத்தெட்டு வருடங்கள் அப்பா பயன்படுத்தி வந்த சைக்கிளை எவனோ திருடிக்கொண்டு போய்விட்டிருந்தான். அப்பா அதையும் ரொம்ப ஈஸியாக எடுத்துக்கொண்டார். 'போனா போகட்டும் விடு. இருபத்தெட்டு வருஷம்தான் அது என்னோட இருக்கணும்னு இருக்கு...' என்றார்.

இப்போது இந்த பரபரப்பான சத்தமான சென்னை வாழ்க்கையில், டீசல் வாசனை சாலைகளில் ஊர்ந்து ஊர்ந்து கடக்கும்போது, சலசலத்து ஓடும் தாமிரபரணியின் ஓசையையும், ஈரவாசனையுடன் கலந்து வரும் சுத்தமான காற்றுக்கும் மனது ஏங்குகிறது. இன்னும் எத்தனையோ பாடங்கள், எத்தனையோ மனிதர்கள். இப்போதும் தாமிரபரணி ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. யாருக்காவது எதையாவது கற்றுக்கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. காரணம் அது ஜீவநதி'' என்கிற ராஜநாராயணனின் குரல் அந்நதியின் குரலாகவே சலசலக்கிறது. ○



* ராஜநாராயணன்

வாழ்வு!

படம் பாரு... பாட்டைச் சொல்லு!



* மணிவண்ணன்

"ரசிகர்கள் என்றால் விசிலடிச்சான் குஞ்சுகள் என்ற கருத்து இருக்கிறது. ஆனால், ரசனையாளர்களும் மெத்தப் படித்தவர்களும் சிறந்த ரசிகர்களாக இருக்கிறார்கள்'' என்கிறார் கலைஞர் டீ.வி.யின் 'ரசிகன்' நிகழ்ச்சியின் இயக்குநர் மணிவண்ணன். எண்பது எபிசோட்கள் வெற்றிகரமாக இயக்கிய இவர் வைரமுத்து, கண்ணதாசன் தொடர்பான எபிசோட்களை உணர்வுபூர்வமாக விவரிக்கிறார்.

"வைரமுத்து ரசிகர்கள் 'ரசிகன்' ஷோவில் பங்கு பெற்றபோது உலகமெங்கும் அவரது ரசிகர்கள், தொலைபேசி, மின்னஞ்சல் மூலமாக அவரையும்





எங்கள் யூனிட்டையும் தொடர்புகொண்டு தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

எண்பதுகளில் வைரமுத்து, பாரதிராஜா, இளையராஜா கூட்டணியில் மலர்ந்த பாடல்கள் இந்த நிகழ்ச்சியின் ஹைலைட்.

பின்னர், வைரமுத்து எங்களுக்கு அளித்த பேட்டியில், 'இளையராஜாவுக்கு என் மனத்தில் மிகப் பெரிய இடம் இருக்கிறது. உலகமெங்கும் உள்ள தமிழர்கள் ஒவ்வொருவரின் மனத்திலும், ராஜாவாக வீற்றிருக்கிறார் நமது இசைஞானி. உலகில் எந்தப் பிரிவும் நிரந்தரமானதல்ல. எல்லாப் பிரிவுகளும் உறவின் ஆணிவேரை அசைத்துப் பார்க்காது. எனக்கும் ராஜாவுக்கும் உள்ள உறவு இதைப் போன்றது. எதிர்காலத்தில் நாங்கள் மீண்டும் இணையலாம்; அல்லது இணையாமல் போகலாம். ஆனால், எங்கள் நட்பு ஆழமானது' என்று நெகிழ்வுடன் கூறினார்.

'கண்ணதாசனும், நீங்களும் எங்கு ஒன்றுபடுகிறீர்கள்? எங்கு வேறுபடுகிறீர்கள்?' என்று அவரிடம் கேட்கப்பட்டபோது:-

'கண்ணதாசனின் பாடல்களில் அனுபவங்கள் மிகுதியாக இருக்கும். என்னுடைய பாடல்களில் அழகியல் தூக்கலாக இருக்கும்' என்றார் கவிஞர் வைரமுத்து. ''என் ரசிகர்களை ஒருங்கிணைத்த இந்த நிகழ்ச்சி மிகப் பெரிய ஆவணமாக இருக்கும் என்று கூறி ரசிகன் நிகழ்ச்சிக்கு நான் ரசிகன் என்று வைரமுத்து தன் கைப்பட எழுதிக் கொடுத்தார்'' என்கிறார் மணிவண்ணன்.

"கண்ணதாசனின் ரசிகர்கள் பங்கு பெற்ற நிகழ்ச்சியில்



ஒரு புதுமையைச் செய்திருக்கிறோம். நெல்லை ஜெயந்தா, நந்தலாலா, முனைவர் கிருதயா குகை மா.புகழேந்தி போன்ற பாடலாசிரியர்கள் நான்கு அணிகளாக பங்கு பெறுகிறார்கள். கண்ணதாசன், பாடல்களை எழுதும்போது, அது தொடர்பான விஷுவல், அவரது மனத்தில் இப்படி இருந்திருக்கலாம் என்ற அனுமானத்தில் ஓவியர் மணியம் செல்வன் சில பாடல்களுக்கு ஓவியங்களை வரைந்திருக்கிறார். அந்த ஓவியத்தைப் பார்த்து இது எந்தப் பாடலுக்கு என்பதைச் சொல்ல வேண்டும்.

உதாரணமாக, 'வாழ நினைத்தால் வாழலாம்' என்ற பாடலில் 'ஆழக்கடலும் சோலையாகும்; ஆசையிருந்தால் நீந்தி வா' என்ற வரி இருக்கும். இதற்கு மணியம் செல்வம், ஓர் இளம் பெண் கைநீட்டி ஓர் இளைஞனிடம் பாடுவது போலவும், அந்த இளைஞனுக்குப் பின்பகுதியில் கடல் அலைகளும், முன் பகுதியில் சோலைகள் பூத்துக் குலுங்குவது போலவும் தத்ரூபமாக வரைந்திருப்பார். மணியம் செல்வன் மனத்தில் கவியரசரின் ஆத்மா நுழைந்திருந்ததாலோ அல்லது கவியரசரின் முழுமையான ஆசீர்வாதம் கிடைக்கப் பெற்றதாலோதான் இது போன்ற ஓவியத்தை வரைந்திருப்பார் என்று உணர்கிறேன்'' என்று வியக்கிறார் மணிவண்ணன்.

● மணியம் செல்வன்

''தனது பால்ய கால நண்பரான கவியரசர் பற்றிய இந்நிகழ்ச்சியைப் பார்த்து ரசித்த முதல்வர் கலைஞர் என்னையும், எங்கள் யூனிட்டையும் பாராட்டியது பெரிய பாக்கியம். கண்ணதாசனின் பாடல்கள் வெறும் வார்த்தைகளல்ல. வாழ்க்கை அனுபவங்கள் என்பதை அவர்கள் ரசிகர்கள் மூலமாக இந்த நிகழ்ச்சியில் உணரமுடிந்தது. எதிர்காலத்தில் ரசிகன் நிகழ்ச்சியில் முதல்வர் கலைஞரின் ரசிகர்களை மையமாக வைத்து நிகழ்ச்சி நடத்த வேண்டும் என எண்ணியிருக்கிறேன்'' என்கிறார் மணிவண்ணன்

– ராகவ்குமார்

நெல்லை பிட்ஸ்!

நெல்லை பிட்ஸ்! நெ

ஓமனில் உவரி!

நெல்லை மாவட்டத்தின் ராதாபுரம் வட்டத்திலிருக்கிறது உவரி செல்வமாதா ஆலயம். ஒரு கப்பல் விமானம் தாங்கிய வடிவில் கட்டப்பட்டிருக்கும் இக் கோயில் ஒரு பாமரரின் மூளையில் உதித்த ஐடியா. உவரியில் வசிக்கும் மக்களில் பெரும்பான்மையோர் மீனவர்கள். சுனாமி தாக்குதலின்போது அவ்வளவாக சேதமடையாத ஒரே மீனவக் கிராமம் உவரி. அது செல்வமாதாவின் கருணை என்று ஊர் மக்கள் நம்புகின்றனர். உவரியில், மீன் பிடித்தலுக்கும் அடுத்தபடியாக அந்த ஊர் இளைஞர்கள் செய்யும் காரியம் வெளிநாடுகளுக்கு வேலை தேடிப்போவதுதான். மலேசியா ஹார்பரிலும், குவைத்திலும் ஏராளமான பேர் தொழிலாளிகளாக வேலை செய்கின்றனர். ஓமனில் மட்டும் எண்ணூறு பேர்களுக்கு மேல் வேலை செய்கின்றனராம். ஓமனில் இவர்கள் வசிக்கும் பகுதிக்குக் குட்டி உவரி என்று பெயராம்.

வா.யோசனை: **எம்.பிச்சையா,**
உவரி



வாஞ்சிநாதன் வீதி!

'வீரன்' வாஞ்சிநாதனின் வீடு செஞ்சிக் கோட்டையில் இருக்கிறது. இவ்வூர் கேரளாவின் திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு இணைந்திருந்தது. சி.சுப்ரமணியம், நிதியமைச்சராக இருந்த காலத்தில்தான் தமிழ்நாட்டோடு இணைக்கப்பட்டது. தமிழகத்தில் இருக்கும் மிகச் சிறிய பேரூராட்சிகளில் செஞ்சிக் கோட்டையும் ஒன்று. குறிஞ்சி, முல்லை, மருதம்... என்று மூன்று பகுதிகளும் வளமாக இருக்கும் பிரதேசங்களில் செஞ்சிக் கோட்டை முதன்மையானது. மதுரை யாதவர் கல்லூரி முதன்முதலாக செஞ்சிக் கோட்டையில் அமையவிருந்ததாம். பிறகு ஏதோ சில அரசியல் காரணங்களால் மதுரைக்குப் போயிற்றாம். செஞ்சிக்கோட்டையைத் தமிழகத்தோடு இணைக்கும்போது, சி.சுப்ரமணியம், "நீங்கள் புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டுக்கு வருகிறீர்கள். எனவே, புகுந்த வீட்டின் சௌகர்யம் பிறந்தவீட்டில் கிடைக்காது" என்றாராம்!

வாசகர் யோசனை:
வி.திலகம், நெல்லை





சங்கரன்கோயில் ஆடி தபசு!

ஆடித் தபசு அன்று அம்பாள் திருக்காட்சி, கோயிலின் தெற்குரத வீதியில் நடைபெறுகிறது. பெரும்பாலான கோயில்களில் மூலவருக்கு வலது புறத்தில் இருக்கும் அம்பாள் இங்கே இடது புறத்தில் வீற்றிருக்கிறாள்.

வாசகர் யோசனை:
பிரம்மநாயகம், சங்கரன்கோயில்

சங்கரன்கோயில் பிரியாணிக்கு மட்டுமல்ல, திருவிழாவுக்கும் ஃபேமஸ். திருநெல்வேலியில் நடக்கும் திருவிழாவும், இங்கிருக்கும் சங்கர நாராயணர் கோயிலில் நடக்கும் ஆடித் தபசும் ஒன்று. அன்று, இக் கோயிலில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ கோமதி அம்பாள் தேரில் வீதிவுலா வருகிறாள். அப்போது, அந்த வருடத்தில் சுற்று வட்டாரத்தில் அதிகமாக எந்தத் தானியம் விளைந்ததோ, அதை அம்மன் வரும் தேர் மீது வீசுகின்றனர் குடும்பப் பெண்கள்.

கிறங்கடிக்கும் கிருஷ்ணாபுரம்!



தமிழகத்திலேயே புவியின் காந்த ஈர்ப்பு சக்தி அதிகமாக உள்ள இடங்கள் எது தெரியுமா..? ஊட்டி, சென்னை, கடலூர், கிருஷ்ணாபுரம். முறையே, முதல் மூன்று ஊர்களையும் அனைவருக்கும் தெரியும். கிருஷ்ணாபுரம்? நெல்லையிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில், 13 கி.மீ தொலைவில் இருக்கிறது கிருஷ்ணாபுரம். புவியின் காந்த ஈர்ப்புச் சக்தியோடு, கலை ஈர்ப்புச் சக்தியும் கொண்ட ஊர் கிருஷ்ணாபுரம் என்பதை அருள்மிகு பிரபஞ்ச வெங்கடேசப் பெருமாள் கோயில் சிற்பங்களைக் காண்பவர்கள் கண்டிப்பாகச் சொல்வார்கள். நாயக்கர் காலத்தைச் சார்ந்த சிலைகள், வர்மக் கலையின் அமைப்பில் செதுக்கப்பட்டிருக்கின்றன. ராஜகுமாரியைக் கடத்தும் மலையகக் குறவனின் சிலையும், அவனைத் தாக்கும் சிலையும் காணக் காண கண்களை நிறைக்கின்றன. மன்மதன் - ரதியின் சிலைகள் காதல் ரசம் சொட்டும் அகவாழ்வின் அற்புதச் சின்னம். நெல்லை போனால், ஒருமுறை கிருஷ்ணாபுரம் போய் வருவதைக் கடமையாகக்கூடக் கொள்ளலாம்.

வாசகர் யோசனை: சொ.பொன்னுசாமி, ஸ்ரீவைகுண்டம்



* கி.ரா. * கலாப்ரியா * தி.க.சி.

தாமிரபரணி

நெல்லை மண் - தமிழகத்தின் முக்கியமான எழுத்தாளர்களைத் தன்னகத்தேகொண்டது. அதிகமான 'சாகித்ய அகாதெமி' விருது பெற்ற படைப்பாளிகள் வசிப்பதும் நெல்லை மண்ணில்தான். இதோ சில்லென்ற சில இலக்கியத் துளிகள்...

கலாப்ரியா (குற்றாலம்)

காலம் அப்படியே புரண்டு படுத்தது போன்ற துல்லியம் கொண்ட அற்புதமான பதிவுகள். கவித்துவமும், சுய எள்ளலும், கேலியும் கலந்த சரளமான உரைநடை. எவ்விதமான ஒளிவு மறைவுமற்று மனம் திறந்து எழுதப்பட்டிருக்கிறது. எவ்வளவு மாறுபட்ட மனிதர்கள், சுபாவங்கள். ஒரு ஆவணப்படத்தைக் காண்பது போல அத்தனை நெருக்கமாகவும் ஈரத்துடனும் திருநெல்வேலி எழுத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதைச் சாத்தியமாக்குவது கலாப்ரியாவின் மொழி. எதிரில் அமர்ந்து உரையாடுவது போன்ற நெருக்கத்தைத் தருகிறது.

(கலாப்ரியா பற்றிய கட்டுரையில் எஸ்.ராமகிருஷ்ணன்)

கி.ராஜநாராயணன் (இடைச்செவ்வல்)

முதன் முதலில் அந்தக் கிராமத்தில் ஒர் அரசியல் பொதுக்கூட்டம் நடந்தது. குடியின் கேட்டைப் பற்றி ஒருவர் பேசினார். 'முந்தியெல்லாம் இப்படிக் கடையை ஏலத்துக்கு விட்டு ஊர் தவறாமல் கள்ளுக் கடையை நிலையாக இருக்கும்படி யாரும் பண்ணியதில்லை. இது இந்த வெள்ளைக்காரன் வந்த பிற்பாடுதான். கள்ளை வியாபாரப் போட்டிக்கு உட்படுத்தியதால், போதை அதிகம் இருக்க வேண்டும் என்பதற்காக, செயற்கையாக அதில் உடம்புக்குக் கேடு விளைவிக்கும் பொருட்களைச் சேர்த்து விற்கும்படி ஆகிறது. மக்கள் போதையில் கிடப்பது கொள்ளைக்காரர்களான வெள்ளைக்காரர்களுக்கு நல்லது. அதனால் நாம் முதலில் நமது மக்களைப் போதையிலிருந்து மீட்க வேண்டும். அதோடு நமது குடும்பப் பொருளாதாரத்துக்கு இந்தக் குடி உதவவே உதவாது'' என்றார்.

(மேடையில் கி.ரா. சொன்னது...)



* கழனியூரன்
* கல்யாண்ஜி

லெட்டர்ஸ்!

கல்யாண்ஜி (நெல்லை)

பைக்களில் வந்த
தக்காளி கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள் மீதான
அக்கறை

(கல்யாண்ஜி கவிதைத் தொகுப்பிலிருந்து...)

தோப்பில் முகமது மீரான் (தேங்காய்ப்பட்டினம்)

தங்கள்தான் முஸ்லிம்களில் மேல்தட்டு வர்க்கம். இவர்கள் நாட்டுக்கார் மேல் தங்கள் ஆதிகத்தைச் செலுத்துவார்கள். நாட்டுக்கார், லெப்பைகளையும் நாவிதர்களையும் அடிமட்டத்தில் ஒடுக்கப்பட்டவர்களாக வைத்திருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் இடையே ஒரு சுவர். இந்தச் சமுதாயத்தின் மத்தியில்தான் தோப்பில் வாழ்ந்து வந்தார். மேல்தட்டு மக்களின் மனோநிலையும் ஒடுக்கப்பட்ட மக்களின் வறுமையும் இவரை வெகுவாகப் பாதித்தது. ''தங்கள் செய்த கொடுமை, முதலாளித்துவ அடிமை மனப்பாங்கு மேல் எனக்குக் கோபம். இதை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. எப்படி எதிர்ப்பது எனக்குத் தெரிந்த மொழியில் அவ்வளவையும் பதிவு செய்தேன்'' என்கிறார் தோப்பில்.

(தோப்பில் பற்றி தெ.மதுசூதனன்)



தி.க.சி.(நெல்லை)

''ஒவ்வொரு வருடமும் சென்னைப் புத்தகக் கண்காட்சியில் 'சே குவேரா' பற்றிய புத்தகங்கள் அதிக அளவில் விற்பனையாகின்றன. இப்போது



✱ விக்கிரமாதித்யன் ✱ தொ.பரமசிவன்

சேவின் உருவம் பொறித்த சட்டைகளும் விற்கப்படுகின்றன. வெகுஜன பத்திரிகைகளும், சே குவேராவைப் பற்றி எழுதுகின்றன. இதை மேம்போக்காகப் புரிந்து கொண்டு, சே-வை எல்லோரும் ஏற்றுக் கொண்டுவிட்டதாக நினைத்துவிடக்கூடாது. அப்படியிருந்தால் இந்நேரம் புரட்சி நடந்து முடிந்திருக்க வேண்டும். இது உயர்ந்த லட்சியங்களுக்காகப் போராடியவர்களை, கொள்கைகளற்றவர்களாக மாற்றும் போக்கு. பில்கேட்ஸ் வரலாறு எழுதப்படுவது போல சேவின் வரலாறும் எழுதப்படுகிறது. ஹாரிபாட்டர் போல சே ஒரு மார்க்கெட்டிங் யுத்தி. ஆனாலும் இந்தப் போக்கு இப்படியே நீடிக்காது. ஒரு தேக்கமும், அதன் பின்னான மாற்றமும் தவிர்க்க முடியாதது...''

(தி.க.சி.யின் பேச்சு)

தொ.பரமசிவன் (நெல்லை)

தென்னகாற்காடு மாவட்டம் ஸ்ரீ முஷ்ணத்தில் கோயில்கொண்ட திருமால் ஆண்டுக்கொருமுறை மாசி மகத்தில் கிள்ளை என்னும் ஊருக்குக் கடலாடச் செல்லும்பொழுது அவ்வூரிலுள்ள முசுலீம் சமாதிக்கு அடியவர்க்குரிய மரியாதையினை அளித்துச் செல்வது, இன்றளவும் வழக்கமாக நடந்து வருகிறது. ஸ்ரீ முஷ்ணம் கோயிலில் உள்ள பதினாறுகால் மண்டபத்தில் பல சிற்பங்கள் சிதைக்கப்பட்டுள்ளன. இது முசுலீம் படையெடுப்புக் காலத்தில் நிகழ்ந்தது என அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். இருப்பினும் பிற்காலத்தில் இக்கோயிலில் திருவிழா நடத்த மானியமாகச் சில நிலங்களை ஒரு முசுலீம் அளித்துள்ளார். ஆகையால் கோயிலில் இன்றும்கூட முசுலீம்கள் தேங்காய் உடைத்து இறைவனை வழிபடுவதாகக் கோயில் அர்ச்சகர் கூறுகிறார்.

(தொ.ப.எழுதிய அழகர் கோயில் புத்தகத்தில்...)

விக்கிரமாதித்யன் (தென்காசி)

வெற்றி/பெற்றவனும் புலம்புகின்றான் தனிமையில்/ஏன்/சும்மாவா வரும் வெற்றி/ சுமந்தாலும்/வருமா வெற்றி/ஒரு/ பெரும் நித்திரை/இரவில்/வரும் கனவு/ஆடிச் சூடி/ சூடச்சூட/வெட்டவெளி/பொட்டல் நிஜமில்லையோ

(விக்கிரமாதித்யன் கவிதைத் தொகுதியில்...)

கழனியூரன் (கழுநீர்குளம்)

கி.ரா.வின் சீடர். வீராணத்திலுள்ள துவக்கப் பள்ளியொன்றில் தலைமையாசிரியர். இவரது 'நட்சத்திர விழிகள்' கவிதைத் தொகுப்பு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டப் படிப்பு பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. நாட்டுப்புறவியல் சார்ந்த ஆய்வுகளையும், சிறு தெய்வங்கள் குறித்து களப்பணிகளையும் தொடர்ந்து செய்து வருபவர். கி.ரா.வுடன் இணைந்து இவர் தொகுத்துள்ள நூல் 'மறைவாய்ச் சொன்ன கதைகள்.'

நீங்கள் கேட்டவை
தராசு

ஆர்.ராஜ்குமார், திருவெறும்பூர்

''தமிழ் உணர்வு அடுத்த தலைமுறைக்கு)ல்லை,'' என்கிறாரே கலைஞர்?

தமிழுணர்வு இளம் தலைமுறையினரிடம் ,றைந்து வருவது குறித்துக் குறைப்பட்டு என்ன யன்? நவீன யுகத்துக்கு ஏற்ப தமிழை வளரச் செய ால் வருத்தப்பட இடமிராது. செம்மொழி மாநாடு ளினாலும் கலைச் சொற்களுக்கான அகராதிகளாலும் ிது சாத்தியமாகாது. மொழி பெயர்ப்புக்குப் பதில் மொழி மாற்றம் செய்ய முன் வரவேண்டும்.

● ஜெ.ஜெயராணி, மதுரை

? ''65 ஆண்டுகளாக வறுமை ஒழிப்புத் திட்டங்கள் இருந்தும் நாட்டில் வறுமை ஒழியவில்லை,'' என்று மூக சமத்துவப் படைத்தலைவர் சிவகாமி சொல்கிறாரே?

! பணம் பட்டுவாடா அடிப்படையில் மட் டுமே நடக்கும் 'வறுமை ஒழிப்பு'த் திட்டங் களால் வறுமை ஒழியாது. தொழில், வேலை வாய்ப்புப் பெருக்கத் திட்டங்களால்தான் மக்கள் தொடர் வருமானம் பெறுவர்; வறுமை ஒழியும்.

● அவ்வை ஜே.சஞ்சீவி பாரதி, கலிங்கியம்

? ''பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை என்பது இந்திய வரலாற்றில் கறுப்பு நாள்,'' என்கிறாரே நிதின் கட்காரி?

! மீண்டும் மீண்டும் சிவப்பு நாட்கள் தோன்றாதிருக் கவும், வெள்ளைநாள் கூடிய விரைவில் வரவும், பேச்சு வார்த்தையைவிடச் சிறந்த அஹிம்சை ஆயுதம் இல்லை என்பதை, ஆர்.எஸ்.எஸ். கட்காரி உணராத தினம் கறுப்பு நாளே! வாஜ்பாய் ஆட்சியின் அத்தியாயங்களைப் படித் தால் நிறம் மாறலாம்.

● எம். செல்லையா, சாத்தூர்

? 'ராஜபக்ஷே அளித்த வாக் குறுதிகளை நிறைவேற்றத் தவறி னால், அதைக் கண்டு தி.மு.க வேடிக்கை பார்க்காது' என கருணாநிதி எச்சரித்துள்ளாரே?

! ஆமாம், தி.மு.க வேடிக்கை பார்க்காது! சட்டசபையில் கண் டனத் தீர்மானமும் ஒரு நாள்

★ இடம் மாறிய பக்தி!



எஸ்.வி.சேகரின் கமெண்ட் எப்படி..?



* ஜொலிக்கும் ரத்தினம்!



* உணராத உண்மை!



* சுட்டும் குட்டும்!

'பந்த்'தும் அரசு நடத்தும். மக்கள் வேடிக்கை பார்க்கலாம்!

● ச.ராஜசேகர், செய்யாறு

? ஒருநாள் போட்டியில் இரட்டைச் சதம் அடித்து சச்சின் உலக சாதனை நிகழ்த்தியது பற்றி...?

! 'சாதனையைக் குறி வைத்து நான் ஆட வில்லை; எப்போதும்போல் என் கடமையைச் செய்தேன்' என்ற அவரது அடக்கம், பாரத ரத்னமாக ஜொலிக்கிறது. அதுவே போதும். அரசு வழங்கும் பாரத ரத்னா அவசியம் இல்லை. அது பற்றிய விவாதமும் தேவையில்லை.

● ஆர். அஜிதா, கம்பம்

? 'கூட்டணிக் கட்சி என்பதால் தி.மு.க.வின் குறைகளைச் சுட்டிக் காட்டுகிறோம்' என்று இளங்கோவன் கூறியிருப்பது குறித்து...?

! சுட்டிக் காட்டுவதை, திட்டித் தீர்ப்பதாக எடுத்துக்கொண்டு டெல்லிக்குப் புகார் செய்து, தமிழக காங்கிரஸார் தலையில் குட்டித் திருத்தும்படி செய்துவிடுகிறதே தி.மு.க! இந்தக் குறையை எங்கே போய்ச் சொல்லியழுவார்களாம்!?

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? 'கள்ளை உணவின் ஒரு பகுதியாக அறிவிக்க வேண்டும். இல்லையென்றால் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை எதிர்ப்போம்' என்று தமிழக - கள் இயக்கம் அறிவித்துள்ளதே?

! போகிற போக்கைப் பார்த்தால் உலகத் தமிழ் மாநாட்டினை எதிர்ப்போர் மாநாடு நடைபெறக் கூடும் போலிருக்கிறது! நிற்க. 'கள்' இறக்கி விற்பதற்கு வேண்டுமானால் கள் இயக்கத்தினர் போராடட்டும். அதற்கு உணவு என்றும் - மருந்து என்றும்- குளிர் பானம் என்றும் முத்திரை பெற முயற்சி செய்வது ஏமாற்று வேலை.

● எஸ். ராமசாமி, வடக்குதயிர்பாளையம்

? 'மாநில சுயாட்சி பற்றிய தீர்மானம் அண்ணா காலத்திலேயே சட்டசபையில் நிறைவேற்றப்பட்டதுதான். அதைத்தான் இப்போது தி.மு.க பொதுக்குழுவிலும் நிறைவேற்றியுள்ளேன்'' என்று கருணாநிதி கூறுகிறாரே - சட்டசபையில் நிறைவேற்றப்பட்டதற்கே நடவடிக்கை ஏதும் இல்லை என்கிறபோது, கட்சிப் பொதுக் குழுத் தீர்மானத்தால் மட்டும் என்ன பயன்?

! பலன் கருதி நிறைவேற்றப்படும் தீர்மானம் அல்ல அது. மத்திய அரசோடு உரசல் ஏற்படும் போதெல்லாம் தி.மு.க இந்த மாநில சுயாட்சி கோஷத்தை எழுப்பி, மத்திய அரசை மட்டம் தட்டி விட்டதாக நினைத்து ஆறுதல் அடையும் ஓர் உபாயம்.

● இரா.சக்கரபாணி, மதுரை

? ''தே.மு.தி.க. ஆட்சிக்கு வந்தால்



* ஆறுதல் உபாயம்!



* ஒழித்தும் ஒழியாதது!



* சொல்லாத செயல்திட்டம்

இரண்டு ஆண்டுகளில் எல்லா அத்தி யாவசியப் பொருட்களின் விலையையும் குறைப்பேன்'' என்று விஜயகாந்த் பேசி யுள்ளாரே?

கவனியுங்கள் - இரண்டு ஆண்டுகள் அவ காசம் கேட்டுள்ளார். ஆகவே, இது வெற்று வாக்குறுதி அல்ல என நம்பலாம். ஆனால், அதற்கான செயல்திட்டம் என்ன என்பதை அவர் அறிவித்தால்தான் காரிய சாத்திய மானதா என்று எடை போட்டுப் பார்க்க முடியும்.

● **ஆர். ராஜதுரை, சீர்காழி**

? நான் கடவுள் பக்தி உள் ளவன். அதற்காக தி.மு.க. என்னை ஒதுக்கிவிடவில்லை. சிறப்பான தலைமை இருக்கிறது.'' - எஸ்.வி.சேகரின் கமெண்ட் எப்படி...?

! தி.மு.க. அவரை விரட்டாமல் இருப்பது அவருடைய கலைஞர் பக்திக்காகவே அன்றிக் கடவுள் பக்திக்காக அல்ல!

☐ ரூ.150/- பரிசு பெறுபவர்:
கு.கணேசன், மறைமலைநகர்

★ ரூ.75/- பரிசு பெறுபவர்:
சி.என்.ரமாதேவி, சென்னை - 70

● **கு.கணேசன், மறைமலைநகர்** ☐

? முல்லைப் பெரியாறு பிரச்னையில் சுப்ரீம் கோர்ட் அறிவித்துள்ள ஐவர் குழுவில் தமிழக அரசு சார்பில் யாரும் இடம் பெற மாட்டார்கள் என்று முதல்வர் அறிவித்துவிட்டாரே - இதனால் தமிழ கத்துக்கு என்ன நன்மை?

! அந்தக் குழு அமைக்கப்படுவதே தமிழகத்துக்கு இழைக்கப்படும் அநீதி என்று கருதுவதால் தமிழக அரசு இவ் வாறு முடிவு செய்திருக்கிறது. ஆனால், சண்டைக்காரன் காலில் விழுவதை விட சாட்சிக்காரன் காலில் விழுவதே மேல். இக்குழுவில் இடம் பெறுவதன் மூலம் தமிழகத்தின் குரலை உயர்த் திப் பதிவு செய்வதென்பது சாத்திய மாகும்.

● **சி.என்.ரமாதேவி, சென்னை - 70** ★

? நிலுவையில் உள்ள வழக்குகளைக் குறைக்க, கூடுதலாக அரை மணி நேரம் உழைப்பதென்று நீதிபதிகளும் - வக்கீல் களும் எடுத்துள்ள முடிவு பாராட் டத்தக்கதுதானே?

! குவிந்துள்ள வழக்குகள் என்னும் யானைப் பசிக்குச் சோளப் பொரிதான் இந்தக் கொசுறு அரை மணி நேரம்! ஸாரமோ, பலமான சாட்சியமோ இல்லாத வழக்குகளுக்கு அனுமதி மறுத்தலும், வாய்தாக்கள் அளிப்பதில் கூடுதல் கட்டுப் பாடும் இணைகிறபோதுதான் மந்த நிலைமை சீரடையும்.


''அஞ்சு ஆம்பள மக்களைப் பெத்தாலும் கால்வயித்துக் கஞ்சிக்கு நீ படுற பாட்டைப் பார்த்தா ஈரக்கொலை கருவுதுடி செல்லாயி... ஒண்ணைப் பெத்தவளுக்கு உள்ளங்கையில சோறு; அஞ்சப் பெத்தவளுக்கு சந்தியில சோறுன்னு' சும்மாவா சொன்னாக... மாருலயும் நெஞ்சுலயும் போட்டு வளர்த்தவன் எம்புட்டுப் பேச்சுப் பேசிட்டுப் போறான்... அவனும் ரெண்டைப் பெத்து வைச்சருக்கான். நாளைக்குக் காலு ஒஞ்சு கை தேய்ஞ்சுக் கிடைக்கயில செரட்டையில கஞ்சு ஊத்துங்க... அப்பத் தெரியும் ஆத்தாவோட பவுசு...'' - குருவம்மா ஆறுதல் சொன்னாள்.

அவ பேச்சுலயும் ஞாயம் இருக்கு. 'பத்து மரக்கா வெதப்பாடு குளத்துப்பிறவு... மம்பட்டித் தூக்கி தண்ணிப் பாய்ச்ச வேண்டாம். கரையில கசியற தண்ணியிலயே வெள்ளாமை வீடு வந்து சேர்ந்திரும்...' பொன்னா வெளையிற பூமியப் பொண்ணு கலியாணத்துக்கு விக்கப் போறானாம் பெரியவன். மனசு கேக்கல செல்லாயிக்கி.

''ஏலேய்... உம் பொண்டாட்டிக்காரி காதுலயும் கழுத்துலயும் மினுக்கிட்டுக் கெடக்கிறதைக் கழட்டிப் போட்டாலே இருபது கழஞ்சி நகை சேரும். அங்க இங்க கெடக்குற பொட்டிப்பொடி சாமான போட்டு கரையேத்துறதை வுட்டுப்புட்டு, சோறு போடுற வயலை

கலப்பை




செ. செண்பகக்கண்ணு

வெல பேசுறீயோ...'' என்றாள் செல்லாயி. அம்புட்டுத்தான்.. அவன் அருமபொண்டாட்டி சிலுப்பிக்கிட்டு வந்துட்டா...

''இது எங்கப்பங்காரன் மாடா உழைச்சு மனசு நிறைஞ்சு போட்ட நக... உம் மவேன் உழச்சு ஒரு குன்னுமணி கூட போட்டது கெடையாது. இதைக் கழட்டிக் கொடுக்கிறது நடக்காத காரியம்.''

இம்புட்டு பேச்சும் பேசிட்டு ஒப்பாரி வைக்க ஆரம்புச்சுட்டா.

''யாத்தா உன்னைக் கையறுத்து போடச் சொல்லல... எங்கப்பன் சொத்து யாருட்ட கேக்கணும்?''

பொண்டாட்டி முன்னாலே பூசி மெழுகிப் பேசுறான். இடுப்புல சுமந்தவளவிட முந்தியில முடிஞ்சவள பெரிசா நினைக்கிற பய... ம்....

இன்னிக்கி வேணும்னா இது அவன் அப்பன் சொத்தா இருக்கலாம். ஆனா முப்பது வருஷத்துக்கு முன்னால இது செல்லாயி சொத்து. அவளைப் பெத்தவன் சங்கிலியும் சரப் புலியும் போட்டு இவள கட்டி வைக்கல... தன்னை மாதிரி ஒரு சம்சாரிக்கித்தான் மவளைக் கட்டிக் கொடுக்கணும்னு வெறும் பத்து மரக்கா வெதப்பாட்டோட மண்ணுல புரண்ட மாடசாமிக்குக் கெட்டி வைச்சான். மாடசாமி இவளைத் தொட்ட நேரமோ மண்ணைத் தொட்ட நேரமோ தெரியல. நஞ்ச, மேல நஞ்ச புஞ்ச மேல புஞ்சைன்னு சொத்துச் சேர ஆரம்பிச்சுது.

ஆஸ்திக்கு அடுத்தடுத்து அஞ்சு ஆம்பளப் பய பொறந்தாலும் அடிச்சு அழுவப் பொட்ட மவ இல்லாதது ரெண்டு பேருக்கும் வருத்தந்தான். ஓயாம உழைச்ச புருஷன் பெஞ்ச மழையில் காயாம கிடந்த தரையில வழுக்கி விழுந்து செத்துப் போனதை நெனச்சு இப்பவும் தொண்ட அடைச்சுக்கும் செல்லாயிக்கி.

அப்பனுக்கு வைச்ச தீ அரைகுறையா எரியிறப்பவே, சொத்தைப் பிரிச்சு சொவத்தைக் கலைச்சுப் பிச்சுக்கிட்டு மவனுக போயிட்டானுக. ஆத்தாவ யாரு வைச்சுக்கிறதுன்னு கேள்வி வந்தப்ப குலதெய்வமா வந்து அம்பலக்காரரு



வழி சொன்னாரு.

''யாரு கடைசி வரைக்கும் செல்லாயியை வைச்சுக் காப்பாத்துறானோ அவனுக்குத்தான் கரையடி பத்து மரக்கா வெதப்பாடு.'' பெரியவனும் அவன் பொண்டாட்டியும் நஞ்சைக்கு ஆசைப்பட்டு இவளைக் கூட வைச்சுக்கிட்டாக... அது பழைய கதை...

வள்ளலா பால் கறக்குறப் பசுவை வித்து, சுமந்த காளையையும் வித்து, இப்ப கைநிலமும் கைவிட்டுப் போகப் போறத நினைச்சு செல்லாயி நோயில விழுந்துட்டா.

'ஏழை சொல்ல இரப்பாளி கேட்குமா..?' இவ பேச்சு மேகத்துல போற காத்தோட போயிடுச்சு. அப்பன் கொடுத்த நெலம் நகையும் நட்டுமா... சீலத் துணியாவும் போயிடுச்சு.

''என்ன பாவஞ்செஞ்சனோ! இவ கூட கெடந்து மாரடிக்கேன்... நல்லாயிருக்கிறதே போகக்கின்னு போயிடுதுக. இது இருந்தும் கெடுத்தேன். செத்தும் கெடுத்தேன்ன கதையா...'' - புலம்புற மருமவளை நாக்கப் புடுங்குற மாதிரி நாலு கேள்வி கேட்க வாய் துடிச்சாலும் உடம்புல திராணியில்ல செல்லாயிக்கு.

ஆத்தா, போவப் போற நேரத்துல பெரியவனுக்குப் பாசம் பொத்துக்கிட்டு வருது. பக்கத்துலயும் இருந்து பாடு பாக்குறான். ஆத்தாவைப் பார்க்க மத்த மவனுகளுக்கு ஆசை இருந்தாலும் மதினியோட மலட்டுப் பேச்சுக்குப் பயந்து அந்தி கறுக்குற நேரத்துல

அசலூருக்காரன் மாதிரி வந்து பார்த்துட்டுப் போறானுக.

என்னைக்கும் இல்லாத கதையா மருமவ தொழுவத்துல கெடந்த கலப்பையை எடுத்து வெளக்கு மாத்தால தூசித் தட்டுறா. சோறு போட்ட சாமி, சளைக்காம புழுதி புரண்ட மண்ணப் புரட்டி எடுத்து பிழைப்புக்கு வழி காட்டுன கலப்பையை, சீதேவியை... விளக்குமாத்தால அடிக்கிறது பார்த்து செல்லாயோட ஈரக் கொலை கிடந்து துடிக்குது...

''என்னத்தைப் பாக்குற கெழுவி? பாழாப்போற கலப்பைய கிழத்தெரு மாரியப்பனுக்கு விலை பேசியாச்சு. ஐந்நூறு ரூபா... வர்ற தீவாளிச் செலவுக்கு ஆவும்ல...

உங்காத் தானுக்குத் தங்கல.. பத்ரகாளியா வர்றா...'' மருமவ பேச செல்லாயிக்கு வாய் கொளறி வார்த்தையா வருது...

''ஏலேய் நஞ்சையை வித்த... புஞ்சையை வித்த இந்தப் பாவி மவா ஏன்னு கேட்டனா? ஆனா புருஷன் தோள்ல போட்டுச் சுமந்த கலப்பை வெறும் மண்ணை உருட்டிப் புரட்டி நெல்லுஞ் சோளமுமா உண்டாக்குன கலப்பை... அவுகளா பாவிச்சு என் அண்டையிலயே வைச்சுத் தொட்டுத் துலங்குன கலப்பையை வித்தா உங்கப்பனை கூவி வித்ததுக்குச் சமம், நம்ம குடும்பத்து மானத்தையே வித்ததுக்குச் சமம்.''



ஒரு வாரம் போயிருக்கும். செல்லாயி படுத்துக் கெடந்தாள். அவ தலமாட்டில வந்து உட்காருதான் பெரியவன்.

'ஆத்தோய்... இங்கன பாரு... நல்லா கண்ணைத் தொறந்து பாரு.. என்ன ஆத்தா அப்பிடிப் பாக்குற... புதுக்கட்டுலு... உம் உசிரா நெனச்சியே கலப்பை அத நம்ம வேலு ஆசாரிட்டக் கொடுத்து கட்டுலா இழைக்கச் சொன்னேன். உம் மனசை நிறைக்கணும்னு பிராயாசைப்பட்டுச் செஞ்சது. சந்தோஷமாத்தா?'

செல்லாயி மரக்கட்டுல கையால தடவிப் பாக்குறா... கண்ணோரம் தண்ணி சேர்ந்து நிக்குது..

''ஏ புள்ள இங்க வா... ஆத்தாவைத் தூக்கி அந்தக் கட்டுல்ல படுக்க வைப்போம்..''

ரெண்டு பேரும் அந்தாரமா செல்லாயியைத் தூக்கிக் கட்டில்லக் கெடத்துராக.. செல்லாயி தூங்குறாளா அல்லது நெசமாவே தூங்கிட்டாளான்னு தெரியல... ஆனா மொவத்து நிறைய கொள்ள சந்தோஷம்! ●

இராமநாதபுரம் மாவட்டம் கிழக்கரை வட்டாரத்தின் பிரபலமான முஸ்லிம் பிரமுகர் அவர். ஒருகட்டத்தில் அ.தி.மு.க.வில் சேரும் ஆசையில் சில வருடங்களுக்கு முன் மாவட்டச் செயலாளர் சத்திய மூர்த்தியை அணுகியிருக்கிறார். சத்திய மூர்த்தியும் ஜெயலலிதாவுக்குப் பல கடிதங்கள் எழுதினார். 'உங்கள் தலைமையில் கட்சியில் அவர் இணைய விரும்புகிறார். நாள் ஒதுக்கிக் கொடுங்கள்' என்பது மாவட்டச் செயலாளரின் வேண்டுகோள். ஆனால், தலைமையிடமிருந்து ஒரு பதிலும் இல்லை. வெறுத்துப் போன மாவட்டச் செயலாளர் தம் முயற்சியைக் கைவிட்டார். அந்த முஸ்லிம் பிரமுகரும் வேறு இயக்கத்தில் இணைந்து விட்டார்.

''சிறு பான்மையோர் மத்தியில் அ.தி.மு.க.வுக்குச் செல்வாக்குச் சிறிது குறைவு. அதை அதிகப்படுத்த நான் முயற்சி எடுத்தேன். ஆனால், என் கடிதங்கள் ஜெயலலிதாவிடம் போய்ச் சேரவேயில்லை என்பது பின்னர் தெரியவந்தது. சமீபத்தில் காரணம் ஏதுமில்லாமலேயே என்னை கட்சித் தலைமை புறக்கணிக்கத் துவங்கியது. என் தரப்பை விளக்கக் கடிதங்கள் பலவற்றைத் தொலைநகலில் அனுப்பியும், ஒன்று கூட ஜெயலலிதாவின் கையில் கிடைக்கவில்லை. போயஸ் தோட்டத்தில் சசிகலா குடும்பத்தினர் உட்கார்ந்து கொண்டு, தணிக்கை செய்து, அவர்களுக்குப் பிடிக்காத நபர் விஷயம் என்றால் கடிதங்களையும், தொலைநகல்களையும் ஜெ.யிடம் காட்டாமலேயே கிழித்துப் போட்டு விடுவார்கள்'' என்கிறார் சத்திய மூர்த்தி. அ.தி.மு.க.வில் அமைச்சராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த சத்திய மூர்த்தி கடைசியில் வெறுத்துப் போய் மு.க. அழகிரி முன்னிலையில் சமீபத்தில் தி.மு.க.வில் சேர்ந்து விட்டார்.

சத்தியமூர்த்தி



''போகிறோம் அம்மா!''

யைச் சேர்த்துக்கொண்ட கையோடு அழகிரி, 'இது ஒரு ஆரம்பம்தான்; அ.தி.மு.க விலிருந்தும், வேறு பல கட்சிகளில் இருந்தும் இன்னமும் ஏராளமானவர்கள் தி.மு.க.வில் சேர இருக்கிறார்கள்' என்று சொல்லியிருக்கிறார்.



எஸ்.வி.சேகர்

விட்டார். மூத்த பிரமுகர்களோ, 'மாவட்டம் மாவட்டமாக கட்சிப் பிரமுகர்களைக் கூப்பிட்டு, அவர்கள் மனக்குறைகளைத் தலைமை கேட்டிருந்தால் இது போன்ற நிலை வந்திராது' என்று புலம்புகிறார்கள். ''1996-97ல் என்னை விட்டு எவ்வளவோ பேர் சென்றார்கள். 2001ல் மீண்டும் ஆட்சிக்கு வந்தேன். அது போல் மீண்டும் ஆட்சிக்கு வருவேன் என்று ஜெ சொல்கிறாராம். இனி, அ.தி.மு.க. தேறுவது கடினம். இதுவரை தி.மு.க.வுக்கு மாற்றாக அது இருந்த நிலையும் மாறிவிட்டது. காரணம், தமிழகத்தில் தி.மு.க. அரசின் நலத்திட்டங்கள் அந்த அளவுக்கு அடித்தட்டு மக்களைச் சென்றடைந்துள்ளன. இனி யாரும் ஜெ.வை மாற்று சக்தியாகக் கருத மாட்டார்கள். பாதிப்பைச் சரிசெய்ய ஜெயலலிதா இந்த சசிகலா குடும்பத்தை வெறுமனே ஒதுக்கி வைத்தால் மட்டும் போதாது. அந்தக் குடும்பத்தினரிடம் உள்ள சொத்தையெல்லாம் பிடுங்கிக் கொண்டு விலக்கி வைக்கணும். ஜெயலலிதாவால் அது

“சசிகலாவை மீறி அ.தி.மு.க.வில் யாரும் எது

ஏற்கெனவே எஸ்.வி.சேகர், அனிதா ராதாகிருஷ்ணன், கோவில்பட்டி ராதாகிருஷ்ணன், ஜெயங்கொண்டான் ராஜேந்திரன் ஆகிய எம்.எல்.ஏ.களும், . சத்தியமூர்த்தி போன்ற பல மாவட்ட முன்னணிப் பிரமுகர்களும் அ.தி.மு.கவைக் காயப்படுத்தியிருக்கும் நிலையில், 'இன்னமும் எத்தனை பேரை தி.மு.க. இழுக்கப் போகிறதோ' என்ற படபடப்புடன் இருக்கிறது அ.தி.மு.க. வட்டாரம். ஆனால், ஜெ.வோ யார் போகிறார்களோ அவர்கள் போகட்டும் என்று சீனியர் பிரமுகர்களிடம் சொல்லிவிட்டு கொடநாட்டு மலையில் ஓய்வெடுக்கச் சென்று

போலச் செய்யமுடியாது. எனவே, இனி கட்சி அவ்வளவுதான்'' என்கிறார் சத்தியமூர்த்தி. எம்.ஜி.ஆர். காலத்திலேயே கட்சியில் இணைந்த மூத்த பிரமுகர் இவர்.

கட்சியிலிருந்து விலகும் பலர் ஜெயலலிதாவைச் சந்தித்து நிலைமையை விளக்கவோ, குறைகளைச் சொல்லவோ சசிகலா குடும்பத்தினர் தடைக்கற்களைப் போடுவதாகச் சொல்லியே விலகுகிறார்கள். ஆனால், அ.தி.மு.க.விலிருந்து விலக்கப்பட்ட எஸ்.வி.சேகரின் பிரச்னை வித்தியாசமானது. ''நான் ஜெயலலிதாவை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புப் பெற்றவன். அப்படி வாய்ப்புக் கிடைக்கப் பெற்ற என்னையே, சில மாவட்டப் பிரமுகர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டு அவமானப்படுத்தியது சசிகலா குடும்பம். இனி, பல அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள், தி.மு.க.வில் சேருவார்கள். காரணம், அவர்களால் மக்களுக்கு நன்மை எதுவும் செய்ய முடியவில்லை. மக்கள் பிரச்னைக்காகக் கூட அமைச்சர்களையோ அதிகாரிகளையோ சந்திக்கக் கூடாது என்கிறார் ஜெ. ஆனால் சசிகலா குடும்பம் நடத்தும் சாராயத் தொழிற்சாலை மட்டும் தமிழக அரசுக்கு சரக்கு

...ய்துவிட முடியாது.”

கள் விற்கும். கொடநாட்டில் மின் பிரச்னை என்றால் அமைச்சர்களையும், அதிகாரிகளையும் அணுகுவார்கள். ஜெ.வை எதிர்த்தவர்கள் கூட மீண்டும் அ.தி.மு.க.வில் சேரமுடியும். ஆனால், சசிகலாவை எதிர்த்தவர்கள் மீண்டும் சேரவே முடியாது. தி.மு.க.வின் சாதனைகள் காரணமாக, இனி யாரும் அந்தக் கட்சியை அசைக்க முடியாது. பெங்களூருவில் நடக்கும் சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெ.வுக்குத் தண்டனை கிடைக்கும்'' என்று உறுதியுடன் சொல்கிறார் சேகர்.

விலகும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வருத்தம். கட்சிக்குச் சம்பந்தம் இல்லாத சசிகலா உறவினர்கள் பொறுப்பாளர் போடுவதிலும் வேட்பாளர் தேர்விலும் பிரதான பங்குவகிப்பதுதான் முக்கியப் புகார். கோவில்பட்டி எம்.எல்.ஏ. ராதா கிருஷ்ணன் அழகிரியைச் சந்தித்து பரபரப்பை உண்டாக்கினார்.

''முப்பத்து நான்கு வருடங்களாகக் கோவில்பட்டி குடிநீர்ப் பிரச்னைக்கான திட்டம் அமுல்படுத்தப்படாமல் இருக்கிறது. இதுபற்றி துணை முதல்வரிடம் நேரில் சொன்னவுடன், திட்டத்தைத் துரிதப் படுத்த உத்தரவிட்டுள்ளார். மக்கள் பிரச்னைகளுக்காகவே நான் முதல்வரையும், துணை முதல்வரையும், அழகிரியையும் சந்தித்தேன். இதற்காக என்னைக் கட்சியை விட்டு நீக்கினால் அதைச் சந்திக்கத் தயார்'' என்கிறார் கோவில்பட்டி ராதாகிருஷ்ணன்.



✱ பழ.கருப்பையா



✱ சத்தியமூர்த்தி

''**ப**த்து வருடங்களாக மத்திய அரசிலும், மாநில அரசிலும் அதிகாரத்தைக் கைவசம் வைத்திருக்கும் தி.மு.க.விடம் கோடிக்கணக்கில் பணம் இருக்கிறது. எந்த எம்.எல்.ஏ. வேண்டுமானாலும் தி.மு.க.வுக்கு ஓடட்டும். ஆனால், துணிச்சல் இருந்தால் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து விட்டு ஓடட்டும். இவர்கள் அ.தி.மு.க. சார்பில் நின்றதால்தான் தேர்தலில் வெற்றி பெற்றார்கள். தனிப்பட்ட முறையில் நின்றிருந்தால் டெபாஸிட்டைத் தேட வேண்டியிருந்திருக்கும். இதே போல ஆள் இழுப்பு வேலைகளில் ஈடுபட்டால் பொது ஒழுக்கத்தைக் கருணாநிதி கெடுக்கிறார் என்று தி.மு.க.வின் மேல் மக்களுக்கு எதிர்மறையான வெறுப்பு ஏற்படும். ஓடுகிறவர்கள் சசிகலா குடும்பத்தினர் மீது வீண் பழி போடுகிறார்கள்'' என்கிறார் அ.தி.மு.க.வின் இலக்கிய அணித் தலைவரான பழ.கருப்பையா.

வரும் ஜூன் மாதத்துக்குள் அ.தி.மு.க.விலிருந்தே மேலும், 20 எம்.எல்.ஏக்களை இழுத்து 'மைனாரிட்டி அரசு' என்ற நிலைமையை மாற்றி ராஜ்யசபா தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் ஒருவரைக் கூடத் தேர்ந்தெடுக்க முடியாத நிலையை உண்டாக்க சகல ஏற்பாடுகளையும் தி.மு.க. தரப்பு செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

- ப்ரியன்

வட்ட மேஜையில் இடம் பெறும் சிறப்பான கடிதத்துக்குப் புத்தகப் பரிசு என அறிவித்து இன்ப அதிர்ச்சியில் திக்குமுக்காடச் செய்துவிட்டீர்கள்!

- பி.கோபி, கிருஷ்ணகிரி-1

''தன்னை உணர்ந்து பேசுவதற்கும் தன்னை மறந்து பேசுவதற்கும் என்ன வித்தியாசம்?'' என்ற கேள்விக்கு கிரேஸியின் பதில் தூள்!

- ஏ.பி.எஸ். ரவீந்திரன், நாகர்கோயில்

மின்னல் கதைகள் கருத்து மழையில் நனைந்த சுகத்தைத் தந்தன!

- ஜி.மஞ்சரி, கிருஷ்ணகிரி-1

'ஸ்ரீலலிதா' கட்டுரையில் அம்பாள்களின் படங்கள் தத்ரூபம். கண்களில் ஒற்றிக்கொள்ளும்படி இருக்கின்றன. ஜெ.அவர்களின் கைத்திறன் வியக்க வைக்கின்றது.

- பி.வி.குப்புசாமி, திருச்சி

தி. சித்தம் இழந்து தவறான முடிவைத் தேடிக் கொண்டு, இனி வர(ா)தராஜனாய் மறைந்துவிட்ட சிப்புத் தோழரின் கறுப்பு முடிவு, வெள்ளை உள்ளங்களை ஈரப்படுத்தி விட்டது!

- அயன்புரம் த.சத்தியநாராயணன்



'மகா பெரியவர்' இளைய தலைமுறையிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதை 'அருள்வாக்கு' மூலமாக அறிந்து அகமகிழ்ந்தேன்.

- மயிலை கோபி, சென்னை-83

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது...

பாராட்டி, திட்டி, குட்டி, மிரட்டி (செல்லமா!) எவ்வளவோ கடிதங்கள் வருது வட்டமேஜைக்கு... இவங்களுக்கெல்லாம் என்ன செய்யலாம்னு ஃபீலிங் கார்னர்ல உட்கார்ந்து ஒருநாள் யோசிச்சோம். சின்ன ஐடியா ஸ்பார்க் ஆனது. உடனே ப்ளானிங் கமிஷன் வைச்சு பில்ட் அப் செஞ்சோம். இதாங்க அந்த ஐடியா:

'இதனால் சகலமானவருக்கும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், 21.03.2010 முதல் கல்கி வட்டமேஜை பகுதியில் இடம்பெறும் கடிதங்களில் சிறந்த கடிதம் எழுதி அனுப்பிய ஒரு வாசகருக்கும், ஆன்லைனில் (www.kalkionline.com) சிறந்த கடிதம் பதிவுசெய்யும் ஒரு வாசகருக்கும் தலா ரூ.250 மதிப்புள்ள கிழக்கு பதிப்பகம் வழங்கும் புத்தகங்கள் பரிசாக அளிக்கப்படும். எல்லாப் பகுதிகளும் படிங்க... நல்ல நல்ல விமர்சனங்களைக் கொடுங்க...'

அதிர்ச்சி!



பொம்மை வியாபாரம் செய்யும் ஷோபனா புதுமைப்பெண்தான்!

- சாந்தா ராஜாமணி,
சென்னை - 88

கீதா பிரேம்குமார், தார்மீக நெறிக்கு கல்கி பத்திரிகையை உதாரணம் காட்டியது மிகவும் பொருந்தும். பத்திரிகை உலகில் கல்கி தடம் பிறழாமல் தனக்கென தனிமுத்திரைப் பதித்து வருவது என் போன்ற வாசகர்களுக்கு மிகப் பெருமை.

- பிச்சை சுவாமிநாதன்,
தேதியூர்

'பெண்கள் நாட்டின் கண்கள்' என்பர். சாருலதாவின் செயல்கள் புண்களாய் அன்றோ மாறிவிட்டன.

- சி.விஜயாம்பாள், கிருஷ்ணகிரி

அடுத்தவங்க கஷ்டத்தைப் புலம்பல்னு ஒதுக்காதே. அது உனக்கு வந்தால் எப்படியிருக்கும் என்று யோசி.'' சங்கரி அப்பனின் 'மனம் திறந்து' சிறுகதையின் வரிகளில் வாழ்க்கையின் உண்மை புலப்பட்டது.

- க.இந்துமதி, நெய்வேலி

அமெரிக்கா - இந்தியா செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் எதிர்கால பாதிப்புகளை தலையங்கத்தில் படித்ததும் மனதில் கிலி ஏற்பட்டது!

- என்.சங்கரதாஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்

அமெரிக்கத் தனியார் நிறுவனங்கள், இந்திய விவசாயத் துறையில் முதலீடு செய்ய அழைக்கப்பட்டால், எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து எதிர்க்கவேண்டும் என்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். தற்போது விவசாயத்தில் எந்த லாபமும் இல்லை. அமெரிக்ககாரன் வந்தால் விவசாயிகள் கைகொடுத்தே வரவேற்பார்கள்.

- பாவலர் ரா.செல்வன், மதுரை

சுய முன்னேற்றம், மனித நேயம், சுயமரியாதை என்பதையெல்லாம் கருத்தில்கொண்டு பாடுபடும் 'மனுஷி' அமைப்பு பாராட்டத்தக்கது.

- அய்யாறு எஸ்.வாசுதேவன்,
சென்னை

ரேடியோவில் ஹேமாவதிக்குக் கச்சேரி என்றால், ஒரு வாரம் முன்னாலிருந்து வீட்டில் ஒரே ரகளையாயிருக்கும். ஹேமாவதி காலில், 'ஸிலிப்பர்' போடாமல் வெறுந் தரையில் நடக்கக் கூடாது; குளிர்ந்த நீர் சாப்பிடக்கூடாது; கொஞ்சம் தொண்டையைக் கனைத்துவிட்டால் போதும், உடனே டாக்டரை அழைத்துவர கார் பறக்கும். கழுத்தில் ஓயாமல் கம்பளி மப்ளரைச் சுற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். தப்பித்தவறி தும்மிவிட்டால், 'ஐயோ குழந்தை தும்முகிறாளே', 'ரேடியோக் கச்சேரி இருக்கிறதே!' என்று வீட்டில் எல்லோரும் தவித்துப்போவார்கள்.

இவ்வளவு சர்வஜாக்கிரதையாக ஹேமாவின் குரலைக் கவனித்துக் கொண்டு வந்த யக்ஞசாமி ஐயர், அவளுடைய உள்ளத்தைப் பற்றிக் கொஞ்சம் அலட்சியமாயிருந்து விட்டார்.

ரேடியோ நிலையத்தில் அடிக்கடி ஹேமாவதியும், எஸ்.பி.சிவனும் சந்திக்க நேரிட்டது. இந்தச் சந்திப்புகளின் காரணமாக, ஒருவருடைய இருதயத்தில் ஒருவர் இடம்பெற்று விட்டார்கள். விஷயம் முற்றி வளர்ந்து ஒருவரையொருவர் கலியாணம் செய்து கொள்வது என்று தீர்மானித்து விட்டார்கள்.

இந்தச் செய்தி புதுடில்லியிலிருந்த தென்னிந்திய சமூகம் முழுவதற்கும் தெரிந்த பிறகு, யக்ஞசாமி ஐயருக்கும் தெரிந்து விட்டது. உடனே அவர் ரௌத்ராகாரம் அடைந்து, 'புதுடில்லி ரேடியோவும் கர்நாடக சங்கீதமும் எக்கேடாவது கெட்டுப் போகட்டும்; ஹேமாவதியை இனி அங்கு அனுப்புவதில்லை!' என்று முடிவு செய்து விட்டார்.

ஸ்ரீ எஸ்.பி.சிவனுக்கு இந்த விவரம் தெரிந்தபோது அவன் வெந்நீரில் விழுந்த மீனைப் போல் துடிதுடித்தான். கடைசியாக ஒருவாறு ஐயரிடம் நேரிலேயே வந்து ஹேமாதியைத் தம் வாழ்க்கைத் துணைவியாக அருளும்படி கோரினான்.

யக்ஞசாமி ஐயர் அவனைப் பார்த்து, "நீ என்ன படித்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

"ஷேக்ஸ்பியர், மில்டன், கோல்ட்ஸ்மித், ஷெல்லி, காளிதாசன், கம்பன், தாகூர், பாரதி இவர்களுடைய கவிதைகளையெல்லாம் படித்திருக்கிறேன்" என்றான் சிவன்.

"அதைக் கேட்கவில்லை. எந்தப் பரீட்சை பாஸ் செய்திருக்கிறாய்?" என்று கேட்டார்.



"இமயமலை

''எஸ்.எஸ்.எல்.சி., இண்டர்மீடியட், பி.ஏ.யில் முதல் பார்ட், ஷார்ட் ஹாண்ட், டைப்ரைட்டிங் பரீட்சைகளில் பாஸ் செய்திருக்கிறேன்'' என்றான் சிவன்.

''வெறும் அரட்டைக் கல்லியாயிருக்கிறாய்; சொத்து, சுதந்திரம், நிலம், புலம் ஏதாவது உண்டா?'' என்று கேட்டார்.

''நிலம் புலன் ஏராளமாய் உண்டு. ஆயிரம் மைல் அகலம், இரண்டாயிரம் மைல் நீளம் உள்ள இமயமலை என்னுடையது தான்!'' என்று ஒரே போடாய்ப் போட்டான் சிவன்.

''என்னப்பா உளறுகிறாய்? இமயமலை உன்னுடையதா?''

''ஆம் ஐயா! மகாகவி பாரதியார் அப்படிப் பாடியிருக்கிறாரே, தெரியாதா? 'மன்னும் இமயமலை எங்கள் மலையே!' என்னும் வரகவி வாக்கு பொய்யாகுமா?''

அமரர் கல்கி

''ஆமாம், 'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்று பாடிய அதே பாரதியார், 'இன்னறு நீர்க் கங்கை ஆறெங்கள் ஆறே' என்றும் பாடியிருக்கிறார். ஆகையால் கங்கை ஆற்றுக்கு நேரே போய் அதில் விழுந்து விடு!'' என்றார் யக்ஞசாமி ஐயர்.

இதையெல்லாம் கதவுக்குப் பின்னாலிருந்து கேட்டுக்கொண்டிருந்த ஹேமாவதி விம்மி விம்மி அழுதாள்.

அவள் தன்னுடைய மை தீட்டிய கண்களைத் துடைத்துத் துடைத்துப் பன்னிரெண்டு கைக்குட்டைகள் பாழாய்ப் போயின. ஆனாலும் என்ன பயன்! சிவன் கங்கையில் விழுவதை அவளால் தடுக்க முடியுமா? அல்லது அப்படி விழுந்தவனைக் காப்பாற்றத்தான் முடியுமா? அவளுக்கு நீந்தத் தெரியாதே! மேலும் கங்கை நீர் மிக்க குளிர்ச்சியாக ஜில்லென்று இருக்கும் என்று அவள் கேள்விப் பட்டிருந்தாள். அப்படிப்பட்ட குளிர்ந்த நீரில் கால் பட்டால் குரல் என்னத்துக்கு ஆகும்? கர்நாடக சங்கீதம் என்ன கதி ஆவது?

- 'இமயமலை எங்கள் மலை' கதையிலிருந்து...



என்னுடையதுதான்''



மஸ்கோத் அல்வா!

திசையன்விளை அருகே முதலூர் கிராமம். முதன்முதலாக மஸ்கோத் அல்வா தயாரிப்பில், முத்திரை பதித்த ஊர். "இந்தியாவில் மஸ்கோத் அல்வா என்கிற தின்பண்டம் அறிமுகமாகக் காரணமாக இருந்தவர் எனது தகப்பனார் ஏ.ஜோசப். இப்படிப்பட்ட ஒரு தயாரிப்பை நிலைநிறுத்தும்படியாக மிகவும் பிரயாசைப்பட்டார்கள். இறைவன், பிரயாசையை வாய்க்கச் செய்தபடியால் யாவரும் விரும்பிச் சுவைக்கும்வண்ணம் மஸ்கோத் அல்வா உன்னதச் சுவையுடன் உருவாயிற்று!'' என விளக்கமளிக்கிறார் ஏ.ஜே.ஜே. மஸ்கோத் அல்வா நிறுவன உரிமையாளர் ஆன ஏ.கே.ஜெயசீலன்.

''பொதுவா அல்வா தயாரிப்புல எண்ணெய், டால்டா, நெய் பயன்படுத்துவாங்க. மஸ்கோத் அல்வா வேறுபடுறது எப்படி?'' தேங்காய்ப் பால்ல தயாரிக்கறதுதான் மஸ்கோத் அல்வா. இதுக்குனு தரமான தேங்காயைத் தேர்ந்தெடுப்பதில்தான் அல்வாவின் தரம் நிர்ணயிக்கப்படுது.

வெப்பத்தின் அளவு மஸ்கோத் அல்வாவின் தரத்தை நிர்ணயிக்கும் மற்றொரு காரணியாகும்.

இந்த அல்வாவைப் போல முந்திரி, பேரீச்சை, பாதாம் பிஸ்தா, கோதுமை அல்வா... ஆகியன இங்கே மிகவும் பிரபலம். ஒருமுறை மஸ்கோத் அல்வா ருசித்துச் சுவைத்த நபரை, மறுமுறை மறுமுறையென நினைத்தபோதெல்லாம் சுவைக்கத் தூண்டும் அளவுக்கு மயக்கும் எங்கள் மஸ்கோத் அல்வா!'' என்கிறார்.

வாசகர் யோசனை:

பெ.ராஜேந்திரன், நெல்லை

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

